The latest report of the Ministry of Human Resource Development (MHRD) also places Tamil Nadu at the top, in terms of access & equity and fifth place in infrastructure. Let us see some graphic – charts & data in the following section, that will 2demonstrate the development indices of Tamil Nadu.

Graphic 1: Percentage of Children enrolled in Private Schools



(Source: https://prayatna.typepad.com/education/datastatistics)

Graphic 2: Basic Infrastructure in Primary Schools (2015)

	Percentage of Schools with				
States	Kitchen Shed for Cooking	Drinking Water	Urinal for Boys	Separate Toilet for girls	Schools having electricity
Andhra Pradesh	55.6	93.9	99.6	99.6	91.7
Karnataka	94.8	100	98.9	99.5	96.8
Kerala	92.9	99.5	96.9	98.5	95.6
Gujarat	96.1	100	99.9	99.9	99.2
Maharashtra	90.2	99.6	98.8	99.1	90.6
Tamilnadu	96.6	100	99.6	99.8	98.6
India	79.8	95.8	96.5	97.0	52.4

(Source :The Dravidian Model ,Cambridge University Press, United Kingdom pp-58)

Graphic 3: Expenditure on Higher Education per Capita)

State	Expenditure on Higher Education as % of GSDP	Per Capita Expenditure on Higher Education (18-23 years)	Salary expenditure as a % of total expenditure
Tamil Nadu	1.50%	13,104	90%
Andhra Pradesh	0.85%	5,892	75%
Kerala	0.68%	6,639	95%
Bihar	0.55%	1,221	87%
Gujarat	0.39%	2,958	84%
Karnataka	0.21%	1,410	88%
Maharashtra	0.14%	1,091	92%



(Source: DECCAN CHRONICLE March31,2019)

Graphic 4: Female Illiteracy



(Source: https://thewire.in/education/why-tamil-nadu-doesnt-need-more-schools)

Graphic 5: Tamil Nadu Report Card – Class 10

Tamil Nadu Report Card | CLASS 10

Overall Achievement Score

National Average (Percentage)	37.8

S.No.	District Name	Mean (Percentages)	Percentage of children at basic and below basic level	Percentage of children at proficient and advance level
1	PERAMBALUR	39.4	75.0	25.0
2	ERODE	38.8	77.7	22.3
3	COIMBATORE	37.3	79.3	20.7
4	SIVAGANGAI	36.4	81.5	18.5
5	MADURAI	36.3	82.3	17.7
6	DINDIGUL	36.2	82.3	17.7
7	TIRUPPUR	35.8	84.1	15.9
8	TIRUNELVELI	35.8	82.6	17.4
9	TIRUCHIRAPPALLI	35.8	82.8	17.2
10	KRISHNAGIRI	35.6	82.7	17.3
11	NAMAKKAL	35.2	83.7	16.3
12	THANJAVUR	34.9	84.5	15.5
13	THOOTHUKKUDI	34.7	86.1	13.9
14	VIRUDHUNAGAR	34.5	85.3	14.7
15	KARUR	34.3	84.1	15.9
16	RAMANATHAPURAM	34.1	85.6	14.4
17	DHARMAPURI	33.5	86.5	13.5
18	NAGAPATTINAM	33.3	86.3	13.7
19	ARIYALUR	33.3	86.6	13.4
20	TIRUVARUR	33.2	88.0	12.0
21	PUDUKKOTTAI	33.0	88.5	11.5
22	THENI	32.8	88.4	11.6
	State/UT Average	35.4	83.8	16.2

(Source: National Achievement Survey 2021)

Graphic 6: Tamil Nadu Report Card – Class 8

Tamil Nadu Report Card | CLASS 8

Overall Achievement Score

National Average (Percentage)	41.9

S.No.	District Name	Mean (Percentages)	Percentage of children at basic and below basic level	Percentage of children at proficient and advance level
1	COIMBATORE	39.7	79.0	21.0
2	ERODE	38.7	83.6	16.4
3	PERAMBALUR	38.4	81.1	18.9
4	DINDIGUL	37.8	83.3	16.7
5	TIRUNELVELI	37.2	84.1	15.9
6	THANJAVUR	36.9	83.0	17.0
7	TIRUCHIRAPPALLI	36.1	85.9	14.1
8	TIRUPPUR	35.7	88.3	11.7
9	KRISHNAGIRI	35.7	86.4	13.6
10	MADURAI	35.5	86.9	13.1
11	THOOTHUKKUDI	35.4	87.0	13.0
12	SIVAGANGAI	35.3	88.9	11.1
13	VIRUDHUNAGAR	35.0	88.7	11.3
14	RAMANATHAPURAM	34.8	90.2	9.8
15	ARIYALUR	34.8	88.4	11.6
16	NAMAKKAL	34.1	91.2	8.8
17	KARUR	34.0	91.3	8.7
18	NAGAPATTINAM	33.5	91.2	8.8
19	TIRUVARUR	33.2	91.2	8.8
20	PUDUKKOTTAI	32.3	93.9	6.1
21	THENI	32.1	93.3	6.7
	State/UT Average	35.9	87.5	12.5

(Source: National Achievement Survey 2021)

However, the learning outcome has been a source of concern. Overall learning outcomes are relatively poor with the ministry report placing the state in the seventeenth position. (7).

On Jun 5 2022, Tamil Nadu held the top position with states of Punjab, Chandigarh and Kerala in Performance Grading Index in School Education. This survey is composed of various parameters including access, infrastructure, equity and learning outcomes. (8). But the National Achievement Survey 2021, places Tamil Nadu students' learning outcome below the national average. (9).

The advances made by the Dravidian Movement in Tamil Nadu's Educational index are solely due to the vision of our leaders of the Dravidian Stock. Gross Enrollment Ratio is an index that Tamil Nadu can proudly attribute to the Dravidian Model.

According to recent surveys, we in Tamil Nadu are also at the top in the infrastructure index, access to education and educational equity, but our learning outcome is relatively low. There is a decline in learning outcome and this must be addressed and discussed sincerely. Only then we can identify the contributing factors to the problem and resolve them.

Problems in Education:

In education, for each and every small thing, you have your point of view and you ought to know about different points of views. People with a lot of learning & knowledge are in the highest positions of office in every field. They achieved phenomenal experience through their formal learning. This is the reason that most of the scientists and leaders prefer to have their education in their mother tongue like Dr. A.P.J. Abdul Kalam, Dr. Mayilsamy Annadurai and Dr. K. Sivan. These persons develop a great vision, and that comes from their education in their mother tongue. (10).

UNESCO suggests to start teaching a second language to children above 10 years of age or approximately while they are in their 5th class. Kothari Commission (1964-66) said, "The children are well versed in their mother tongue before learning other language". (11).

"The love of one's tongue is the foremost of all loves that are required of the people born in our land. I affirm again and again that the love of the mother tongue is a must for those born in Tamil Nadu", says Periyar EVR. (12)

Mother Tongue plays a major role in building the children's cognitive ability, but unfortunately many of the today's parents are not considering it. Nowadays, people don't live for their true aspirations, but live for other people's expectations. This mindset plays a major role in deciding the medium of instruction for their children. Both the educated and uneducated parents do the same mistake. Because people want to boast to other people that their children are studying in premium schools, they go to the extent of denying their children, the ability to think, read and write in their mother tongue. Most people put their children in English medium schools from the start and some even go to the extent of choosing a foreign language instead of the mother tongue even for the language classes. As a result, children are pushed into a conflict between their observations and cognitions. They struggle

to grasp in the school, because children observe something different in daily lives. They observe their parents talking and doing social things in their mother tongue, but the school medium puts teaching & learning only in English. This leads to confusion & conflict. Children start to memorize words without understanding. It in turn reduces the children's questioning & thinking ability. Though they are getting good marks, they are not able to think on their own. They only commit everything to hard memory. This is a huge disadvantage in the formative years of school study.

Very recently, when the results of the 10th class came out in Tamil Nadu, it shocked everyone. Many students have failed in their mother tongue (Tamil) language examinations. We must address this on a top priority, because it is the mother tongue for most of the students in Tamil Nadu.

The next issue is that many students think that the Mother Language is not needed for higher studies or professional studies. There should be a change in higher studies curriculum and Tamil should be included and taught seriously. Tamil school books should be updated to reflect current & modern technologies. More teachers should be appointed for teaching Tamil or mother tongue in schools.

If a society or country needs to develop well, teachers must be in a good position in that society. In Finland, it takes a full 7 years to complete a teacher training study course. People and Government adore the teaching profession. Salary of the teachers is one of highest in the country. Whereas, a Bachelor of Education study course in Tamil Nadu in the early days was just one year and very recently upgraded to 2 years. There are lakhs of teacher training graduates in Tamil Nadu.

Also, not many people consider the issues of teachers from the private schools. Both the Government & Private school teachers play a role in the overall learning outcome in education. Many private school teachers are not satisfied, as ultimately the society judges them by their salaries. Private schools do collect a lot of money from students, but they don't pay back their teachers well. After many degree courses that teachers go through, they end up working for a meagre salary, that would not even cover their normal life expenses. Lakhs of teachers are working under such situations in schools. It affects them on a psychological plane and that in turn reflects in their teaching.

In my personal experience, when I was a student in a private school, I had some health issues and when I was trying to explain to my teachers, no one considered it. I can understand now what made them to behave in that manner. They are simply not inspired, but forced into teaching, which they do grudgingly.

If there is no bond between the teacher and the student, only machine-like learning will happen. Many students are affected every day in schools because of this multi-pronged issue. Even a biller in a grocery shop earns a five-digit salary but the private school managements pay a meagre Rs. 3000 - 8000 to their teachers. This affects the morale of the teachers, and it in turn affects the learning outcome of the students. Both the government and private school teachers should be on parity with respect to emoluments. They should also be trained in psychology & counseling, in addition to the

subject knowledge. This helps the teachers to bond with their students and boost their morale during education.

There should also be a continuous upgrade mechanism for teachers to update their subject knowledge and delivery skills. Similarly, for the students, there should be a separate talent test in addition to the regular tests to boost the applied knowledge and individuality of students. Gaps in the teaching - learning process have to be identified and bridged.

There is also a crucial problem in the evaluation system. Students were taught to obtain pass marks all the time, but in reality it is not possible to fully succeed without failing here and there. Teachers should counsel students to accept failures, learn from them and do their best the next time. There should also be good career guidance sessions at schools to expose the students to the realities of the outside professional world. Children should not be forced to fulfill the Parent's dream but to chase their own dreams with passion. Parents should also understand that every child is unique and every child's world is different.

Lately, caste divisions in the society have also become a major issue in schools. Near Cheranmadevi in south Tamil Nadu, a student was fatally attacked by a group of students belonging to another caste. To identify the Caste, colored bands are tied to Students' wrists, which is grossly inhuman and indecent. Sporting bands or ropes in specific colors have led to altercations and verbal abuses. Scuffles were witnessed inside schools and sometimes they have spilled onto the streets too. (13)

Parents should not encourage their children to promote caste, by tying caste-colored ropes on their wrists. It breeds discrimination. Social Volunteer groups like the NSS should create awareness in this area. Caste system is rooted in the young minds of students by the casteist local people in the society. Because of this education in rural areas get degenerated. Parent-Teacher Associations should play a major role to overcome such serious social issues. Parent-Teacher coordination can solve a lot of problems. Developing infrastructures like smart class rooms and other technologies should be employed in schools to further facilitate the cause of Education. There should be separate classes to teach Periyar's Rationality, Self-Respect and Social Justice in schools. Also, classes to teach environmental sciences should be promoted.

If all these issues are addressed seriously and remedial steps taken with constant inputs from teachers, parents, volunteers and the government, the state of Tamil Nadu will lead in the index of overall learning outcome, in addition to the already improved indices like gross enrollment ratio, access and infrastructure. Let's make the Overall Learning Outcome our next focus and achieve the true benefit of Education championed by the Dravidian Model in Tamil Nadu.

Bibliography:

1. Collected Works of PERIYAR E.V.R, Ninth Edition, The Periyar Self-Respect Propaganda Institution, Chennai, 2021. pp.545,546

2. Kalaiyarasan A & Vijayabaskar M,

The Dravidian Model, Cambridge University Press, United Kingdom, 2021. pp.62

3. Kalaiyarasan A & Vijayabaskar M, The Dravidian Model, Cambridge University Press, United Kingdom, 2021. pp.63

4. K.Justin Raj, Attractive Schemes of D.M.K Government in Education, JETIR Volume 5, Issue 12, December 2018, ISSN 2349 5162 pp.323

5. K.Justin Raj, Attractive Schemes of D.M.K Government in Education, JETIR Volume 5, Issue 12, December 2018, ISSN 2349 5162 pp.323,324

6. M.Varun Kumar, L.R.Tanveer Ahmed, K.Rehana Thaslim & G.Navaneeth, Various Schemes of Amma Headed Government of Tamil Nadu for student welfare promoting education, International Journal of Applied Engineering Research, Vol 10, No. 22, 2015 ISSN 09734562, pp.411,412

7. Kalaiyarasan A & Vijayabaskar M, The Dravidian Model, Cambridge University Press, United Kingdom, 2021. pp.54-58

8. The Indian Express, June 7, 2021.

9. The Times of India, May 27, 2022.

10. S.N.Anbumani, Role of the Mother Tongue in Deciding the Quality of Education - Quality In Education, Tamil Nadu Teachers Education University, Lulu Publications, United States, 2021 ISBN 978-1-6780-5466-3, pp.100

11. Education in Mother Tongue: Government's Tragedies (in Tamil), Books for Children Publication, Chennai, 2015.

12. Collected Works of PERIYAR E.V.R, Ninth Edition, The Periyar Self-Respect Propaganda Institution, Chennai, 2021. pp.549.

13. THE HINDU, June 25, 2022

About the Author:

Mr. S.N. Anbumani lives in Madurai, Tamil Nadu. He is 26 years young. He finished his B.Sc., Mathematics in the American College, Madurai and the Bachelor of Education (Special Education - Intellectual Disability) in C.S.I College of Education. S.N. Anbumani has written three books - two in English and one in Tamil. The Books are 1) Lively Nature, 2) Emotions of the Special Needs Children: A Discussion and 3) *ஒற்றைக் கையில் என் மூக்குக்கண்ணாடி ஏந்தி...!* (Tamil Poetry). He has written an article: 'Role of the Mother Tongue in Deciding the Quality of Education' in the Journal 'Quality in Education' published by Lulu Publications, United States of America.

■

"There is substantial linguistic evidence favoring Dravidian authorship of the Indus Civilization.

The evidence includes:

- The presence of Dravidian loanwords and loan translations in the Rig Veda.
- The substratum influence of Dravidian on Indo-Aryan as seen in phonological changes like introduction of retroflex sounds, morphological changes like switch-over from inflexion to post-fixation, and near-identical syntactical structures moving Indo-Aryan closer to Dravidian than to Indo-European languages.
- Computer analysis has shown that the Indus language had only suffixes (as in Dravidian) and no prefixes (as in Indo-Aryan) or infixes (as in Munda).

The Indus religion as revealed by pictorial depiction on seals and sealings included worship of a buffalo-horned male god, mother-goddesses, the pipal tree, the serpent and possibly the phallic symbol, all of which are known to have been derived from the aboriginal populations".

(Interpreting the Indus Script: The Dravidian Solution Convocation Address. Dravidian University – Feb 26 2015, Kuppam. Andhra Pradesh, Union of India).

Prof. Dr.IRAVATHAM MAHADEVAN

National Fellow of the Indian Council of Historical Research.

The Essence of Social Justice.

- “If a larger country oppresses a smaller country, I’ll stand with the smaller country.
- If the smaller country has a majoritarian religion that oppresses minority religions, I’ll stand with minority religions.
- If the minority religion has caste and one caste oppresses another caste, I’ll stand with the caste being oppressed.
- In the oppressed caste, if an employer oppresses his employee, I’ll stand with the employee.
- If the employee goes home and oppresses his wife, I’ll stand with that woman.

Overall, oppression is my enemy!”

Periyar E.V.R

செருமானிய மொழிபெயர்ப்பில் திருக்குறள்

(கார்ல் கிரவுல் மொழிபெயர்ப்பு)

முனைவர். க. சுபாஷிணி,

தமிழ் மரபு அறக்கட்டளை, செருமனி

Abstract:

The trade activities initiated by the Portuguese traders and the religious activities that took place in the 16th to 18th CE in the South Indian costal area had created substantial interest among the English to venture in trade activities in South India. The enduring success of the English East India Company has created deep interest to the Danish Kingdom to focus on establishing Trade in East, particularly in the Tamil Nadu coastal area. The Danish East India company was formed and it ventured in trade in the East. Not limiting only to trade, the King had interest to extend the Lutheranian religion in this geography. As a result of this, Lutheran priests arrived in Tharangampadi to spread the gospel among the local people in Tamil Nadu. The priests learnt to read and write Tamil language. They mastered many Tamil literatures and among them is Thirukkural. This paper deals with the efforts taken in translating Thirukkural in German Deutsch language, particularly looking at the efforts of Dr. Karl Graul.

முன்னுரை:

உலகப்பொதுமறை என அழைக்கப்படும் சிறப்புடன் திகழ்வது திருக்குறள். தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்த தமிழ்ப் படைப்புக்களில் தலையாய நூலாகத் திகழ்கின்றது திருக்குறள். உலகில் புழக்கத்தில் உள்ள பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகவும் இது திகழ்கின்றது. ஐரோப்பிய மொழிகளில் ஒன்றான ஜெர்மானிய மொழியில் (டோய்ச்) திருக்குறள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு ஜெர்மானிய மொழி பேசும் மக்கள் மத்தியில் இந்த நூல், தமிழ் இலக்கியத்துக்கு ஓர் அறிமுகமாகிய வரலாற்றுச் செய்தியை விவரிப்பதாகவும் அதில் குறிப்பாக டாக்டர். கார்ல் க்ரவுல் எழுதிப் பதிப்பித்த திருக்குறள் மொழிபெயர்ப்பு பற்றிய செய்திகளைத் தருவதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

ஆய்வுப் பின்புலம்:

தமிழக வரலாற்றையும் தமிழர் பண்பாட்டு விசயங்களையும் பற்றிய ஆய்வுகளில் பொதுவாக பாண்டிய, சேர,

சோழ, நாயக்க, சாளுக்கிய மன்னர்களின் வரலாறுகளை விவரித்து இவற்றோடு நிறுத்திக் கொள்ளும் ஆய்வுப் போக்கு நிலவுகின்றது. தமிழக நிலப்பரப்பில் ஐரோப்பியர்களின் வருகையும், அது ஏற்படுத்திய சமூக, சமய, வாழ்வியல் சார்ந்த மாற்றங்களும் பெருவாரியாக ஆய்வு நோக்கிலிருந்து ஒதுக்கப்படுவதை அல்லது கண்டு கொள்ளாமல் புறந்தள்ளப்படுவதைக் காண்கின்றோம்.

கடந்த அறுநூறு ஆண்டுகளில் தமிழர் வாழ் நிலத்தில் நிகழ்ந்த பண்பாட்டு மாற்றங்களை விவரிக்கும் போது சில செய்திகளை மேலெழுந்தவாரியாகச் சொல்லிவிட்டு அவற்றின் அடித்தளமாக அமைந்திருக்கும் விசயங்களை ஆய்வுப் பொருளாகக் காணாமல் செல்கின்ற போக்கினால் வரலாற்றின் ஒரு பகுதி கண்டுகொள்ளப்படாமல் செல்கின்ற நிலையைக் காண்கின்றோம். அதில் முக்கியமாக ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயங்களாக உள்ளவை இன்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் நிகழ்ந்த ஐரோப்பியர்களின் வணிகம், சமயம் தொடர்பான நிகழ்வுகளும் அதன் தாக்கத்தால் தமிழ்நாட்டுக்கு வெளியே ஏற்பட்ட தமிழ் மொழி பரவலாக்கம் தொடர்பான சில நிகழ்வுகளுமாகும்.

ஓலைச்சுவடிகளில் தமிழ் இலக்கண இலக்கிய, அறிவியல், சமூக செய்திகளைக் குறித்து வைக்கும் போக்கிலிருந்து அச்சு இயந்திரத்தின் அறிமுகத்தோடு அச்சுப்பதிப்பாக நூல்களை வெளியிடும் மாற்றம் ஐரோப்பியரின் தமிழக வருகையினால் நிகழ்ந்த ஒரு சம்பவம். இது தவிர்க்கப்பட முடியாத படிப்படியான சமூகப்புரட்சியைத் தமிழக நிலப்பரப்பில் ஏற்படுத்தியது (மோ.நோவிஸ் விக்டோரியா, பக். 34).

தமிழ் நூல்கள் அச்சுப்பதிப்பாக்கம் என்பது போல, தமிழ் இலக்கிய இலக்கணங்களின் ஐரோப்பிய மொழிபெயர்ப்பு தொடர்பான நடவடிக்கைகளும் பேசப்படுவது என்பது ஆய்வுலகில் குறைவாகவே உள்ளது. குறிப்பிடத்தக்க மொழி பெயர்ப்புப்பணிகள், அதாவது தமிழிலிருந்து ஐரோப்பிய மொழிகளுக்கு கி.பி.17ம் நூற்றாண்டு தொடங்கி நடந்தன என்பதும், அதில் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் மிக முக்கியமாக பலரது கவனத்தை ஈர்த்த ஒரு நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது *(C.S.Mohanavelu, pg.38)* . ஐரோப்பிய மொழிகளில் திருக்குறள் வெளிவந்துள்ளது எனப் பெருமைப்படுதலோடு நிறுத்திக் கொள்வதிலேயே பெரும்பாலோர் இருந்து விடும் நிலை தெரிகிறது. ஆயின், எவ்வகையில் இந்த மொழிபெயர்ப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, எவ்வகையான தாக்கத்தை இந்த மொழிப்பெயர்ப்பு நூல்கள் வெளிவந்த போது ஐரோப்பிய நாடுகளில் அவை ஏற்படுத்தின என்பது போன்றவற்றை ஆய்வு செய்வது முன்னெடுக்கப்படாமலேயே உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு திருக்குறளுக்கான ஜெர்மானிய டோய்ச் மொழி பெயர்ப்பு பற்றிய பின்புலத் தகவல்களை ஆராயும் ஒரு ஆய்வாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

ஆய்வுமுறை:

மேற்குறிப்பிட்டுள்ள நோக்கத்தைச் செயல்படுத்தும் வகையில் ஜெர்மானிய டோய்ச் மொழியில் அமைந்த ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர் அவர்களின் திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலும் *(August Friedrich Cammerer, Des Thiruvalluver - Gedicht und Denksruche, Aus der Tamulischen Sprache uebersetz von August Friedrich Cammerer, 1803)* டாக்டர். கார்ல் கிரவுல் அவர்களின் ஜெர்மானிய

டோய்ச் மொழியில் அமைந்த திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலும் *(Karl Graul, Der Kural des Tiruvalluver, Ein Gnomisches Gedicht über die Drei strebeziele des Menschen, 1856)* முழுமையாக இந்த ஆய்விற்கான அடிப்படைத் தரவுகளாக எடுத்து ஆராயப்பட்டன. இதனுடன் தமிழகத்தின் சுவடிப்பதிப்பியல் தொடர்பான ஆய்வு நூல்கள் அடிப்படை வாசிப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த ஆய்விற்கு உதவும் வகையில் அமைந்த, கி.பி.17ம் நூற்றாண்டில் டென்மார்க் மற்றும் ஜெர்மானிய வணிக முயற்சிகள் மற்றும் அதோடு தொடர்புடைய செய்திகளை வழங்கும் சில நூல்களும் இந்த ஆய்விற்குத் துணை நூல்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

ஜெர்மானிய லூதரன் பாதிரிமார்களின் தமிழக வருகை:

இந்திய நிலப்பரப்பில் லூதரன் பாதிரிமார்கள் சபையின் சமய நடவடிக்கைகள் 17ம் நூற்றாண்டு தொடங்கி 18ம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டங்களில் நிகழ்ந்தன. இரண்டு லூதரேனிய கிருத்துவ பாதிரிமார்களின் தமிழகத்துக்கான வருகையே இதற்கு தொடக்க நிலையை உருவாக்கிய வரலாற்று நிகழ்வாக அமைகின்றது.

ஜெர்மனியைத் தலைமையிடமாகக் கொண்ட லூதரன் கிருஸ்துவ மத பாதிரிமார்கள் மதம் பரப்பும் நோக்கத்துடன் இந்தியாவின் தெற்குப் பகுதிக்கு வருவதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே கத்தோலிக்க பாதிரிமார்கள் தென்னிந்தியப் பகுதிகளுக்கு வருகை தந்து தென்தமிழகத்தில், குறிப்பாகத் தூத்துக்குடிப் பகுதியில் கத்தோலிக்கக் கிறிஸ்துவ மதம் பரவ ஆரம்ப நிலைப் பணிகளை மேற்கொண்டனர் (மோ. நோவிஸ் விக்டோரியா, பக்.8) இது படிப்படியாக வளர்ந்து தென் தமிழகத்தின் திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி, மதுரை போன்ற பகுதிகளில் போர்த்துக்கல், இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து கத்தோலிக்கப் பாதிரிமார்கள் தமிழகம் வந்து தமிழ் கற்று உள்ளூர் மக்களிடையே கிருத்துவ சமய நெறியைப் பரப்புதல், பள்ளிக்கூடங்களை உருவாக்கி தமிழகத்தின் பல்வேறு தரப்பட்ட மக்கள், குறிப்பாக அடித்தட்டுச் சமூக மக்கள் கல்வி வாய்ப்புக்களைப் பெறும் வகையிலான சமூக மாற்றங்கள் நிகழத்தொடங்கியிருந்தன. இத்தகைய முயற்சிகளில் முக்கியமானவர்களாக ஹென்றிக்ஸ் ஹென்றிக்ஸ் அடிகளார், கோன்ஸ்டண்டின் ஜோசப் பெஸ்கி (வீரமாமுனிவர்), நோபிலி பாதிரியார் போன்றோரைக் குறிப்பிடலாம். (க.சுபாஷிணி, பக்.12)

இத்தகைய முயற்சிகளில் டென்மார்க் அரசும் முனைப்புக் காட்டத்தொடங்கியது. 1612ம் ஆண்டில் டேனிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனி தஞ்சாவூரின் தரங்கம்பாடிப் பகுதியில் ஒரு சிறு பகுதியைப் பெறும் உரிமையை ஆண்டுக் கட்டணமாக இந்திய ரூ.3111 செலுத்திப் பெற்றனர். அச்சமயம் தஞ்சையை ஆண்டு கொண்டிருந்த ரகுநாத நாயக்க மன்னரின் (இவருக்கு அச்சுதப்ப நாயக்கர் என்ற பெயரும் உண்டு) அனுமதியோடு இந்த உரிமை பெறப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த அரச ஆணையின் படி 19.11.1620ம் நாள் தரங்கம்பாடியில் டென்மார்க்கின் டேனிஷ் கொடி ஏற்றப்பட்டுத் தரங்கம்பாடியில் டேனிஷ் தொடர்பு உறுதி செய்யப்பட்டு அதிகாரப்பூர்வமாக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக டேனீஷ் வர்த்தகர்கள் தரங்கம்பாடி வந்திறங்கினர். இவர்களுக்கு வர்த்தக முன்னோடிகளாக அச்சமயம் இங்கிலாந்தின் ஈஸ்ட் இந்தியா கம்பெனி அமைந்திருந்தது.

தென் இந்தியாவின் கிழக்குக் கரை நகர்களில் வர்த்தகம் செய்வது என்பது மட்டும் டேனிஷ் அரசின் நோக்கமாக அமைந்திருக்கவில்லை. வர்த்தகத்தோடு மதம் பரப்பும் சேவையையும் செய்ய வேண்டும் என்பதை டேனிஷ் மன்னர் விரும்பியதால் 18ம் நூற்றாண்டின் ஆரம்பக் காலகட்டத்தில் தமிழகத்தின் தரங்கம்பாடிக்கு டேனிஷ் அரசஆணையுடன் முதல் அதிகாரப்பூர்வ மதம் பரப்பும் சமயக் குழு ஒன்று கிபி 1706இல் தமிழகம் வந்திறங்கியது. இதில் இடம் பெற்றவர்கள் ஜெர்மானிய பாதிரிமார்கள் சீகன்பால்கும் ப்ளெட்சோவும் (C.Mohanavelu, pg 26)

மதம் பரப்பும் பணிக்கு இவர்களுக்கு அடிப்படைத் தேவையாக இருந்தது தமிழ் மொழித்திறன். தமிழ் மொழியைக் கற்க ஆரம்பித்த பாதிரியார் சீகன்பால்க், லூத்தரன் பாதிரிமார்கள் தமிழ்மொழியைக் கற்க உதவும் வகையில் இலக்கண நூற்களை எழுதினார்கள். பல தமிழ் இலக்கிய நூல்களைத் தாம் கற்று, ஜெர்மானிய மக்கள் தமிழ் கற்க உதவும் வகையில் சொற்பொருள் அகராதிகளை உருவாக்கினார். அவர் வாசித்த இலக்கிய நூல்களில் திருக்குறளும் அடங்கும் என்ற செய்தியைச் சீகன்பால்கின் கையெழுத்துக் குறிப்புக்களிலிருந்து அறிய முடிகின்றது. (Jeyaraj, Daniel and Young, Richard Fox 2013, p. 240 - 241.) அப்போதைய நிலையில் திருக்குறளின் லத்தீன் அல்லது வேறு ஐரோப்பிய மொழி பெயர்ப்பு உருவாகவில்லை. ஆகவே சீகன்பால்க அவர்கள் கற்ற திருக்குறள் தமிழ் ஓலைச்சுவடி நூல்களே எனக் கொள்ளலாம். முதல் லத்தின் மொழி பெயர்ப்பு வீரமாமுனிவர் அவர்களால் 1730, அதாவது சீகன்பால்க் அவர்கள் தமிழகம் வந்து ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்குப் பின்னரே உருவாக்கப்பட்டது. ஆயினும் கூட இந்த லத்தீன் மொழிபெயர்ப்பு முழுமை பெற்ற எல்லா குறட்பாக்களையும் உள்ளடக்கிய ஒரு மொழிபெயர்ப்பு அல்ல (Graul, 1856 P.XVII).

ஆரம்பகால திருக்குறள் மொழிபெயர்ப்புகள்:

திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் 1812ம் ஆண்டில் திருக்குறள் மூலபாடம் என்னும் நூலை அச்சு வடிவில் பதிப்பித்தார் என்று அறிகின்றோம் (மாதவன், 2000, ப.70) இதற்குப் பின்னணியாக இருந்து உதவியவர் ஆங்கிலேய காலணித்துவ ஆட்சியில் அதிகாரியாக இருந்த எல்லிஸ் அவர்கள். தமிழ் மொழியில் தீவிர பற்றும் ஆர்வமும் கொண்டு நல்ல புலமை பெற்ற ஆங்கிலேயரான அறிஞர் எல்லிஸ் (F.W.Ellis) அவர்கள் அதே 1812ம் ஆண்டில் ஆங்கிலத்திலும் அதன் பின்னர், ப்ரென்சு, ரசிய மொழி, ஸ்வீடிஷ் மொழி, ஜெர்மன் மொழி ஆகிய பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடும், பணியை மேற்கொண்டிருந்தார். இதற்கு முன்னரே போர்த்துக்கீசியரான வீரமாமுனிவர் (Beschi) அவர்கள் 1730 வாக்கில் முதல் இரண்டு பகுதிகளை மட்டும் லத்தீன் மொழியில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்டிருந்தார் (Graul, 1856 P.XVII). வீரமாமுனிவரின் மொழிபெயர்ப்பின் அடிப்படையில் ஐரோப்பிய சூழலுக்கு லத்தீன் மொழி வாயிலாக திருக்குறள் அறிமுகம் பெற்றிருந்தது என்பதை நாம் அறிகின்றோம்.

ஆக, நமக்குக் கிடைக்கின்ற செய்திகளின் அடிப்படையில் திருக்குறள் ஓலைச்சுவடியிலிருந்து அச்சுவடிவம் பெற்றது லத்தின் மொழியில் வீரமாமுனிவர் செய்த மொழிப்பெயர்ப்புப் பதிப்பிலிருந்து, அதாவது 1730ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகின்றது எனக் கருதலாம்.

செருமானிய மொழியில் திருக்குறள்:

முதன் முதலில் ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாக நமக்குக்

கிடைப்பது ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர் என்ற ஜெர்மானிய லூத்தரன் மதபோதகர் *(August Friedrich Cämmerer)* அவர்கள் மொழிபெயர்த்து முன்னுரையும் தந்து எழுதிய நூலாகும் *(Graul, 1856 P.XVII)*. எல்லிஸ் அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு வெளிவருவதற்கு முன்னரே ஜெர்மான் மொழியில் இந்த நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த நூல் *1803*ம் ஆண்டு ஜெர்மனியில் நூரன்பெர்க் *(Nurnberg)* நகரில் அச்சாக்கம் செய்யப்பட்டது. *(பின்னினைப்பு 1. – புகைப்படம் நூலின் அட்டைப்படத்தைக் காட்டுகின்றது. இந்த நூலை தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகம் 2019ஆம் ஆண்டு முனைவர்.க.சுபாஷிணியின் ஆங்கில முன்னுரையோடு மறுபதிப்பாக புதிய வடிவில் வெளியிட்டுள்ளது)*

இந்த நூலின் பெயர் *Das Thiruvalluvar Gedichte und Denksprueche* என்பதாகும். இந்த நூலைப் பற்றிய விரிவான அறிமுகம் ஒன்று *1807*ம் ஆண்டு ஜெர்மனியின் நூரன்பெர்க் *(Nurnberg)* நகரில் வெளிவந்த இலக்கிய நாளேடு ஒன்றில் *(Allgemeine Literatur Zeitung, 29.June 1807)* பதிவாகியுள்ளது என்ற செய்தியையும் அறிய முடிகின்றது. *(பின்னினைப்பு 2. – புகைப்படம் நாளிதழின் செய்தியைக் காட்டுகின்றது)* . இந்த நாளேட்டில் ஜெர்மனியிலிருந்து மதம் பரப்பும் பணிக்காக டேனீஷ் அரசின் ஆதரவில் தமிழகத்தின் தரங்கம்பாடிக்குச் சென்ற லூத்தரன் பாதிரிமார்களின் இலக்கியத் தேடல்களை மையப்படுத்தி விவரிக்கும் செய்தியாக இச்செய்தி அமைந்துள்ளது. அதில் சிறு அறிமுகத்துக்குப் பின்னர் இந்த நூலைப்பற்றிய விளக்கம் வருகின்றது. குறள்களின் மொழி பெயர்ப்பு, திருவள்ளுவர் பற்றிய செய்திகள் என்ற வகையில் திரு.காமரர் அவர்கள் படைத்திருக்கும் இப்படைப்பை விவரிக்கின்றது இந்த இலக்கிய நாளேட்டுச் செய்தி.

Das Thiruvalluvar Gedichte und Denksprueche என்ற இந்த நூல் முழுமையாக ஜெர்மானிய மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. நூலில் காமெரர் அவர்கள் முதலில் தனது அறிமுக உரையை பதிகின்றார். தமிழகத்தின் தெய்வ வழிபாடுகள், சமூக நிலைகள், இலக்கியம் என சில தகவல்களை இப்பகுதியில் குறிப்பிடுகின்றார். அடுத்து திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையில் சில தகவல்களைக் குறிப்பிடுகின்றார். அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த திருவள்ளுவரைப் பற்றிய கதைகளைக் குறிப்பிட்டுத், திருவள்ளுவரை இந்த நூலில் அறிமுகம் செய்கின்றார். அதன் பின் *1330* குறள்களுக்குமான மொழி பெயர்ப்பு இந்த நூலில் பத்துப் பத்தாக வரிசையாக வழங்கப்பட்டுள்ளன.

கார்ல் க்ரவுல் ஜெர்மானிய மொழிபெயர்ப்பு:

காமெரர் அவர்களுக்குப் பின் தரங்கம்பாடி வந்த ஜெர்மானிய அறிஞர் கார்ல் க்ரவுல் அவர்கள் *Der Kural des Tiruvalluver* என்ற நூலை எழுதி வெளியிட்டார். இது கிழக்கு ஜெர்மனியின் லைப்ஸிக் *(Leipzig)* நகரில் *1856*ம் ஆண்டில் நூல் வடிவம் கண்டது. *(இந்த நூலை தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகம் 2019ஆம் ஆண்டு முனைவர்.க.சுபாஷிணியின் ஆங்கில முன்னுரையோடு மறுபதிப்பாகப் புதிய வடிவில் வெளியிட்டுள்ளது)*.

இந்த நூலின் பெயரின் தமிழாக்கம் " திருவள்ளுவரின் குறள் " என்பதாகும். *216* பக்கங்கள் கொண்ட இந்த நூலில் க்ரவுல் அவர்கள் தனது முன்னுரை, பரிமேலழகரின் உரை, அதற்கான தனது முன்னுரை எனத் தொடங்குகின்றார். திருக்குறளின் நேரடி மொழி பெயர்ப்பு என்றில்லாமல் நல்லெண்ணங்கள், நற்கருத்துகள், அரசரின் மாண்பு, பண்பற்ற இச்சையின் பண்பு என்பது பற்றித் திருக்குறள் கூறும் கருத்தை முன் வைத்து இந்த நூலைப் படைத்திருக்கின்றார்.

காதலில் களவு, பெற்றோர் சம்மதத்துடனான திருமணம் என்ற தகவல்களையும் குறிப்பிட்டுத் திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு என இறுதிப்பகுதியையும் சேர்த்து இந்த நூலை உருவாக்கியிருக்கின்றார். டாக்டர்.க்ரவுல் அவர்கள் தமிழ் இலக்கணத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திருக்குறள்ளுக்கான உரை எழுதியோராகப் பன்னிரெண்டு உரையாசிரியர்களின் பெயர்களைத் திரு. க்ரவுல் அறிந்திருந்தார். அவர்களுள் தருமர், மணக்குடைவர், தாமத்தர், பரிதி, திருமலையார், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் ஆகியோரின் பெயர்களை அவர் தம் நூலில் சுட்டிக் காட்டி விவரிக்கின்றார். எல்லிஸின் *(F.W.Ellis)* ஆங்கில மொழிபெயர்ப்பைக் க்ரவுல் வாசித்திருந்தார். திருக்குறள் நூலின் முதல் பாலில் பதின்மூன்று அத்தியாயங்களை எல்லிஸ் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததாகக் குறிப்பிடுகின்றார் க்ரவுல். இந்த ஆங்கில மொழிபெயர்ப்பில் ஆங்கிலத்தில் விளக்க உரையையும் இணைத்து வழங்கியிருப்பதையும், அதில் இலக்கண ஆய்வுகளையும் இணைத்து வழங்கியுள்ள செய்தியையும் குறிப்பிடுகின்றார்*(Graul, 1856 P.XVII)*.

இந்த நூலின் அமைப்பைப் பற்றி ஆராய்வதும் இந்த மொழிபெயர்ப்பினைப் பற்றிய விரிவான விளக்கம் பெறுவதற்கு உதவும். இந்த நூலின் முழுமையான பெயர் *Der Kural des Tiruvalluver, Ein Gnomisches Gedicht über die Drei strebeziele des Menschen* என்பதாகும். இதனை, திருவள்ளுவரின் திருக்குறள்– மனித வாழ்வின் (மூன்று) இலக்குகளை நோக்கிய போராட்டங்களைப் பற்றிய செய்யுட்கள்', எனத் தமிழில் மொழிபெயர்க்கலாம். நூலின் முதல்பக்கத்தில் உள்ள இந்தத் தலைப்பின் கீழ் இதன் மொழிபெயர்ப்பும் விளக்கமும் வழங்கியவர் கார்ல் க்ரவுல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நூலை இவர் எழுதி வெளியிட்ட சமயத்தில் இவர் வகித்த பதவிகளைப் பற்றிய செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது. அதாவது ஜெர்மனியின் லைப்ஸிக் நகரின் லூத்தரன் மிஷனரி அமைப்பின் இயக்குனராகவும், கீழ்த்திசை நாடுகளின் வரலாற்று இறையியல் அமைப்பின் உறுப்பினராகவும் தாம் இருந்ததை நூலின் முகப்பில் *Director der Evangel, Luther. Mission zu Lepzig, Mitglid der Deutschen Morgenlandischen und der Historisch-Theologischen Gesselschafft* என்றும் குறிப்பிட்டு இந்த நூலைப் பதிப்பித்திருக்கின்றார் டாக்டர்.க்ரவுல். இந்த நூல் ஒரே காலகட்டத்தில், அதாவது *1856*ம் ஆண்டு ஜெர்மனியின் லைப்ஸிக் நகரிலும், *Dörffling & Franke* பதிப்பகத்தாரால் லண்டனிலும் *Williams & Norgate* பதிப்பகத்தாராலும் பதிப்பிக்கப்பட்டது. *(பின்னினைப்பு 3. – புகைப்படம் நூலின் முகப்புப்பக்கத்தைக் காட்டுகின்றது)*

நூலின் தொடக்கமாகப் பதிப்பாசிரியர் உரையை வழங்கியிருக்கின்றார் க்ரவுல். இது இரண்டு பக்கங்கள் மட்டுமே கொண்ட சிறிய விளக்க உரை. இதில் "ஜெர்மானியர்களுக்குத் தான் வழங்கும் செய்தியாகத் தமிழகத்தில் தான் கற்ற தமிழ்மொழியில் உள்ள ஒரு நல்லொழுக்க நூலை ஜெர்மானிய மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் இந்த நூலைத் தாம் எழுதியிருப்பதாகக் " குறிப்பிடுகின்றார். தமிழகத்தைக் குறிப்பிடும் போது தமிழர்களின் நாடு, அதாவது *Tamulenlande* எனக் குறிப்பிடுவதைக் காண்கின்றோம்.

இதற்கடுத்தாற் போல நூலுக்கான ஒரு அறிமுக உரை வருகின்றது. இப்பகுதியில் முக்கியமாக தமது சமகாலத்து ஏனைய

மொழிபெயர்ப்புக்களைப் பற்றி டாக்டர். க்ரவுல் குறிப்பிடுகின்றார். இந்த முகவுரை பத்துப்பக்கங்களுக்குஅமைக்கப்பட்டுள்ளது.

ஜெர்மானிய மொழியில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பிரஞ்சு மொழியிலும் திருக்குறள் மொழிபெயர்ப்பு இதே காலகட்டத்தில் நிகழ்ந்திருக்கின்றது. மிகத் தரமானஆனால்முழுமையடையாதஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்று இங்கிலாந்தைச் சார்ந்த ஆங்கிலேய பாதிரியாராக இந்தியாவின் மெட்ராசில் பணியில் இருந்த ரெவரண்ட் ட்ரூ *(Rev. W.H.Drew)* அவர்களால் எழுதப்பட்டது. இந்த நூலின் பெயர் *The Cural of Tiruvalluver, First Part, with the Commentary of Parimelaragar*. இந்த நூலில் *24* குறள்களுக்கான விளக்கமும் பொருளும் மொழிபெயர்ப்பாக வழங்கப்பட்டுள்ளன. இந்த நூல் *1852*ல் வெளிவந்தது. *(Graul, 1856 P.XVIII)*. ஆங்கிலேயர்களைப் போல பிரெஞ்சுக்காரர்களும் திருக்குறள் மொழி பெயர்ப்பில் ஆர்வம் காட்டினர் என்பதையும் மறுக்க முடியாது. திரு. ஏரியல் *(Mr.Ariel) Journal Asiatique* என்ற இதழில் தொடராகத் திருக்குறள் மொழி பெயர்ப்புக்களை எழுதி அவை *1847, 1848* மற்றும் *1852*ம் ஆண்டுகளில் வெளிவந்தது. இந்த கட்டுரைகளில் பிரஞ்சுமொழியில் திருக்குறளின் முதற் பாலும் இரண்டாம் பாலும் மொழி பெயர்க்கப்பட்டு விளக்கத்துடன் வழங்கப்பட்டிருக்கின்றது *(Graul, 1856 P.XVIII)*. காமத்துப்பால் பகுதியை திரு.ஏரியல் தமது மொழி பெயர்ப்பில் இணைத்துக் கொள்ளவில்லை. ஆனால் டாக்டர்.க்ரவுல் தனது மொழிபெயர்ப்பில் முப்பால் குறட்பாக்கள் அனைத்தையும் உள்ளடக்கிய மொழிபெயர்ப்பாக இதனை வெளியிட்டிருப்பது மிகச் சிறப்பு.

இதனைத் தொடர்ந்து வரும் பகுதி பரிமேலழகர் உரையைப் பற்றிய ஒரு விளக்கமாக அமைகிறது. ஏனைய உரையாசிரியர்களைப் பற்றி அறிந்திருந்தாலும் திருக்குறள் வாசிப்பில் பரிமேலழகரின் உரையைத் துணையாகக் கொண்டு அதன் செய்யுட்களைப் புரிந்து கொள்ள முயன்றிருக்கின்றார் டாக்டர். க்ரவுல். நல்லொழுக்கம், நற்பண்புகள், காமம் மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான வழி ஆகியவையே திருக்குறளின் முக்கியச் செய்திகள் என்ற வகையில் குறிப்பிட்டுத், தனது புரிதலின் அடிப்படையிலான ஒரு விளக்கத்தை டாக்டர்.க்ரவுல் இரண்டு பக்கங்களில் அமைத்திருக்கின்றார்.

இதன் தொடர்ச்சியாக முப்பாலுக்குமான ஜெர்மானிய டோய்ச் மொழியில் அமைந்த மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொரு செய்யுளின் நேரடி மொழி பெயர்ப்பாகவும் சில கடினமான பொருள் கொண்ட சொற்களுக்கு மேலதிக விளக்கங்களை வழங்கிய தன்மையுடனும் அமைக்கப்பட்டுள்ளன.

இறுதிப்பகுதியாக இடம் பெறுவது திருவள்ளுவர் வரலாறு. திருவள்ளுவரைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்ட கதைகளில் இரண்டு கதைகளை எடுத்துக் கொண்டு அவை இரண்டையும் திருவள்ளுவர் வரலாறு என்று இப்பகுதியில் மொழிபெயர்ப்பு செய்திருக்கின்றார் டாக்ட.க்ரவுல்.

முதலில் வரும் திருவள்ளுவர் வரலாறு வேட்டைக்காரமுதலியார் *(Graul, 1856 P.185)* என்பவர் எழுதிய நூலைத்தழுவிய கதை. இரண்டாவதாக வருகின்ற திருவள்ளுவர் வரலாறு சரவணப்பெருமாள் ஐயர் *(Graul, 1856 P.189)* என்பவர் எழுதிய திருவள்ளுவர் வரலாறு என்ற கதை. இவை இரண்டுமே திருவள்ளுவரின் வரலாற்றைப் புனைக்கதையாக்கி அதீத கற்பனைகளையும் பார்ப்பனீய வர்னக் கோட்பாட்டின் உயர்

தன்மையை வெளிக்காட்டும் வகையில் புனையப்பட்ட கட்டுக் கதைகளின் அடிப்படையில் திருவள்ளுவரை அடையாளப்படுத்த உருவாக்கப்பட்ட கதைகளாகும். எனினும் திருக்குறளை எழுதிய திருவள்ளுவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றை தனக்கு அக்காலகட்டத்தில் கிடைத்த நூலாதாரங்களின் துணையுடன் டாக்டர்.க்ரவுல் அவர்கள் இந்த நூலில் வழங்க முற்பட்டிருக்கின்றார் என்ற அளவிலேயே நூலில் அமைந்திருக்கும் இந்தப் பகுதியைக் காணவேண்டியுள்ளது.

மதிப்பீடு:

ஜெர்மனி மட்டுமன்றி ஜெர்மன் மொழியான டோய்ச் மொழி பயண்பாட்டில் உள்ள ஏனைய நாடுகளான டென்மார்க், சுவிஸர்லாந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி போன்ற நாடுகளிலும் திருக்குறளுக்கான மொழி பெயர்ப்புக்களாக இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இரு ஜெர்மானிய மொழிபெயர்ப்பு நூல்களும் பொது மக்கள் வாசிப்பிற்கும், ஆசிய நாடுகளின் இலக்கியங்களை ஆராய விரும்புவோர் மத்தியிலும் அறிமுகமாக வழி ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் இந்த மொழி பெயர்ப்பும் இவற்றில் உள்ள வரலாற்றுத் தகவல்களும் முழுமையான பார்வையைத் தரும் வகையில் அமைந்துள்ளனவா என்பது கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

உதாரணமாக, தமிழகத்திற்கு 16ம் நூற்றாண்டு இறுதி தொடங்கி லூத்தரன் மதம் பரப்பும் பணிக்காக ஜெர்மனியிலிருந்து கடல்வழிப்பயணம் மேற்கொண்டு வந்து சேர்ந்த பாதிரிமார்கள் தமிழ் கற்ற சூழலைக் கவனிக்காது ஒதுக்கிவிட முடியாது. அவர்களது அக்காலச் சூழலில் தமிழ் சமூக கட்டமைப்பில் உயர்சாதி என அழைக்கப்படும் சமூகத்து மக்களிடம் மட்டுமே தமிழும் தமிழ் இலக்கியமும் கற்கக்கூடிய சூழல் இருந்தமையால் திருவள்ளுவரைப் பற்றிய நிலைப்பாட்டை அதுகாறும் கட்டமைக்கப்பட்ட பார்வையில் வைத்து மட்டுமே இந்த மொழிப்பெயர்ப்பில் சில பகுதிகளில் விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது. இது திருவள்ளுவரின் பின்புலத்தையும் கருத்தின் ஆழத்தையும் மொழி பெயர்ப்பில் சரியாக உட்படுத்தவில்லை என்ற சிந்தனையை எழுப்பத் தவறவில்லை. திருக்குறளைப் பற்றியும் திருவள்ளுவரைப் பற்றியும் விரிவான ஆய்வுத் தரவுகள் கிடைக்கின்ற இக்காலகட்டத்தில் ஏனைய மொழிகளில் இதற்கான மொழிபெயர்ப்பு முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள தேவை போலவே ஜெர்மானிய மொழியிலும் மீண்டும் திருக்குறள் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு ஜெர்மானிய டோய்ச் மொழியில் மீள்பதிப்பு செய்யப்பட வேண்டியது அவசியக்கடமையாகின்றது. இதனைச் செய்வதன் வழி திருக்குறளைச் செம்மைப்படுத்தி ஜெர்மானிய மொழி பேசும் நாடுகளில் திருக்குறளை மீள் அறிமுகம் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

முடிவுரை:

தமிழ் மொழி ஐரோப்பிய சூழலில், அதிலும் குறிப்பாக ஜெர்மானிய மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற நாடுகளில் அறியப்படாத மொழி அல்ல. கடந்த ஒரு நூற்றாண்டில் ஏற்பட்ட அதிகமான மக்கள் புலம்பெயர்வும் இலங்கைப் போரினால் ஐரோப்பாவெங்கும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்கள் அதிகம் வாழ்கின்ற சூழலிலும்தமிழ்மொழிஐரோப்பியநிலத்தில் அறியப்பட்ட மொழி என்பது நிதர்சனம். சில

பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறையின் வழி தமிழ் போதிக்கப்படுவது ஐரோப்பாவில் நிகழ்கின்றது. ஐரோப்பிய மாணவர்களுக்குத் திருக்குறள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டுச் சமகால ஆய்வின் அடிப்படையில் திருக்குறள் மீண்டும் ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்பட வேண்டியது நம் முன்னே இருக்கின்ற மிக முக்கியக் கடமை என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

References:

1. *Allgemeine Literatur Zeitung, 29.June 1807*

2. *Mathavan V.Ira. (2000). Cuvadippathippiyal, Pavai Publications, Thanjavur, Tamil Nadu.*

3. விக்டோரியா மோ.நேவிஸ் *(2011).* தம்பிரான் வணக்கம், தமிழ் மொழியின் முதல் அச்சு புத்தகம். *Pavai Publications, Rayappetai, Chennai, Tamil Nadu.*

4. க.சுபாஷிணி *(2018),* ஜெர்மானியத் தமிழியல் – நெடுந்தமிழ் வரலாற்றின் திருப்புமுனை, காலச்சுவடு பதிப்பகம்.

5. க.சுபாஷிணி *(2021)* மெட்ராஸ் *1726,* காலச்சுவடு பதிப்பகம்.

6. *Graul Karl (1856). Der Kural des Tiruvalluver, Ein Gnomisches Gedicht über die Drei strebeziele des Menschen, Doeffling & Franke, Leipzig, Germany).*

7. *The Cural of Tiruvalluver, First Part, with the Commentary of Parimelaragar.*

8. *Mr.Ariel. 1947 Journal Asiatique, A Paris, Chez Doney-Dupre Pere et Fils, Imp. –Libraires,au Marais, France*

9. *Jeyaraj, Daniel and Young, Richard Fox (transl. Eds.) (2013). Hindu-Christian Epistolary Self-Disclosures: 'Malabarian Correspondence' between German Pietist Missionaries and South Indian Hindus (1712–1714), Wiesbaden: Harrassowitz Verlag,*

10. *An Historical Essay by James F.B. Tinling, B.A. (1871), Early Roman-Catholic Missions to India,with sketches of Jesuitism, Hindu Philosophy and The Christianity of the Ancient Indo-Syrian Church of Malabar.*

11. *Joseph G.Muthuraj, (2011), We began at Tranquebar ISPCK, Kashmere Gate, Delhi.*

பின்னிணைப்புகள்:

பின்னிணைப்பு 1: ஆகஸ்ட் ஃப்ரெடெரிக் காம்மெரர் 1803ம் ஆண்டில் பதிப்பித்த திருக்குறள் மொழிபெயர்ப்பு

Des

Tiruwalluwer

Gedichte und Denksprüche.

Aus

der Tamulischen Sprache

übersezt

von

August Friedrich Cämmerer,

der Weltweißheit Doctor

und

Königl. Dän. Mißionar in Trankenbar.

Nürnberg,

im Verlag der Raw'schen Buchhandlung,

1803.

221 75

பின்னிணைப்பு 2: ஜெர்மானியப் பத்திரிக்கையில் 1807ம் ஆண்டில் திருக்குறள் பற்றிய நூல் விமர்சனம்



Num. 154.

LGEMEINE LITERATUR-ZEITUN

Montags, den 29. Junius 1807.

RIENTALISCHE LITERATUR.

NBERG, b. Raw: *Des Tiruwalluwer Gedichte d Denksprüche.* Aus der Tamulischen Sprache ersetzt von *Aug. Friedr. Cämmerer*, d. Weltw. octor und kön. dän. Missionar in Trankenbar. 03. 192 S. 8. (12 gr.)

; Verdienst der von Halle nach Indien gegangenen Missionarien, ihre Nebenstunden zu Benachung der dortigen Gelehrsamkeit anzuwenft von Anfang herein gröfser, als es insgemein annt wird. *Ziegenbalg*, *Walter* und *B. Schulz* schon in den ältern gedruckten Berichten und bereit liegenden Handschriften manche schöne ichten gegeben, und manches alte Vorurtheil itigt; aber sie wurden zu wenig benutzt, und wurde nachher, bey *Dow*, *Sonnerat* und *Jones* eue Aufklärung angepriesen, was jene längst r auch, und wohl noch besser und genauer, geatten. Da sich also jetzt nächst Hn. *John* auch als würdiger Nachfolger an jene nur zu sehr ver en verdienstvollen Männer anschliefst: so verdient

fetzten. So schwamm es in einer andern Gegen Land, und ward von einem kinderlosen Bramine zogen. Der junge Perali war indessen erwac ging als heiliger Philosoph auf Reisen, ward in Hause jenes Braminen wohl aufgenommen, und m vermeinten Tochter verheirathet. Er erkannt aber nach mehrern Jahren einer glücklichen El einem Mahlzeichen für das ausgesetzte Kind, unc liefs sie. Der Pflegevater glaubte, sie müfste d eine Beleidigung Ursach gegeben haben, und b ihr, ihm zu folgen, um ihn zu versöhnen und zu zu bringen, oder bey ihm zu bleiben. Sie fanc auch unterweges, und that alles Mögliche; aber gebens, er blieb unerbittlich, und nach einiger gen, da sie fest schlief, ging er wieder heimlic von. Sie getrauete sich nun nicht wieder zum V und ward aus Mitleiden von einem andern Bran wieder als Kind aufgenommen. Nach dessen erbte sie auch mit den leiblichen Kindern so viel; sie ein Ruhehaus für Pilgrimme bauete, sie unent lich mit Milch und Früchten bewirthete, und ol der Erzählung ihrer Schicksale unterhielt. Nach gen Jahren kehrte auch ihr Mann da ein, un

பின்னிணைப்பு 3: கார்ல் க்ரவுல் அவர்கள் எழுதிய திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலின் அட்டைப்படம்.



Tiru-vallavar.

DER KURAL

DES

TIRUVALLUVER.

EIN GNOMISCHES GEDICHT

ÜBER

DIE DREI STREBEZIELE DES MENSCHEN.

ÜBERSETZUNG UND ERKLÄRUNG

VON

KARL GRAUL, DR. TH.,

DIRECTOR DER EVANGEL.-LUTHER. MISSION ZU LEIPZIG, MITGLIED DER DEUTSCHEN MORGENLÄNDISCHEN UND DER HISTORISCH-THEOLOGISCHEN GESELLSCHAFT.

LIBRARY OF PRINCETON
THEOLOGICAL SEMINARY

LEIPZIG 1856 DÖRFFLING & FRANKE.

LONDON 1856 WILLIAMS & NORGATE.

ஆசிரியர் குறிப்பு:

முனைவர் சுபாஷிணி தமிழ் ஆய்வாளரும், தமிழ் மரபு அறக்கட்டளை அமைப்பின் தலைவரும், அதன் நிறுவனர்களில் ஒருவரும் ஆவார். செருமனியில் பொறியியலாளராகப் பணியாற்றி வருகின்றார். இங்கிலாந்தின் வார்ன்பாரோ கல்லூரியில் தொலைத்தொடர்புத் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்.

தமிழ்க் கணினித் துறை ஆய்வுகளுக்காக உருவான உத்தமம் என்ற அமைப்பில் அதன் தொடக்கம் முதல் பங்களித்து வருகின்றார். தமிழ் மரபு அறக்கட்டளை என்னும் அமைப்பை முனைவர். நா. கண்ணனுடன் இணைந்து ஏற்படுத்தி, இணைய வெளியில் தமிழர் வரலாற்றையும், அரிய தமிழ்ச்சுவடி ஆவணங்களையும் பாதுகாக்கும் முயற்சியைத் தொடங்கினார். இம்முயற்சியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தமிழ் ஓலைச்சுவடிகள் மின்னாக்கம் செய்யப்பட்டுள்ளன.

சுபாஷிணி பலமுறை தமிழகம் சென்று, அங்கே களப்பணிகளை மேற்கொண்டு, வாய்மொழி இலக்கியங்கள், சிற்பங்கள், கோயில் கட்டுமானங்கள், கல்வெட்டுக்கள், பண்டைய தமிழர் வாழ்வியல் கூறுகள் எனப் பலதரப்பட்ட தகவல்களை எண்ணிம வடிவில் சேகரித்து ஆய்வுகள் செய்து, மின்வெளியில் வெளியிட்டு வருகின்றார்.

இந்த முயற்சியின் வழி, இங்கிலாந்தில் உள்ள பிரித்தானிய நூலகத்தின் அரிய தமிழ் நூல்கள் சிலவும் மின்னாக்கம் செய்யப்பட்டுள்ளன. அண்மையில் இவர் டென்மார்க், கோப்பன் ஆகன் அரச நூலகத்தின் சேகரிப்பில் இருக்கும், லூத்தரன் பாதிரிமார்களின் 300 ஆண்டுகள் பழமையான முப்பத்தெட்டு தமிழ் கையெழுத்து ஓலைச்சுவடி நூல்களை மின்னாக்கம் செய்துள்ளார். இந்த ஓலைச்சுவடிகளைத் தமிழிணையக் கல்விக்கழகம், தமிழ் ஆய்வாளர்கள் பயன் பெறும் வகையில் தங்கள் இணையதளத்தின் வழி அடைய வழி செய்துள்ளது. தமிழ் மரபு, தமிழிலக்கியம், கணினித் தமிழ் வளர்ச்சி குறித்து பல சொற்பொழிவுகளையும் முனைவர் சுபாஷிணி நிகழ்த்தியுள்ளார். ■

திராவிட இயக்கமும், தமிழ்நாட்டில் அஞ்சல் தொலைதொடர்புத் தொழிற்சங்க இயக்கமும்

ஆ.செல்லப்பாண்டியன்

கட்டுரைச் சுருக்கம்:

உலகத் தொழிற் புரட்சி ஏற்பட்ட பின், இந்தியத் தொழிற்சங்க வரலாறும், குறிப்பாகத் தமிழ்நாட்டில் அதன் வரலாறும், அதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பும், அதிலும் குறிப்பாகத் தொமுச என்னும் தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரலாறும் என்று பல கோணங்களில் விரிவாக ஆய்கிறது இக் கட்டுரை.

"காண்ப தெல்லாம் தொழிலாளி செய்தான்! அவன்

காணத் தகுந்தது வறுமையாம்

பூணத் தகுந்தது பொறுமையாம் " (1)

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், இன்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன்னால். உழைக்கும் மக்களின் வாழ்வியல் நிலையை, அவர்களின் அவலத்தைக் கவிதை வரிகளால் வடித்துத் தந்தவை தான் இவை.

தற்போது அறிவியல் தொழில் நுட்பத்தின் உச்சமான அனைத்து வகை படைப்புகளையும் மனித சமூகம் நுகர்ந்து அனுபவித்துக்கொண்டிருக்கிறது, இவை மனிதகுலத்திற்கு உழைக்கும் மக்கள் படைத்தளித்த சாதனங்கள்.அவர்கள் வழங்கிய , வாழ்வியலுக்கான சீதனங்கள்.

மிக வேகமான 'அறிவியல் தளத்தில்' தினம் தினம் புதிய புதிய கண்டுபிடிப்புகள் அணி வகுத்து நிற்கின்றன. நீராவி இயந்திரம் தொடங்கி அணு மின்சாதனங்கள் வரை, சந்திரனில் மனிதன் கால் வைத்தது முதல் தற்போது செவ்வாய்க் கோளில் ஆய்வு நடத்தும் 'மங்கள் யான்' விண்கலம் அனுப்பியதுவரை தகவல் தொழில் நுட்பத்தில் எண்ம(டிஜிட்டல்)முறை வரை மிக நீண்ட பட்டியல் உலகலாவிய மனித குலத்திற்கு சாதனைகளாக மனித குலத்திற்கான வாழ்வியல் சாதனங்களாக வழங்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் உழைக்கும் மக்களின் வியர்வையில் விளைந்தவை!

அணுவைப் பிளந்து அதன் ஆற்றல் உணர்ந்து அந்த விண்ணை அளந்து அதன் அறிவியல் தெரிந்து,இந்த மண்ணைப் பிளந்து,அதில் கனிமம் அகழ்ந்து,கடும் மலையைக் குடைந்து அதில் வழியை வகுத்து,பெரும் கடல் நீளம் அளந்து,அதன் ஆய்வில் தெளிந்து கடலின் மடியில் நெடிய பாலம் அமைத்து இன்னும் வார்த்தைகளில் அடங்காத சாதனைகளை உழைக்கும் மக்கள் இந்த உலகிற்கு வழங்கி உள்ளனர்.

இன்னும் கடல் வழிப்பாதை,வான்வழிப்பாதை,தொலைத்தொடர்பு தகவல் தொழில் நுட்பம்,இயற்கை சீற்றங்களை

எதிர்கொள்ளும் பேராற்றல் என எண்ணற்ற சாதனைகள் .இவை எல்லாம் தொழிலாளர் உழைப்பால்தான் உயர்ந்து நிற்கின்றன. ஆனால் உலகில் பெரும்பகுதியாக உள்ள உழைக்கும் மக்களின் வாழ்வாதாரம்(Living Standard) கேள்விக்குறியாக பின் தங்கியே உள்ளது.அவர்களின் வாழ்க்கைப் பயணம் தொடர் போராட்டமாகவே நகர்ந்து கொண்டிருக்கிறது.

உழைக்கும் மக்களின் அர்ப்பணிப்பு:

உலக அளவில் இத்தகைய பெரும்பகுதி உழைக்கும் மக்கள் தாங்கள் அமைப்பு ரீதியாக செயல்பட முடியாதவர்களாக ,செயல்பட இயலாதவர்களாக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தினக்கூலி தொழிலாளியாக ,ஒப்பந்த தொழிலாளர்களாக,மலையகத் தோட்டத் தொழிலாளர்களாக ,பண்ணைத்தொழிலாளர்களாக ,பரந்து பட்ட விவசாயத் தொழிலாளர்களாக ,சிறு குறு நிறுவனத்தொழிலாளர்களாக ,நெசவு,மீன் பிடித்தொழிலாளர்களாக மிகப்பெரும்பான்மையாக உள்ள கட்டுமானத்தொழிலாளர்களாக தினம் வியர்வை சிந்தி தங்கள் உழைப்பை இந்த சமூகத்திற்காக அர்ப்பணித்துக்கொண்டிருக் கிறார்கள்.

வளரும் நாடுகளில் மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளிலும் இதுதான் எதார்த்த நிலை.ஐக்கிய நாடுகள் சபையின் உலக நாடுகள் வறுமை ஆய்வு அறிக்கை(ஜனவரி-20,2020) இதை உறுதி செய்துள்ளது.(2)

இத்தகைய உழைக்கும் மக்கள் நகர்ப்புறங்களில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் குடிசைகளில்(Slum Area) வாழ்கிறார்கள். அவர்கள் சுகாதாரம்,கல்வி,மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி ,ஏழ்மையிலும் வறுமையிலும் வாடுகிறார்கள்.அதேபோல உலகில் உள்ள நகர்ப்புற மக்கள் தொகையைப் போல ஏழு மடங்கு மக்கள் (சுமார் 650 கோடிப்பேர்) கிராமங்களில் வாழ்கிறார்கள்.கிராமப்புற மக்களின் ஒரு பகுதியினர் சுத்தமான குடி நீர் கூட கிடைக்காமல் அவலத்தில் வாழ்கிறார்கள் என்று விவரிக்கிறது அந்த அறிக்கை.

இன்றைய சூழலே இப்படி என்றால் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) போன்ற நிறுவனங்கள் வருவதற்கு முன்னால் உலக நாடுகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பு ,சட்டங்கள் ஏதும் இல்லாத 18,19ஆம் நூற்றாண்டுகளில் தொழிலாளர்களின் நிலைமை மிக மோசமாக இருந்தது.

தொழிற்புரட்சியும் தொழிலாளர்களும்:

புதிய தொழில் நுட்பம்,புதிய புதிய கண்டுபிடிப்புகள் தொழில்களில் முழு அளவில் இயந்திரமயமாக்கல் ஆகியவை நடந்தேறின.விளைவு உற்பத்தி பெருக்கம் அதுவும் அதிவேகத்தில் குவிந்தது.இவற்றின் காரணமாக பெரிய அளவில் பொருளாதார வளர்ச்சியை அந்த நாடுகள் அடைந்தன. மேலும் சமூகப்பண்பாட்டுத்தளங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன.புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட அதே சூழலில் அவற்றில் பணி புரியும் தொழிலாளர்கள் புதிய சிக்கல்களையும் புதிய பிரச்சனைகளையும் எதிர்கொண்டனர். தொழிற்சாலைகளில் நிர்வாகம் முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் என்கின்ற அமைப்பு தானாகவே கட்டமைக்கும் சூழல் ஏற்பட்டது.

தொழிற்சாலைகளில் நீண்ட வேலை நேரம் குறைந்த அளவில் வழங்கப்படும் கூலி,வேலை உத்திரவாதம் இல்லை,பாதுகாப்பு-சுகாதாரம் இல்லை,மிகக் குறைந்த கூலியில் குழந்தைத் தொழிலாளர்கள்,சுரண்டப்படுதல்,வறுமை ,ஏழ்மை என அடுக்கடுக்காக துயரங்களைத் தொழிலாளர்கள் எதிர்கொண்டனர்.ஆனால் இவர்கள் உழைப்பில் உருவான பொருட்கள் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு பெரும் செல்வத்தை ஈட்டித்தந்தன. அதே நேரத்தில் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரும் அளவில் பாதிக்கப்பட்டன. அவர்கள் தொடர் துயரங்களைச்சந்தித்தனர். இத்தகைய சிக்கல்கள்,பிரச்சனைகள்

நிறைந்த காலகட்டத்தில் அவற்றிற்கு தீர்வுகாண புதிய சிந்தனைகளும் மாற்றங்களுக்கான முயற்சிகளும், தீர்வுக்கான அமைப்புகளும் ,இயக்கங்களும் இயல்பாக உருவாகத்தொடங்கின.

உலக நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் தொழிற்புரட்சி துவங்கிய காலகட்டத்திலும் அதற்கு முன்னரும்கூட தொழிலாளர்கள் தங்களுக்கான தொழிற்சங்கங்களை அமைத்துக் கொள்வதற்கு முன்பாகவே ஆங்காங்கே சிறுசிறு குழுக்களாக தங்களுக்கான உரிமைகளுக்காக கோரிக்கைகளை முன்வைத்து போராடிக்கொண்டிருந்தனர்.

தொழிற்கூடங்களிலும் பணிபுரியும் இடங்களிலும் தொழிலாளர்கள் தொடர்ந்து சந்தித்த பிரச்சனைகள் பணியில் ஏற்பட்ட இன்னல்கள் தொடர்ந்து அதிகரித்து வந்தன.அதன் தீவிரத்தன்மை அவர்கள் ஒன்றுபடுவதை கட்டாயப்படுத்தியது. தொழிலாளர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தி போராட்டங்கள் நடத்தவேண்டிய தேவையை,அவசியத்தை உணர்த்தியது.அதன் விளைவாக இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் ,அமெரிக்காவிலும் புதிய அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் உருவெடுத்தன.

இங்கிலாந்தில்..

18-ஆம் நூற்றாண்டில் துவக்கத்தில் இங்கிலாந்தில் நார்விச்(Norwich) பகுதியில் உள்ள சுரங்கத் தொழிலாளர்கள்,தங்களது நியாயமான கோரிக்கைகளுக்காக தொடர்ந்து பல கட்டங்களாக ,பல ஆண்டுகள் வேலை நிறுத்தம் செய்தனர்.நாட்டிங்காம் பகுதியில் நெசவுத்தொழிலாளர்கள் போராட்டம்,1819-ஆம் ஆண்டு அனைத்து அமைப்புகள் சார்பில் பீட்டர்லூ பகுதியில் 80 ஆயிரம் பேர் கலந்துகொண்ட போராட்டம் கலவரத்தில் முடிந்தது.18 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.1833 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நாடாளுமன்றம்(Factory Act 1838) தொழிலாளர் உரிமைகள் சட்டம் கொண்டு வந்தது.ஆனால் 1834-ஆம் ஆண்டில் பண்ணை தொழிலாளர்களுக்கு ஆதரவாக கூலி உயர்வு கேட்ட 'டோல்படூள் 'பகுதி தொழிற்சங்கத்தினர் 6 பேரை ஏழாண்டுகள் தண்டனை விதித்து ஆஸ்திரேலியாவின் குற்றவாளிகள் காலனிக்கு (Penal Colony) நாடு கடத்தினர்..அரசாங்கத்தின் இத்தகைய செயலுக்கு தொழிலாளர்கள்,பொதுமக்கள் மத்தியில் நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பியது.

1842-ல் பருத்தி பஞ்சு(Cotton Workers) ஆலைத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் செய்தனர்.1867-ல் தொழிற்சங்க காங்கிரஸ் (Trade Union Congress) உருவானது.1871-ல் தொழிலாளர்களுக்கான (Trade Union Act 1871) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இங்கிலாந்தின் தொழிலாளர் அமைப்பான தொழிற்சங்க காங்கிரஸ் பின்னாளில் அரசியல் கட்சியாக இணைந்து செயல்பட்டது.1900-ல் லேபர் பார்ட்டி(Labour Party) என்னும் கட்சியாக உருவெடுத்தது.

ஜேம்ஸ் கேயர் ஹாடி(James Keir Kardie) தன் 10 வயதில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளியாக தனது பணியைத் துவங்கி தனது 23-வது வயதில் சுரங்கத் தொழிலாளர் சங்கத்(1879) தலைவரானார். ஸ்காட்லாந்தின் தொழிற்சங்கவாதியான ஜேம்ஸ் கேயர் ஹாடி பின்னாளில் லேபர் பார்ட்டி துவங்கியவர்களில் ஒருவராக ,அவர் அக்கட்சியின் முதல் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

சுவீடன் நாட்டில்:

சுவீடன் நாட்டில் ஏற்கனவே இயங்கிவந்த பல்வேறு தொழிலாளர் அமைப்புகள் ,தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து 1886 முதல் தேசிய தொழிலாளர் சங்கம்(National Labour Union) உதயமானது.பின்னர் 1898-ல் தொழிலாளர் மத்திய அமைப்பாக (Swedish Social Democratic Confederation) L.O. உருவானது. அதற்கு இணையாக தொழிற்சங்க அமைப்புடன் தொடர்புடைய (Swedish Social Democratic Party) SAP 1889-ல் துவங்கப்பட்டது. இந்த இரு அமைப்புகளும் தொழிலாளர் இயக்கம் மற்றும் அரசியலிலலும் ஆதிக்கம் செலுத்தின.

சுவிட்சர்லாந்து...

சுவிட்சர்லாந்து நாடு தொழில்மயமானதை(Industralation) அடுத்து 1860 களில் தொழிற்சங்க அமைப்புகள் துவங்கப்பட்டன.1873-ல் பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து தொழிலாளர் கூட்டமைப்பை(Workers Federation) உருவாக்கினர்.

ஆஸ்திரேலியாவில்...

அன்றைய பிரிட்டிஷ் காலனி ஆதிக்க நாடான ஆஸ்திரேலியாவில் 1820களில் (தண்டனைக் கைதிகள் அல்லாத) தொழிலாளர்களால் தொழிற்சங்க அமைப்புகள் துவங்கப்பட்டன. முதலில் சிட்னி மற்றும் ஹோபர்க் நகரங்களிலும் பின்னர் நாடு முழுவதும் துவங்கப்பட்டன.1850-களில் 400 சங்கங்கள் துவங்கி செயல்பட்டன.அப்போதே ஆஸ்திரேலியாவில் சுரங்கத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலதுறை தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்தினர்.குறிப்பாக பெண்கள் தீவிரமாக தொழிற்சங்கங்களில் ஈடுபட்டனர்.

ஜெர்மனியில்...

ஜெர்மனியில் நடைபெற்ற ஜெர்மன் புரட்சி(1848-49) காலத்தையொட்டி பெர்லின் உள்ளிட்ட 40 நகரங்களில் ஏற்கனவே தனித்தனியாக செயல்பட்டு வந்த எட்டு தொழிலாளர் சங்கங்கள் ஒன்றிணைந்து ஜெர்மன்தொழிற்சங்கபேரமைப்பாக(German Trade Union Confederation) உருவானது.

அமெரிக்காவில்...

ஐரோப்பிய காலனி ஆதிக்க நாடுகளிலிருந்து விடுபட்ட அமெரிக்கா சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்ட 1776-ம் ஆண்டு காலகட்டத்தில் தொழிலாளர் இயக்கங்களும் தோன்றிடத் துவங்கின. முன்னதாகவே நியூயார்க் நகரில் ,தங்களது ஊதியக் குறைப்பை எதிர்த்து தையல் தொழிலாளர்கள் 1768-ஆம் ஆண்டு போராட்டம்,வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்பது பதிவாகியுள்ளது.

1794-ல்பிலடெல்பியாவில்துவங்கப்பட்ட (Federal Society Of Journeymen Cordwainers(Shoe makers) என்னும் தொழிலாளர் அமைப்புதான் ,அமெரிக்க வரலாற்றில் நிலையான தொழிற்சங்கங்கள் தோன்றுவதற்கு முன்னோடியாக வழிகாட்டியது. தொடர்ந்து சங்கங்கள் நகர்ப்புறங்களில் விரிவடைந்தன. தொழிற்புரட்சியின் தாக்கமாக, தொழிலாளர்களிடையே தங்களுடைய வேலைத்தன்மை ,வேலைக்கான ஊதியம் பற்றிய சிந்தனை விழிப்புணர்வு ஏற்படத் துவங்கியது.தாங்கள் சுரண்டப்படுவதை உணர்ந்து வேலை நேரக் குறைப்பு போன்ற கோரிக்கைகள் தொழிலாளர்கள் மத்தியில் வலுவடையத் துவங்கியது.இத்தகைய சூழல்,விழிப்புணர்வு ஆகியவை தொழிற்சங்கக் கட்டமைப்பை விரிவுபடுத்துவது, வலிமைப்படுத்துவது பற்றிய நிலையை உருவாக்கின.

இதனையடுத்து 1827-ல் இயந்திர தொழிலாளர்(Mechanics') பொறிச்செம்மையாளர்கள் சங்கம் உருவாக்கப்பட்டு மத்திய சங்க அமைப்புகளை பிலிடெல்வியாவில் கட்டமைத்தனர்.

1852-ல் அமெரிக்கா மற்றும் கனடாவில் அச்சுக்கலை தொழிலாளர்களின் சங்கம் விரிவடைந்து சர்வதேச அமைப்பாக மாறியது.

19-ஆம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக ,1866-ல் தேசிய சங்கங்கள் ஒன்றிணைந்தன.மற்றொன்று 1880-ல் (Knights of Labour) தேசிய அமைப்பாக வலுவடைந்தது.ஏற்கனவே 1877-ல் ரயில்வே நிறுவனங்களுக்கு எதிரான மாபெரும் வேலை நிறுத்தத்தில் முக்கிய பங்கெடுத்து வழி நடத்தியது.

தேசிய சங்களிலிருந்த ஒரு பகுதியினர் 1886-ல் அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம்(American Federation Of Labor) என்ற புதிய அமைப்பை உருவாக்கினர்.

Knights அமைப்பு விரிவாக வளர்ச்சி அடைந்த நிலையில் 1881-ல் பெண்

தொழிலாளர்களையும் அமைப்பில் சேர அனுமதித்து,அவர்களுக்கும் இயக்கத்தில் சம உரிமை அளித்தது.1884-ல் பசிபிக் ரயில்பாதை தொழிலாளர்களுக்கு 10% ஊதிய உயர்வை பெற்றுத்தந்தது.கடுமையான போராட்டத்தால் 'நைட்ஸ்' இதனைச் சாதித்தது.

சிக்காகோ போராட்டம்.

அமெரிக்காவின்சிக்காகோநகரில்1886-மே 4-ம் நாள் தொடங்கிய தொழிலாளர் பேரணி 'ஹே மார்க்கெட் ' சதுக்கத்தில் குருதி சிந்திய வரலாறு எனப் பதிவாகியது.அமெரிக்காவின் பள்ளி வரலாற்றுப் பாடத்தில் சிலர் மட்டுமே உண்மை நிகழ்வை பதிவு செய்துள்ளனர். A F L அமெரிக்க தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர்,தோழமைச்சங்கங்கள் இணைந்து விடுத்த அறைகூவல் ,' எட்டு மணி வேலை நேர' கோரிக்கைகளுக்காக நாடு தழுவிய போராட்டம்.

மே 1 தொடங்கியது. அன்று மிக்சிகன் அவென்யூவில் 80,000 தொழிலாளர்கள் பங்கேற்றனர்.இரண்டாம் நாள் 35000 தொழிலாளர்கள் பங்கேற்றனர்.மே-3 பெஸ்டர்ன்-புளு அவென்வியூவில் திரண்ட தொழிலாளர்கள் மீது சிக்காகோ காவல்துறை கண்மூடித்தனமான கொலைவெறித்தாக்குதல் நடத்தியது.பலர் கொல்லப்பட்டனர்.இதைக் கண்டித்து மே-4ஆம் நாள் பேரணி ஹே மார்க்கெட் சதுக்கத்தில் நடந்தபோது 2500 பேர் கலந்து கொண்டனர்.அவர்களைச்சுற்றி வளைத்து காவல்துறை தாக்கியது.பலர் கொல்லப்பட்டனர். பொய்க்குற்றம் சுமத்தி நான்கு தொழிற்சங்கத்தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

அவர்கள் தியாகம் அனைவருக்கும் '8 மணி நேர வேலை ' என்ற முழக்கம் வெற்றியைத் தேடித்தந்திருக்கிறது. அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் உலகம் முழுவதும் மே முதல் நாளை தொழிலாளர் தினமாக கொண்டாடுகிறார்கள். தியாகத்தால் உயிர் நீத்த தொழிலாளர்களின் முன்னோடிகளுக்கு சிக்காகோ நகரின் புற நகர்ப்பகுதியிலுள்ள Forest (Park Illunois) பூங்காவில் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தொழிலாளர் இயக்கம்:

18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உருவான தொழிற்புரட்சியினையொட்டி இந்தியாவிலும் பஞ்சு நூற்பாலைகள் ,சணல் தொழிற்சாலைகள் முதலியவை துவங்கப்பட்டன.புதிதாக இரயில்பாதை அமைக்கும் பணியும் துவங்கப்பட்டது. இவை பிரிட்டிஷ் இந்தியாவில் 1850களில் துவங்கப்பட்ட முக்கிய பணிகள்.

எனவே 1860களில் தொழிலாளர் பிரச்சனைகளும் உருவாகத் தொடங்கின. வலுவான அமைப்பு ரீதியான தொழிற்சங்கம் இல்லாத சூழலிலும் 1875-ல் பம்பாய் நகரத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்கள்,எஸ். எஸ்,பென்காளீ என்பவர் தலைமையில் போராட்டம் நடத்தினர்.அத்தகைய போராட்டங்களின் விளைவாக அன்றைய பிரிட்டிஷ் அரசு தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க தொழிற்சாலைகள் ஆணையம்(Factory Commission) ஒன்றை அமைத்தது.

பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு எம்.என்.லோகாந்தே என்பவர் தலைமையேற்று போராட்டத்தை நடத்தினார்.அதன்விளைவாக பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஆலைத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் உள்ளிட்ட பிரச்சனைகளின் தீர்வுக்கு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் முதல் தொழிற்சாலைகள் சட்டம்(Factory Act 1881) கொண்டு வரப்பட்டது.

ஆயினும் அன்றைய காலகட்டத்தில் தொழிலாளர்களின் (Welfare) சேம நலன்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்டது.அவர்களின் அடிப்படை உரிமை,கோரிக்கைகள்,வேலை நேரம் போன்றவை கவனத்தில் கொள்ளப்படவில்லை.தொழிலாளர்களிடம் போதிய விழிப்புணர்வு,அறிவார்ந்த செயல்திட்டம் எதுவும் இல்லாத சூழல் தொடர்ந்தது.இந்தியாவில்

ஆங்காங்கே தொழிலாளர் அமைப்புகள் செயல்பட்டாலும் ,வலுவான அமைப்புரீதியான தொழிற்சங்கங்கள் பிறகாலத்தில்தான் உருவாக்கப்பட்டன.

பிரிட்டிஷ் இந்தியாவில் ,தொழிலாளர் இயக்கம்:

தொழிற்சங்கங்களின் வரலாற்றில் 1918-1924 காலகட்டத்தில்தான் முறையான, வலுவான, அமைப்புரீதியான , ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்சங்கத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.

முதல் உலகப்போரினால் ஏற்பட்ட பாதிப்புகளின் தாக்கத்தால் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் சிதைந்து போயிருந்த சூழல் ஒரு புறம், தொழில்மயமாக உலக அளவில் ஏற்பட்டுள்ள அறிவியல் தொழில் நுட்பங்கள் பற்றிய தெளிவு, போதிய விழிப்புணர்வு ஆகியவை இல்லாத சூழல் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டது. எனவே இத்தகைய விழிப்புணர்வு மற்றும் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவை ,அவர்களின் உரிமை பற்றிய புரிதல் ஆகியவை பற்றிய தெளிவையும் மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவைகளை உணர்ந்த தலைவர்கள் தொழிலாளர்களின் துயரங்களை களையவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தொழிலாளர் இயக்கங்களை கட்டமைக்க முன்வந்தனர். அமைப்பு ரீதியாக சங்கங்களை உருவாக்கினர்.

இந்தியாவில் முதல் தொழிற்சங்கம்:

அன்றைய (சென்னை) மெட்ராஸ் பிரசிடென்சி(MADRAS Presidency) யில் திரு. வி. கல்யாணசுந்தரம், பி. பி. வாடியா, மா. சிங்காரவேலர் மற்றும் சக்கரைச்செட்டியார் ஆகியோர் ஏப்ரல்-271918-ல் 'மெட்ராஸ் லேபர் யூனியன்(MLU) என்ற தொழிற்சங்கத்தைத் துவக்கினர். இந்தியாவின் வரலாற்றில் அமைப்பு ரீதியாக துவங்கப்பட்ட முதல் தொழிற்சங்கம் மெட்ராஸ் லேபர் யூனியன் என்பதுதான் சிறப்பு. இதனை அடுத்து அகமதாபாத் பஞ்சாலை(Textile) தொழிலாளர் சங்கம், அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கம் ஆகியவைகளும் துவங்கப்பட்டன.

(பி&சி) பின்னி மில் போராட்டம்:

அன்றைய மதராஸ் பின்னி (பி&சி) மில் தொழிலாளர்களுக்கு கடும் அநீதி இழைக்கப்பட்டு வந்தது. தொழிலாளர்கள் உரிமை மறுக்கப்பட்டது. 12 மணி நேரம், 16 மணி நேரம் வேலை வாங்கப்பட்டு சுரண்டப்பட்டனர். நியாயமான ஊதியம் மறுக்கப்பட்டது. எனவே இத்தகைய கொடுமைகளை எதிர்த்து பழுத்த சுயமரியாதைக்காரர் ,சங்கத்தின் தலைவர் திரு. வி. க. மற்றும் பகுத்தறிவுவாதியும் பொதுவுடைமைவாதியுமான மா. சிங்காரவேலர் ஆகியோர் தலைமையில் பி&சி மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தைத் துவக்கினர்.

அன்றைய ஆங்கிலேயே அரசு எம். எல். யூ. சங்கத்தை தடை செய்தது. போராட்டத்தை ஒடுக்க காவல்துறை வரவழைக்கப்பட்டது. கண்மூடித்தனமாக போராடும் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. ஒன்பது தொழிலாளர்கள் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தனர். இத்தகைய துயரச்சம்பவம் 29.8.1921-ல் நடைபெற்றது.

தலைவர்கள் திரு. வி. க, சிங்காரவேலர் மற்றும் சக்கரைச்செட்டியார் உள்ளிட்டோரை கைது செய்தது காவல்துறை. தலைவர் திரு. வி. க. வை நாடு கடத்த உத்தரவிட்டது நீதிமன்றம்.

ஆங்கிலேயே அரசின் அடக்குமுறையை எதிர்த்து எம். எல். யூ. சங்கம் நீதிமன்றம் சென்று போராடியது. இறுதியில் வெற்றியும் பெற்றது. இதன் தாக்கம் நாடு முழுவதும் எதிரொலித்தது. திரு. வி. க, மற்றும் மா. சிங்காரவேலர் தலைமையில் மேலும் பல சங்கங்கள் மதராஸில் துவங்கப்பட்டது. எம். எஸ். எம். தொழிலாளர் சங்கம், மின்சாரத்தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், அச்சகத் தொழிலாளர் சங்கம், ரயில்வே தொழிலாளர் சங்கம், கோவையிலும்

மதுரையிலும் நெசவுத் தொழிலாளர் சங்கங்களையும் உருவாக்கினர்.

திராவிட இயக்கமும் தொழிலாளர்களும்:

முதன்முதலில் தமிழ் நாட்டில் 1933-ஆம் ஆண்டு மே-21-ஆம் நாள் தமிழ் நாடு முழுவதும் மேதினம் கொண்டாடப்பட்டது," 1933-ஆம் வருடம் மே மாதம் 21-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ,சுயமரியாதையோரால் 'மே தினம் ' தமிழ் நாடு முழுமையும் கொண்டாடப்படும்...அன்று காலையிலும் மாலையிலும் அந்தந்தக் கிராமங்களிலும் ,பட்டணங்களிலும் சமதர்மிகள் ஊர்வலம்,சமதர்ம சங்கீதங்களுடன் வரலாம்; ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி சமதர்மம் இன்னதென்றும், தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் விளக்கமுறச்செய்யலாம்; துர்ப்பழக்கங்களை ஒழிக்குமாறு பல தீர்மானங்களை செய்யலாம். இவ்விதமாக ஒழுங்காகவும்,நியாய முறைப்படி கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கோள்கிறேன்." (3) என்று தந்தை பெரியார் அறிக்கை விடுத்தார்.

அதற்கு அடுத்த ஆண்டு முதல் மே 1-ஆம் நாள் மே தினத்தைக் கொண்டாடினார்கள். நீதிக்கட்சியும் அதற்குப் பின் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக்கழகமும் மே தினத்தை கொண்டாடி வந்தனர். இப்போதும் கொண்டாடி வருகின்றனர்,

நீதிக்கட்சிகாலத்தில்அதன்தலைவர்களில் ஒருவரான திரு டி.எம். நாயர் அவர்கள் ,அன்றைய ஆங்கிலேய அரசு கொண்டு வந்த தொழிற்சாலைகள் சட்டம்(Factory Act) பற்றி ஒரு அறிக்கையினை வெளியிட்டார். அதில் " ஒரு தொழிற்சாலை பற்றிய சட்டம் என்பது தொழிலாளி-முதலாளிக்கு இடையேயான உறவு,தொழிலாளர் நலம்,தொழிலாளர்களின் கூலி நிர்ணயம் என்கிற மட்டில் இருந்து விடக்கூடாது.எது மிக முக்கியம் என்றால், தொழிலாளர்கள்கால காலத்துக்கும் கூலித்தொழிலாளிகளாகவே இருப்பது என்பதைத் தாண்டி - அடுத்த தலைமுறையிலாவது அவர்களின் பிள்ளைகள் மேலே வரவேண்டும். எனவே இந்த இந்தியத் தொழிற்சங்க சட்டமுன் வடிவு பற்றி வெள்ளையர் அரசாங்கம் ஒன்றைச்சேர்க்க வேண்டும். ஒவ்வொரு தொழிற்சங்கத்த்துக்கும் -ஒவ்வொரு தொழிற்பேட்டைக்குப் பக்கத்திலேயும் தொழிலாளர்களுடைய பிள்ளைகள் இலவசமாக படிப்பதற்கு ஏற்ற வகையில் பள்ளிக் கூடங்களை அரசு நிறுவ வேண்டும்`(4) என ஆங்கிலேயே அரசுக்கு 1911-ல் எழுதினார்.அதுவும் நீதிக்கட்சி தொடங்குவதற்கு முன்னதாகவே திராவிட இயக்க சிந்தனையை வெளிப்படுத்தினார்.

தொழிலாளர்கள் பற்றியும் தொழிற்சங்கங்கள் பற்றியும் ஒரு சரியான பார்வை பெரியாருக்கு இருந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை தமிழில் தந்தை பெரியார் குடி அரசில் வெளியிட்டிருக்கிறார்.

`தொழிலாளர்கள் பகுத்தறிவுவாதிகளாக ஆக வேண்டும்.கடவுள்,மதம்,சாஸ்திரம்,சம் பிரதாயம் முதலிய காரியங்களில் நம்பிக்கை இல்லாமல் இருக்கவேண்டும்.

மனிதத் தன்மையிலும் ,மானத்திலும் ,ஒழுக்கத்திலும் நம்பிக்கை இருக்கவேண்டும் `(5) என்று பெரியார் குறிப்பிடுகின்றார்.

`இந்த நாட்டில் விவசாயிகள்,தொழிலாளர்கள் அனைவரும் திராவிடர்கள்தாம்; மங்கோலியரோ, நீக்ரோக்களோ, ஆரியரோ அல்லர். திராவிடர்தான் பாட்டாளிகளாய், விவசாயிகளாய் வாழ்கிறார்கள்`(6) என்று குறிப்பிட்டவர் பெரியார்.

பொதுவாகவே தொழிற்சங்கம் என்று சொன்னால் அது பொது உடமை இயக்கத்திற்குத் தொடர்புடையது என்கின்ற எண்ணம்தான் ஒரு பகுதியினரிடம் உள்ளது. தொழிற்சங்கம்தான் பொதுவுடமைக் கட்சி-பொதுவுடமைக் கட்சிதான் தொழிற்சங்கம் என்ற கருத்தும் இந்த சமூகத்தில் அழுத்தமாகப் பதிந்திருக்கிறது.ஆனால் உண்மை வேறு.

இந்தியாவில் பொதுவுடமைக் கட்சி (Communist Party Of India) கான்பூரில்

டிசம்பர் 26-1925-ல் தொடங்கப்பட்டது. அதன் தமிழ்நாட்டின் கிளை 1934-ல்தான் துவங்கப்பட்டது.ஆனால் 1931-அக்டோபர் 4 குடியரசு இதழில் தந்தை பெரியார் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை(Communist Manifesto) தொடர்ந்து இரண்டு மாதம் தமிழில் வெளியிட்டார்.ஆம் திராவிடர் இயக்கம்தான் பொதுவுடமைக் கட்சியின் அறிக்கையை முதன் முதலில் வெளியிட்டது.

1931 டிசம்பரில் தந்தை பெரியார் இரஷ்யாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.தனது இரஷ்யா மற்றும் ஐரோப்பியப் பயணத்தை முடித்துக்கொண்டு டிசம்பர் 1932-ல் தாயகம் திரும்பினார்.பொதுவுடமை நாடான இரஷ்யாவுக்குச்சென்று வந்த முதல் திராவிட இயக்கத்தின் தலைவர் தந்தை பெரியார் ஆவார்.

சோவியத் இரஷ்யாவுக்கு செல்வதற்கு முன்பாகவே 1931,ஜீன் மாதம் விருதுநகரில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் டபிள்யூ. பி.அ.சௌந்திரபாண்டியனார் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய தந்தை பெரியார் , 'சமத்துவமும் சோசலிசமும்தான் ' நமது இலக்கு' எனப் பிரகடனப்படுத்தினார். எனவே பொதுவுடமைக் கருத்துகளை தமிழ் நாட்டில் விதைத்த இயக்கம் திராவிட இயக்கம்தான்.ம.சிங்காரவேலர் 1923-ல் விழாவில் மேதினக் கொடியேற்றினார். ஆனால் நாடு முழுவதும் மே தினம் கொண்டாடியது திராவிடர் இயக்கம்.

"1952ஆவது ஆண்டு, திராவிட விவசாயத் தொழிலாளர்சங்கம்என்னும்அமைப்பினைத் தந்தை பெரியார் தோற்றுவித்தார்.1952ஆம் ஆண்டுதான் சங்கத்தைப் பெரியார் தொடங்கினார் எனினும், 1946ஆம் ஆண்டு நடைபெற்ற ரயில்வே தொழிலாளர்கள் போராட்டத்தில் திராவிடர் கழகத்திற்குப் பெரும்பங்கு இருந்தது. குறிப்பாக, திருச்சிக்கு அருகில் உள்ள பொன்மலையில் நடைபெற்ற போராட்டம் திராவிடர் கழகத் தோழர்களினாலேயே முதன்மை பெற்றது."(7) என்று சுப.வீரபாண்டியன் குறிப்பிடுகின்றார்.

தந்தை பெரியாரும் திராவிட இயக்கமும் வெறுமனே தொழிலாளர்கள் பற்றி மட்டும் சிந்தித்திவையல்ல.தமிழ் நாட்டில் தொழிலாளர்களாக யார் இருக்கிறார்கள் என்பதையும் இங்கு உழைக்கும் மக்கள் யார் என்பதைப் பற்றியும் ஒரு தெளிவான பார்வை இருந்தது.

." தொழிலாளர்கள் என்று வருகின்றபோது தொழிற்சாலைகளில் இருக்கும் தொழிலாளர்களைப் பற்றி மட்டும் தந்தை பெரியாரும் திராவிட இயக்கமும் கவலைப்பட்டதில்லை. அவர்களோடு இணைத்துஜாதியின்பெயரால்ஒடுக்கப்பட்டு பிறவித்தொழிலாளர்களாக இருக்கும் அமைப்பு சாரா தொழிலாளர்களைப் பற்றியும் சிந்தித்த இயக்கம் திராவிட இயக்கம்.அவர்களுக்காகவும் இணைத்து அமைப்பு கட்டிய இயக்கம் திராவிட இயக்கம்.

பொதுவுடமையும் அண்ணாவும்:

உடமையாளர்கள், உழைப்பாளர்கள் என்ற நிலை மாறி ,இருவரும் ஒன்றாக வேண்டும் எனச்சிந்தித்தவர்அண்ணா. முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் 'இன்று உடமையாளர்களாக இல்லாமலிருக்கிற விவசாயக் கூலிகளுக்கெல்லாம் நிலம் கிடைக்கிற ஒரு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறபோது, அவர்களும் உடமையாளர்கள் ஆகிற காலம் வரும். உடமையாளர்கள் -உழைப்பாளர்கள் என்ற இரண்டு வர்க்க நிலை மாறும் '(8) எல்லோருக்கும் எல்லாம் என்பதே திராவிட இயக்கத்தின் தத்துவம்.அதுவே பொதுவுடமைத் தத்துவம்.

'பேரறிஞர் அண்ணா அவர்கள் சோசலிசம்-கம்யூனிசம் பற்றி தோழர் லெனின் அவர்கள் கூறியதைமேற்கோள்காட்டிப்பேசினார்.1918-ல் லெனின் அவர்களிடம் 'உங்கள் சோவியத் நாட்டைத் தொடர்ந்து அடுத்தடுத்து கம்யூனிஸ்ட் நாடுகள் அகிலத்தில் உருவாகுமா?" என ஒரு பேட்டியில் கேட்டபோது லெனின் சொன்னார். "உங்கள் கேள்வியே பிழையானது.இன்னும் ஒரு கம்யூனிஸ் நாடு கூட இந்த சோவியத்

உட்பட இந்தப் பூமியில் உருவாகவில்லை!." அப்படியென்றால் உங்கள் நாடு கம்யூனிஸ்ட் நாடு இல்லையா? என்று கேட்டபோது ,இல்லை,இது சோசலிஸ்ட் நாடு.கியூபா உட்பட இதுவரையில் ஒரு கம்யூனிஸ்ட் நாடு கூட உருவாகவில்லை.எங்களின் அடுத்த திட்டம்தான் கம்யூனிஸ்ட் நாட்டை உருவாக்குவது " என்றார்.

சோசலிச சமூகத்திற்கும் கம்யூனிச சமூகத்திற்கும் ஒரு எளிய வேறுபாடு உண்டு ,'சக்திக்கேற்ற உழைப்பு,உழைப்புக்கு ஏற்ற ஊதியம் ' என்பது சோசலிசம், பொதுவுடமை இல்லை. 'சக்திக்கேற்ற உழைப்பு,தேவைக்கேற்ப ஊதியம்' என்பது கம்யூனிசம்.நாங்கள் இன்னும் அந்த இடத்துக்குப் போகவில்லை.எங்கள் மக்களும் அதற்கு பக்குவப்படவில்லை என லெனின் கூறினார், '

அத்தகைய பொதுவுடமை சித்தாந்ததைத்தான் பேரறிஞர் அண்ணாவும் தனது நோக்கமாக,இலட்சியமாக அறிவித்தார்.

இந்திய நாடு விடுதலை பெற்றபின் பொதுவுடமைக்கட்சிதடைசெய்யப்பட்டது. மிகப்பெரிய நெருக்கடி அவர்களுக்கு ஏற்பட்டது.1949 முதல் 1951வரை தடை இருந்த காலத்தில் முன்னனித் தலைவர்கள் தலைமறைவாக இருந்தனர்.அப்படி தலைமறைவாக இருந்த பொதுவுடமைத் தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரவு கொடுத்தவர்கள் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் திராவிட இயக்கமும்தான்.

1952-ல் தந்தை பெரியார் திராவிட விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தை துவங்கி வைத்தார்.அப்போது "தொழிலாளர்கள் வெளி ஆட்களைத் தலைவராக வைக்கக் கூடாது.தலைவர்கள் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து வரவேண்டும் ' என்றார். மேலும் " கூலி உயர்வுக்காக மட்டுமே போராடுகிற சங்கமாக இருக்கக்கூடாது.நம்முடைய தன்மானத்துக்கும் பகுத்தறிவுக்கும் சேர்ந்து போராடுகிற,சமூகத்தை உயர்த்துகிற சங்கமாக இருக்க வேண்டும் " என்றார்.

1967,பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க.ஆட்சி அமைந்தவுடன்,முதல்வரான பேரறிஞர் அண்ணா அவர்கள் இது தொழிலாளர் நல அரசு எனப் பிரகடனம் செய்தார்.1971-ல் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் மே 1,மே தின விழாவிற்கு அரசு விடுமுறை அளித்தார். இந்தியாவிலேயே முதன் முதலில் மே தினத்தை அரசு விடுமுறையாக அறிவித்தவர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.

தொழிலாளர் முன்னேற்றச்சங்கப் பேரவை:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற் சங்கங்கள், அறிஞர் அண்ணாவின் காலம்வரைத் தனித்தனியாக இயங்கி வந்தன. தமிழ் நாட்டில் திராவிட இயக்க சிந்தனை உடைய பல ஆயிரம் தொழிலாளர்கள் பல்வேறு அமைப்புகளில் ,இயக்கங்களில் செயல்பட்டு வந்தனர்.அவர்களை ஒருங்கிணைத்து ஒரே இயக்கமாக செயல்பட விரும்பிய கழகத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.1970-ல் அதற்காக ஒரு குழுவை திருவாளர்கள் மன்னை ப.நாராயணசாமி,காட்டூர் கோபால் எல்.ஜி.கிருஷ்ணன்,எஸ்.ராகவானந்தம் எம். எல்.சி., ஜி.பராங்குசம் எம்.எல்.சி, மா.வெ. நாராயணசாமி, சு,துரைசாமி, ச.ராமச்சந்திரன், எஸ்.மஸ்தான், எம்.செல்வராஜ், பா.மாணிக்கவாசகம், அ.பாலு ஆகியோர் கொண்டதாக அமைக்கப்பட்டது.

குழு ஆய்வில் தமிழ் நாடு முழுவதும் 189 சங்கங்களில் சுமார் 121311 பேரிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டது.அதன்படி பல இலட்சம் திராவிட இயக்க சிந்தனையுடைய தொழிலாளர்நலன்காக்கஒருமையஅமைப்பு உருவாக்க வேண்டியது அவசியம் என முடிவு செய்யப்பட்டது.அதன்படி 1.5.1970,மே தினத்தில் தலைவர் கலைஞர் அவர்கள், சென்னை எழும்பூர் ஒயிட் மெமோரியல் ஹாலில் தொ.மு.ச.பேரவையை துவக்கி வைத்தார்.மன்னை நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற நிகிழ்ச்சியில்

தொ.மு.ச.கொடியினை நாவலர் நெடுஞ்செழியன் ஏற்றிவைத்தார்,

தொ.மு.ச. பேரவையின் நிர்வாகிகள்:

தொ.மு.ச பேரவை 1970-ல் துவங்கப்பட்டபோது அதன் முதல் தொழிலாளர் அணிச்செயலாளராக பேராசிரியர் க.அன்பழகன் அவர்களும், நாஞ்சில் கி.மனோகரன் அவர்கள் தலைவராகவும், காட்டூர் கோபால் அவர்கள் பொதுச்செயலாளராகவும் பொறுப்பேற்று பணியாற்றினர்.

தி.மு,கழகத்தின் தொழிலாளர் அணிச்செயலாளர் பேராசிரியரைத் தொடர்ந்து ,ஏ.கோவிந்தசாமி, ஆற்காடு நா. வீராசாமி, வி. எஸ். கோவிந்தராசன், க. சுப்பு, , மா. வெ. நாராயணசாமி, பேரூர் ஆ.நடராசன் மற்றும் சிங்கார ரத்தின சபாபதி ஆகியோர் பொறுப்பேற்று பணியாற்றினர்.

தொ.மு.ச. முதல் தலைவராக பொறுப்பேற்று நாஞ்சில் கி.மனோகரன் அவர்களைத் தொடர்ந்து ,ஜி.பராங்குசம்,இ. ஆறுமுகம், செ.குப்புசாமி, பேரூர் ஆ.நடராசன்,வே.சுப்புராமன் ஆகியோர் பேரவையின் தலைவராக பொறுப்பேற்று பணியாற்றினர்.

தொ.மு.ச.பேரவையின் முதல் பொதுச்செயலாளராக காட்டூர் கோபால் அவர்களைத் தொடர்ந்து ,க.சுப்பு, சு.துரைசாமி, வை.பெருமாள், மு.சண்முகம் ஆகியோர் பொறுப்பேற்று பணியாற்றினர். திரு.மு.சண்முகம் அவர்கள் தற்போது பொதுச்செயலாளராக பணியாற்றுகின்றார்.

தற்போது,இத்தகைய சிறப்புகளைப் பெற்ற தலைவர்களின் உழைப்பால் வளர்ந்து,பல்வேறு துறைகளில் பணியாற்றும் இலட்சக்கணக்கான தொழிலாளர் நலன்களுக்காகப் போராடி வெற்றி பெற்று அகில இந்திய அளவில் 19 மாநிலங்களில் 24,00,000 உறுப்பினர்களைப் பெற்று பேரியக்கமாக செயல்பட்டு வருகின்றது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் ஒரு முகமை(Agency)யாக ILO சர்வதேச தொழிலாளர் அமைப்பு செயல்பட்டு வருகிறது.முதல் உலகப்போர் முடிவுற்ற நிலையில் ,தொழிலாளர்களின் சமூக பொருளாதார வகையில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதியை நிலை நாட்ட ,அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட உருவாக்கப்பட்டதுதான் சர்வதேச தொழிலாளர் அமைப்பு(ILO) ஆகும்.இந்த அமைப்பு சர்வதேச உறுப்பு நாடுகளால் அக்டோபர் 1919-ல் துவங்கப்பட்டது.இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் அமைந்துள்ளது.

இதில் ,ஐக்கிய நாடுகள் அமைப்பில்(UN) இணைந்துள்ள 193 நாடுகளில் ,187 நாடுகள் ILOவில் உறுப்பினர்களாக உள்ளனர். சர்வதேச தொழிலாளர் அமைப்பு கீழ்க்கண்ட கொள்கைகளைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

சர்வதேச தொழிலாளர்களின் அளவீடுகள் பற்றிய நோக்கம், இணக்கமாக அணுகுதலை உறுதிப்படுத்துவது, உருவாக்குவது, நிலைத்த வேலை, உலக அளவிலான சுதந்திரம், சமத்துவம்,பாதுகாப்பு,கண்ணியம் காப்பாற்றப்படுவது ஆகியவை ILOவின் முதன்மைக் கோட்பாடுகளாகும்.

சர்வதேச தொழிலாளார் அமைப்பு தொழிலாளர் நலன்,உரிமை,பாதுகாப்பு சார்ந்த 189 தீர்மானங்களை இதுவரை நிறைவேற்றி உள்ளது.அதில் எட்டுத் தீர்மானங்கள் தொழிலாளர்களின் அடிப்படை கோட்பாடுகள் உரிமை சார்ந்தவை.அதில் முதன்மையானவை இரண்டு.

ஒன்று தீர்மானம் 87.சங்கம் அமைக்கும் உரிமை (1948ல்)

இரண்டாவது தீர்மானம் 98.கூட்டு பேர சக்தியை பயன்படுத்தும் உரிமை(1949ல்)

மேற்கண்ட இரண்டு முக்கிய தீர்மானங்களை 157 நாடுகள் அங்கீகரித்துள்ளன. 1948, 1949-ல் நிறைவேற்றப்பட்ட இந்த இரு தீர்மானங்களை இந்தியா,சீனா,மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 30 நாடுகள் இதுவரை

ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் மத்திய சங்க அமைப்புகள்:

இந்திய வரலாற்றில் முதலில் உருவான அமைப்பு அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ்(AITUC) லாலா லஜபதிராய் அவர்கள்தலைமையில்1920ல் பம்பாய் நகரில் துவங்கப்பட்டது.அதன் தலைவர்களாக ஜவஹர்லால் நேரு,சுபாஷ் சந்திரபோஸ்,வி. வி.கிரி. ஆகியோர் பதவி வகித்துள்ளனர். பின்னர் அமைப்பில் இடதுசாரி தலைவர்களின் ஆதிக்கம் அதிகரித்ததை அடுத்து 1947 மே-3 அன்று இந்திய தேசிய தொழிற்சங்கம்(INTUC) துவங்கப்பட்டது. ஜவஹர்லால் நேரு,ஜெகஜீவன்ராம் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

அதே போல் இந்திய தொழிற்சங்க காங்கிரஸில்(AITUC) கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆதிக்கத்தை எதிர்த்த சோசலிஸ்ட் தலைவர்கள் அதிலிருந்து விலகி 1948 டிசம்பரில் இந்து தொழிலாளர் சங்கம்(HMS)என்ற அமைப்பை கல்கத்தா நகரில் துவங்கினர்.

தொடர்ந்து AITUC-ல் இணைந்து பணியாற்றிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் இந்தியா-சீனா(1962) போர் விவகாரத்தில், கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவின் காரணமாக தொழிற்சங்கத்திலும் பிளவு ஏற்பட்டது.அதன் விளைவாக 1970-ல் இந்திய தொழிற்சங்க மையம்(CITU) துவங்கப்பட்டது.பின்னர் தீவிர இடதுசாரி சிந்தனை கொண்ட பல அமைப்புகள் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட BMS அமைப்பு தொடங்கப்பட்டது.அகில இந்திய தொழிலாளர் முன்னனி(பார்வர்ட் பிளாக்) துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

மத்திய சங்க அரங்கில் தமிழ் நாட்டின் தலைவர்கள்:

இருபதாம் நூற்றாண்டில் ,இந்திய தொழிற்சங்க அரங்கில் தமிழ் நாட்டைச்சேர்ந்த தலைவர்களின் பங்களிப்பு பெருமை கொள்ளத்தக்கது. பிரிட்டிஷ் இந்தியா காலந்தொட்டு தற்போதுவரை உழைப்பு,தியாகம்,சாதனை என அனைத்து தளத்திலும் அவர்கள் தங்களது தனித்த அடையாளங்களை வரலாற்று முத்திரைகளாக தடம் பதித்து சென்றுள்ளனர்.அவர்கள் தேசிய சிந்தனை கொண்ட தலைவர்கள்,இடதுசாரி பொதுவுடமை தலைவர்கள் மற்றும் சமூக நீதி ,சுயமரியாதை,பகுத்தறிவு கோட்பாடுகள் கொண்ட திராவிட இயக்க சிந்தனை கொண்ட தலைவர்கள் என மூன்று வகையான நெறிகளையுடைவர்களாக இருந்தனர்.

குறிப்பாக ரயில்வே தொழிலாளர்கள் மற்றும் அஞ்சல் தந்தி தொலைபேசி தொழிலாளர்கள் மத்தியில் தமிழ் நாட்டைச்சேர்ந்த தலைவர்களின் பங்களிப்பு முதன்மையானதாகவும் பாராட்டத்தக்கதாகவும் இருந்தது. அஞ்சல் தந்தி தொலைபேசி தொழிலாளர்கள் தலைவர்களாக உருவாகிய திராவிட இயக்கத் தோழர்கள் சிலரைப் பற்றிய குறிப்புகள்...

தலைவர் கே.ஆர்.

அவர்களில் முதன்மையானவர் திரு. கே.ராமமூர்த்தி அவர்கள்.நெல்லை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்தவர் .அஞ்சல் துறையில் 1936-ல் பணியில் சேர்ந்து பணியாற்றியவர்.துவக்கம் முதலே தொழிற்சங்கத்தில் ஆர்வமுடன் பணியாற்றியவர்.மிக இளம் வயதிலேயே முதல் ஊதியக்குழுவில் IPTU சார்பில் ஊழியர் தரப்பில் 1946-ல் சாட்சியம் அளித்தார்.UPTU 1947-ல் உருவானது. அதன் துணைப்பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.பின்னர் அதன் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.1960-ல் 5 நாள் வேலை நிறுத்தம் தொடங்கியபோது கைது செய்யப்பட்டார். கே.ஆர். மற்றும் தலைவர்களுக்கு கைகளில் விலங்கிடப்பட்டு ,கை கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நீதிமன்றம் அழைத்து வந்தனர். தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்.தொடர்ந்து NFPTE தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் ஜனநாயக முற்போக்கு

அமைப்பை உருவாக்கி ,உள்ளிருந்தே போராடினார்.1968 போராட்டத்தில் உருவான கருத்து மோதலால் 1969-ல் FNPTO எனும் புது அமைப்பை உருவாக்கி செயல்பட்டார். மத்திய அரசு ஊழியர்களின் 2-வது,3வது மற்றும் 4-வது ஊதியக்குழுவிற்கு அஞ்சல் தந்தி ஊழியர்களின் கோரிக்கைகளை முன்வைப்பதில்,அவற்றிற்காக வாதாடி வெற்றி பெறுவதில் முழுமையான பங்காற்றினார்.

அப்போதைய அமைச்சர்கள் டி.டி. கிருஷ்ணமாச்சாரி,வி.வி.கிரி மற்றும் ரஃபி அகமத் கித்வாய் ஆகியோரிடம் நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தி கோரிக்கைகளை வென்றிருக்கிறார். கே.ஆர்.அவர்கள் தலைமையில்தான் ஓய்வு பெற்றோர் குடும்ப ஓய்வூதியம் அமலானது.ஞாயிறு வார விடுமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. ED ஊழியர்கள் கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைத்தது.பல சர்வதேச மாநாடுகளில் இந்தியாவின் பிரதி நிதியாக பங்கேற்று சிறப்பித்தவர்.

ஏ.எஸ்.ராஜன்

தமிழகத்தை சேர்ந்த ஏ.எஸ்.ராஜன் அஞ்சல்துறை தொழிற்சங்கத்தில் பணியாற்றிய முக்கிய தலைவர்.பேரறிஞர் அண்ணாவுடன் நட்பு கொண்டவர். ஆங்கிலத்தில் சிறந்த பேச்சாற்றல் கொண்டவர்,துவக்கத்தில் தமிழ்நாடு அஞ்சல் ஊழியர் மாநிலச்செயலாளர்,பின்னர் மத்திய சங்கப்பொதுச்செயலாளர் என திறம்பட பணியாற்றியவர்.1947-ல் UPTWஅமைக்கப்பட்டபோது அதன் துணைப்பொதுச்செயலாளராகப் பணியாற்றினார்.1949-ல் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட ஐவர் குழுவில் இவரும் ஒருவர்.1971-ல் நடைபெற்ற(கல்கத்தா) சம்மேளன மாநாட்டில்NFPTEயின் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டு திறம்பட பணியாற்றினார்.தலைவர்கள், கே.ஆர்., கே. ஜி.போஸ்., ஓ.பி.குப்தா ஆகியோருடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

கடலூர் என்.சி.அம்பலவாணன்

தமிழ் நாட்டைச்சார்ந்த என். சி.அம்பலவாணன் அஞ்சல்துறை தொழிலாளர் சங்கத்தில் பணியாற்றிய முன்னனித் தலைவர்.கடலூரைச்சேர்ந்த இவர் திராவிட இயக்க சிந்தனையாளர். அஞ்சல்துறை தொழிற்சங்கத்தில் (NFPTE) முதலில் மாநிலத்தலைவராகப் பணியாற்றி பின்னர் அஞ்சல் ஊழியர்களின் அகில இந்திய தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். நெருக்கடியான காலகட்டங்களில் இயக்கத்தை திறமையாக வழி நடத்தியவர்.

ஜி.லெட்சுமணன்

ஜி.லெட்சுமணன் அஞ்சல்துறையில் தமிழ் நாட்டின் மாநிலச்செயலாளராகவும்,மத்திய செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.அகில இந்திய மாநாடுகளில் அஞ்சல் ஊழியர் நலன்களுக்காக வாதாடியவர்.இவர் திராவிட இயக்க நிந்தனையாளர்.தலைவர்கள் கே.ஆர்., மற்றும் கே.ஜி.போஸ் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.1974-ல் நாடாளுமன்ற மாநிலங்களவைக்கும் 1980-ல் மக்களவைக்கும் தேர்வு செய்யப்பட்டவர். மக்களவை துணைத்தலைவராகவும் தி.மு.க.சார்பில் தேர்வு செய்யப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

ஏ.ஜி.பசுபதி

ஏ.ஜி.பசுபதி தமிழ் நாட்டின் அஞ்சல் துறையில் பணியாற்றிய முன்னனித் தலைவர்.கருப்புச்சட்டைக்கு சொந்தக்காரர். தீவிர திராவிட இயக்க சிந்தனையாளர்.மாநில அஞ்சல் தபால்காரர் சங்கத்தின்(NFPTE) செயலாளராக நீண்டகாலம் பணியாற்றியவர். பின்னர் அகில இந்திய சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் சம்மேளனக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். சம்மேளன பொதுச்செயலாளராக இருந்த ஆ.பிரேமநாதன் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார்.

ஆ.பிரமநாதன்– டி.ஞானையா

மதுரையைச்சேர்ந்த ஆ.பிரேமநாதன் அவர்களும் கோவையச்சேர்ந்த டி.ஞானையா அவர்களும் இடது சாரி சிந்தனையுள்ள தலைவர்கள்.இருவரும் .NFPTE சம்மேளனத்தின் பொதுச்செயலாளர்களாக நெருக்கடியான காலகட்டங்களில் அடுத்தடுத்து பதவியேற்று சிறப்பாக பணியாற்றியவர்கள்.அஞ்சல் ஊழியர் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்குமான பிரச்சனைகளுக்காக பல போராட்டங்களை தலைமையேற்று நடத்திய தலைவர்கள். இன்னும் அஞ்சல் துறையில் தமிழ் நாட்டின் சார்பாக தொழிற்சங்க பணியாற்றிய தலைவர்கள் நிறைய இருக்கின்றார்கள்.

புதுவை கே.எக்ஸ்.லாரன்ஸ்

தமிழ் நாட்டில் அஞ்சல் தந்தித் துறையில் தொழிற்சங்கத் தலைவராகப் பணியாற்றிய பல தலைவர்களில் முதன்மையானவர். புதுவையைச்சேர்ந்த கே.எக்ஸ்.லாரன்ஸ் அவர்கள் .தந்தி தொலைபேசிப்பிரிவில் பணியாற்றிய தொழிற்சங்கத் தலைவர். தமிழ் நாடு மட்டுமல்ல அகில இந்திய தலைவர்கள் பலரை உருவாக்கிய தலைவர். தந்தி தொலைபேசி ஊழியர்களின் வாழ்க்கைத்தரம் உயர கோரிக்கைகளை வடித்தெடுத்துக் கொடுத்த பிதாமகன் அவர். திராவிட இயக்க சிந்தனையாளர்.பற்றாளர்.

எஸ்.கனகசொரூபன்

எஸ்.கனகசொரூபன் கடலூரைச்சேர்ந்த எஸ்.கனகசொரூபன் தொலைபேசி தொழிற்சங்கப்பிரிவில் மூத்த தலைவர். தலை சிறந்த போராளி.நிர்வாகத்தின் அடக்குமுறைக்கு ஆளானவர்.வேலை நிறுத்தப்போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.நிர்வாகத்தின் பல்வேறு தண்டனைகளை ஊழியர் நலன்களுக்காக ஏற்றுக்கொண்டவர். ஊழியர்களின் அன்பைப் பெற்றவர்.அகில இந்திய அளவில் இயக்கத்தின் வழிகாட்டியாக சிறப்பாக பணியாற்றியவர்.இளைஞர்களை ஊக்குவித்து தலைவர்களை உருவாக்கியவர். பேரறிஞர் அண்ணா,தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

ஆர்.வெங்கடராமன்

ஆர்.வெங்கட்ராமன் கோயம்புத்தூரில் தொலைபேசிப்பிரிவில் பணியில் சேர்ந்த ஆர்.வெங்கட்ராமன் அவர்கள்,இளமைக் காலந்தொட்டு தொழிற்சங்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்.போராட்டக் குணம் நிறைந்த ஒரு போராளி.துவக்கத்தில் ஆற்றல் மிகுந்த ஒரு செயல்வீரராக தமிழ் மாநில சங்கத்தில்(FNPTO) பொறுப்பேற்றார். தொடர்ந்து அகில இந்திய தலைவராகப் பொறுப்பேற்று பணியாற்றினார்.1986 முதல் FNPO வின் சம்மேளத்தின் பொதுச்செயலாளராக 12 ஆண்டுகள் பணியாற்றினார்.

திராவிட இயக்கப்பற்றாளரான ஆர்.வெங்கட்ராமன் 1975-ல் கோவை தொலைபேசி மனமகிழ் மன்றத்திற்கு தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து கூட்டம் நடத்தினார்.தற்போது 'தொ.மு.ச.'பேரவை மத்திய சங்க அங்கீகாரம் பெறுவதற்கு உறுதுணையாக முக்கிய பங்காற்றினார்.தற்போதும் தொ.மு.ச.பேரவையின் அலுவலக செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

வே.சுப்புராமன்

வே.சுப்புராமன்தமிழ்நாட்டின்சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர் வே.சுப்புராமன். இவர் 1965-ல் தந்தை பெரியாரின் ஈரோட்டு மண்ணில் தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்தார்.பணியில் சேர்ந்த காலந்தொட்டு தொழிற்சங்கப்பணிகளில் ஆர்வமுடன் பங்கேற்றார்.இவர் திராவிட இயக்க சிந்தனையாளர்.திரு. வே.சுப்புராமன் தேசிய சங்கத்தில் பணியாற்றியபோது,போனஸ்,ஊதிய உயர்வு,பதவி கேடர் சீரமைப்பு உள்ளிட்ட தொலைத்தொடர்பு ஊழியர் கோரிக்கைகளுக்காக பல்வேறு

போராட்டங்களை,வேலை நிறுத்தங்களை முன்னின்று நடத்தினார்.4-வது ,5-வது ஊதியக்குழுவிற்கான கோரிக்கை பட்டியல் தயாரிப்பதில் மத்திய சங்கத்திற்கு உறுதுணையாக இருந்தார்.5-வது ஊதியக்குழுவில் 40% ஊதிய உயர்வு பெறுவதிலும் சென்னை நகரம் A1 தகுதி பெறவும் தலைவர் கலைஞர் ,செ.குப்புசாமி ஆகியோர் மூலம் முயற்சி மேற்கொண்டார். அதற்கு வெற்றியும் கிடைத்தது.

பி.எஸ்.என்.எல். தொழிற்சங்கங்களும் திராவிட இயக்கமும்:

2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றிய அரசின் தொலைதொடர்புத் துறை பொதுத்துறையாக மாற்றப்பட்டது. அப்போது தொலைதொடர்பு ஊழியர் முன்னேற்ற சங்கம்(TEPU) ,தொ.மு.ச.பேரவையில் இணைந்து தொடங்கப்பட்டது.வே.சுப்புராமன் அதன் பொதுச்செயலாளராகப் பணியாற்றினார். திரு.செ.குப்புசாமி எம்.பி.அவர்கள் தலைமையில் இயக்கத்தை வழி நடத்தினார்.

2001-ல் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் ஊழியர்கள்,அதிகாரிகளுக்கு பென்சன் திட்டத்தை உறுதி செய்வதற்காக நடந்த போராட்டத்தில் தொலைதொடர்பு தொ.மு.ச.கலந்து கொண்டது.அந்த போராட்டத்தில் மறியலில் ஈடுபட்டு அதன் பொதுச்செயலாளர் வே.சுப்புராமன் உள்ளிட்டோர் கைதானார்கள். அனைவருக்கும் பென்சன் திட்டத்தை அரசு உறுதி செய்தது.

2002-ல் முதல் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையில் ஆர். வெங்கட்ராமன்,வே.சுப்புராமன் இருவரும் பங்கேற்று சிறப்பான உடன்பாட்டை ஏற்படுத்தினர்.ஊழியர்களின் போனஸ் பிரச்சனையிலும் தீர்வு கண்டனர்.1.1,.2007 இரண்டாவது ஊதிய உயர்விலும,50% IDA இணைப்பிலும் அன்றைய மத்திய அமைச்சர் ஆ.இராசாஅவர்களின்முழுஒத்துழைப்போடு பெற்றுத்தந்தனர்.ஊழியர்களுக்கு 4 பதவி உயர்வு திட்டத்தைப் பெற்றுத்தந்தனர். தொலைத்தொடர்பு பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் சி.பி.எம்.சி.பி.ஐ.சங்கங்கள் முதன்மைச்சங்கங்களாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் ,தொ.மு.ச.ஆதரவுடன் அதன் தலைவர் திரு.செ.குப்புசாமி எம்.பி.அவர்கள் வழிகாட்டலில் ஆர்.வெங்கட்ராமன்,வே. சுப்புராமன் இருவரும் இவற்றை சாதித்துக்காட்டினர்.

தொ.மு.ச. மத்திய சங்க அங்கீகாரம்:

வே.சுப்புராமன் அவர்கள் பொதுச்செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் 14 மாநிலங்களில் தொலைத்தொடர்பு(TEPU) தொ.மு.ச.வைத் தொடங்கி ஆர்.வெங்கட்ராமன் அவர்களின் ஒத்துழைப்போடு நடத்தினார். அது தற்போது 19 மாநிலங்களில் விரிவடைந்துள்ளது.அதனடிப்படையில் முன்பு 5 மாநிலங்களில் செயல்பட்ட தொ.மு.ச.பேரவை தொலைத்தொடர்பு உதவியால் மத்திய சங்க அங்கீகாரத்திற்கான தகுதியைப் பெற்றது.அத்தகைய பணியில் தொ.மு.ச.பேரவைக்கான அங்கீகாரம் கிடைக்க வே.சுப்புராமன்,ஆர். வெங்கட்ராமன்,ந.சுவாமிநாதன்,ஆ. செல்லப்பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் உதவியாக இருந்தனர். திராவிட இயக்க சிந்தனைகள் தொழிற்சங்க வழியில் பரவுவதற்கு இந்த மத்திய சங்க அங்கீகாரம் பெரிதும் உதவுகிறது.தொ.மு.,ச. பேரவைத்தலைவராக வே.சுப்புராமன் அவர்கள்2017 முதல்2021 வரைசெயல்பட்டார். தொ.மு.ச.பேரவைத்தலைவர் என்ற நிலையில் டெல்லியில் மற்ற மத்திய சங்கத் தலைவர்களுடன் தோழமையுடன் நட்பு பாராட்டும் வாய்ப்பு அமைந்தது அவருக்கு.

திராவிட இயக்க சிந்தனையாளர்களின் பங்களிப்பு:

தமிழ் நாடு தொலை தொடர்பு பிரிவில் மூத்த தலைவர்கள் புதுவை திரு.கே.எக்ஸ்.லாரன்ஸ் மற்றும் கடலூர் எஸ்.கனகசொரூபன் ஆகியோர் வழிகாட்டுதலில் ஆர்.வெங்கட்ராமன் தலைமையில் மத்திய தொழிற்சங்க

அரங்கிலும் மாநில தொழிற்சங்க அரங்கிலும் பணியாற்றிய திராவிட இயக்க சிந்தனையாளர்கள், பற்றாளர்கள் என்ற நிலையில் தங்கள் உழைப்பை அர்ப்பணித்த தலைவர்கள்

திருவாளர்கள் மா.ஆண்டியப்பன் வே.சுப்புராமன்

வா.மு.ரசூல்முகைதீன் ஐ.பி.தியாகராசன்

ஜி.என். நாகேந்திரன் இரா.மாரிமுத்து

க.வள்ளி நாயகம் ம.தங்கவேலு

ஏ.எஸ்.சையது அலி ஆ.செல்லப்பாண்டியன்

சி.இளங்கோவன்

ந.சுவாமிநாதன்

டி.தேவராசன் எம்.எஸ்.அந்தோணிசாமி

டி.சந்திரசேகரன் ஜெ.வேம்பு

என நீண்ட பட்டியல் தொடரும்.

இவர்களோடு இன்னும் பல தலைவர்களுடைய உழைப்பு, இந்த இயக்கத்திற்கு ,அதன் தொழிலாளர்களுக்கு, உழைக்கும் வர்க்கத்திற்கு பயன்பட்டது.ஐம்பது ஆண்டு கால தொழிற்சங்க வரலாற்றில் இத்தகைய தலைவர்களின் உழைப்பும் தியாகமும் தடம் பதித்தது.அழியாத இடம் பிடித்தது.

பொதுவுடைமைக் கருத்தோட்டம் உள்ள தலைவர்கள்:

இந்திய அஞ்சல், தொலைதொடர்பு சங்கத்தைப் பொறுத்தளவில், அகில இந்திய தலைவர்களாக இருந்த தோழர்கள் தாதா கோஷ், ஓ.பி.குப்தா, கே.ஜி.போஸ், தோழர் ஜெகன், தோழர்.கா.முக்தியாலு, தோழர் ஆர். கிருஷ்ணமூர்த்தி என ஒரு பெரிய பட்டியல் உண்டு.அவர்களை மட்டும் விரித்து மிக விரிவான வரலாறாக எழுத இயலும்.

முடிவுரை:

அஞ்சல் தந்தியின் துவக்க காலத்தில் 1940-ல் தொழிலாளர் இயக்கத்தலைவர்கள் மூத்த முன்னோடிகள் ஒற்றுமையைக் கட்டமைக்க அரும்பாடு பட்டனர்.சிதறிக் கிடந்த சங்கங்களை ஒன்றிணைத்தனர்.பல்வேறு கருத்தோட்டம் கொண்டவர்களையும் ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் ஒரே அமைப்பாக(NFPTE) கொண்டு வந்து உருக்குபோல வலிமையான கட்டமைப்பாக உருவாக்கினர்.தங்களது அயராத உழைப்பால் அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றனர். திராவிட இயக்க கருத்தியல் கொண்ட தோழர்களும், தலைவர்களும் அமைப்புக்கு முழு ஆதரவைக் கொடுத்தனர்.

ஆனால் அத்தகைய கட்டமைப்பும் வெற்றியும் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை.1954-லேயே சூழ்ச்சியும் புறக்கணிப்பும் தலைதூக்கியது. உண்மையான உழைப்பும் ,தியாகமும் ,ஜனநாயகமும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் 1969-ல் அமைப்பில் பிளவு ஏற்பட்டு FNPTO என்ற புதிய அமைப்பு தோன்றியது.அடுத்து 1977-ல் பாரதிய சங்கம் ஜனசங்க சார்பு நிலைப்பாட்டால் BPTEF சம்மேளனம் உருவானது. ஒன்று, இரண்டு மற்றும் மூன்று சங்கங்களாக உருவெடுத்தது.2000-ஆம் ஆண்டில் பி.எஸ். என்.எல்.பொதுத்துறையாக மாறியபோது 9 சங்கங்கள் பதிவுபெற்றன.அது 2008-ல் 14 ஆக உயர்ந்தது.தற்போது 18 சங்கங்கள் களத்தில் உள்ளன.முதல், இரண்டு சங்கங்கள் மட்டுமே அங்கீகாரம் பெற்றவையாக உள்ளன. இரண்டுமே பொதுவுடமை இயக்க ஆதரவு சங்கங்கள்.இந்தியா போன்ற நாட்டில் பல கோடி இளைஞர்கள் வேலையின்றி தவிக்கும் சூழலில் கடந்த 2019-ல் இன்றைய ஆளும் பி.ஜே.பி.அரசு 80,000 ஊழியர்களை விருப்ப ஓய்வு திட்டத்தில் வெளியேற்றியது. இரு பெரும் பொதுவுடமை சங்கங்கள் கனத்த இதயத்தோடு வழியனுப்பி வைத்தன. அனுதாப அறிக்கை மட்டுமே விடமுடிந்தது.

பிரிட்டிஷ் இந்தியாவில் 1920-ல் தொடங்கப்பட்ட முதல் தொழிலாளர் இயக்கம், சுதந்திரமான அனைவருக்குமான அனைத்து கருத்தோட்டங்களையும் உள்ளடக்கிய உயரிய கோட்பாட்டுடன் உருவான ஏஐயூடிசி இன்றைக்கும்

இருக்கிறது.அதிலிருந்து பிரிந்து பல இயக்கங்கள் தனித்து சிதறிக்கிடக்கின்றன. விடுதலை பெற்ற இந்தியாவில் சங்கங்கள் பல்கிப் பெருகி இருப்பதுதான் கண்ட வளர்ச்சியும் முன்னேற்றமும்.தலைவர்களின் அரசியல் மேலாதிக்கம்,அவற்றின் தன்முனைப்பு ,அதிகாரம் ஆகியவை ஒட்டு மொத்த உழைக்கும் வர்க்கத்தையே கூறு போட்டு கூறு போட்டு சிதைத்து விட்டனர்.

மனித இனத்தின் மாபெரும் சிந்தனையாளர் காரல்மார்க்ஸ் அவர்கள் கூறிய இந்தியா பற்றிய கருத்துகளை இந்திய பொதுவுடமைவாதிகள் முழுமையாக செயல்படுத்த முனையவில்லை."இந்திய சமுகத்தின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் தடையாக இருப்பது இந்திய சமூகத்தில் அமைக்கப்பட்ட சாதி,மதக்கட்டமைப்பு " என விவரித்தார்,எச்சரித்தார்.

அதைத்தான் மாபெரும் பகுத்தறிவுச்சிந்தனையாளர் தந்தை பெரியார் அவர்கள் கடந்த நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே முழங்கினார்.தனது இறுதி மூச்சுவரை போராடினார்.தந்தை பெரியார் தனது சிந்தனையால் சமூக மாற்றத்திற்கான அடித்தளத்தை தமிழகத்தில் வலுவாக அமைத்துவிட்டு சென்றிருக்கிறார். ஒட்டு மொத்த பொதுத்துறையையும் தனியார்மயமாக்குவது,அதன் மூலம் இட ஒதுக்கீடு இல்லாமல் ஆக்குவது,தொழிலாளர்கள் போராடிப்பெற்ற உரிமைகளப் பறிப்பது என ஒன்றிய மத்திய அரசு தொழிலாளர்களுக்கு எதிராக பல செயல்பாடுகளைச்செய்து கொண்டிருக்கிறது.

எனவே இன்றைய சூழலில் ஒட்டு மொத்த இந்தியாவை,பாசிச மதவாத சக்திகளிடமிருந்து மீட்டெடுக்க பெரியாரிய,அம்பேத்கரிய மற்றும் இடதுசாரி பொதுவுடமைவாதிகள் ஓரணியில் திரளவேண்டியது கட்டாயம் இந்திய அளவில் தமிழ் நாடுதான் அதற்கு முன்னுதாரணம்.தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 'திராவிட மாடல்தான் 'அதற்கான எடுத்துக்காட்டு. அதற்கான களம் காத்திருக்கிறது.உழைக்கும் மக்களை மானமுள்ள சுயமரியாதைக்காரர்களாக மாற்றுவதே இலக்கு .அந்த இலக்கினை அடையும்வரை வாழ்க்கையே போர்க்களம்,வாழ்ந்துதான் பார்க்கணும்! போர்க்களம் மாறலாம்,போர்கள் மாறாது.

உசாத்துணை:

1. பாரதிதாசன் பாடல்கள், முதல் தொகுதி, சாய்ந்த தராசு கவிதைத் தலைப்பு.

2. UN World Poverty Statistics Global Poverty Report 20 Jan 2020 Para 1& Para 6

3. தந்தை பெரியார் 'குடி அரசு 'அறிக்கை- 14-5-1933

4. சுப.வீரபாண்டியன், திராவிடர் இயக்கமும் தொழிற்சங்கமும்.

5. தந்தை பெரியார், விடுதலை, 9.5.1961

6. தந்தை பெரியார், விடுதல, 8.10.1953

7. சுப.வீரபாண்டியன், திராவிடர் இயக்கமும் தொழிற்சங்கமும்.

8. மாபெரும் தமிழ்க்கனவு, தி இந்து தமிழின், தமிழ்திசை நூல், பக்கம் 413

ஆசிரியர் குறிப்பு:

ஆ.செல்லப்பாண்டியன், இவர் மதுரை மாவட்டம் திருவேடகத்தில் 1949இல் பிறந்தவர். தொலைத்தொடர்புத் துறையில் 40 ஆண்டுகள் பணியாற்றி, 2008-ல் முதுநிலை மேற்பார்வையாளராகப் பணிநிறைவு பெற்றவர். தொழிற்சங்கத்தில் 50 ஆண்டுகள் கடந்து பொதுவாழ்க்கைப் பயணம் செய்தவர். தொழிற்சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ள இவர், தொலைத்தொடர்புத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தில் 16 ஆண்டுகள் மாநிலச்செயலாளராகப் பணியாற்றியுள்ளார். அகில இந்தியச் சங்கத்தில் பொருளாளர், துணைப்பொதுச் செயலாளர், மற்றும் அகில இந்தியச் செயல் தலைவர் பொறுப்புகளில் இருந்தவர். திராவிட இயக்க பற்றாளர்.. இந்தியாவில் 14 மாநிலங்களில் நடைபெற்றுள்ள அகில இந்திய மாநாடுகள், கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். ■

சமகாலப் போலிச்செய்திகளின் போக்கு: இலங்கையில் அடையாளங் காணப்பட்டவை மீதான ஓர் ஆய்வு

வி. விமலாதித்தன்

தற்காலிக விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை

ஆய்வுச்சுருக்கம்:

போலிச்செய்திகள் என்பவை செய்தி என முன்னிறுத்தப்படும் பொய்யான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்கள் ஆகும். தற்காலத்தில் தவறானதகவல் *(Mis-information)*, திரிபுபடுத்தப்பட்ட தகவல் *(Dis-information)*, தீங்கானதகவல் *(Mal-information)* எனும் மூன்று பிரதான பிரிவுகள் போலிச்செய்திகளில் உள்ளடங்குகின்றன. ஊடகத்துறையின் செல்நெறியில் தவறான தகவல்களும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களும் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்த போதும், கடந்த சில ஆண்டுகளிலேயே அவை பல்கிப்பெருகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்காலத்தில் ஊடகங்கள் எண்ணிக்கையில் அதிகரித்துக் காணப்படும் நிலையில், அவற்றிலிருந்து பரவுகின்ற போலிச்செய்திகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமை ஒரு பாரிய பிரச்சினையாக நோக்கப்படுகின்றது. இவற்றின் காரணமாக சமூகத்தில் ஏற்படும் தாக்கத்தினால் பொதுமக்கள் பாதிப்புறுவதுடன் சமூக அமைதி, இனங்களுக்கு இடையேயான நல்லுறவு போன்றனவும் கெடுகின்றன. இந்நிலையில் பிராந்திய ரீதியில் அடையாளம் காணப்பட்ட சமகால போலிச்செய்திகளின் இயல்பு, போக்கு, நோக்கம் முதலானவை ஆய்வுக்கு உள்ளாக்கப்படவேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

சமூகவலைத் தளங்களில் பரப்பப்படுவனவும் இலங்கை சார்ந்தனவுமான சமகாலப் போலிச் செய்திகளை அடையாளம் காணும் பணிகள் பல்வேறு தரப்பினராலும் முன்னெடுக்கப்படுகின்றன. *"Fact Seeker"* எனும் பெயரிலான செயற்றிட்ட மூடாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால், *01.02.2021* ஆம் திகதியிலிருந்து *13.10.2021* ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட *151* செய்திகளை பிரதான ஆதாரமாகக் கொண்டு சமூக வலைத்தளங்களில் பரவுகின்ற சமகாலப் போலிச்செய்திகளை ஆராய்வதை இக்கற்கை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. தரவுகளைத் திரட்டியும் பகுத்தும் நோக்குவதற்கு பகுப்பாய்வு முறையியலும் விபரிப்புச் செயற்பாட்டிற்கு விபரண ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை

*(*இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் (Swami Vipulananda Institute of Aesthetic Studies) கடந்த ஆண்டு ஒழுங்கு செய்த ஆய்வரங்கில் இது சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், இதுவரை அச்சிலோ, மின்னூல் வடிவிலோ இது வெளியிடப்படவில்லை. இப்போது திராவிடப் பொழிலில் முதன் முறையாக அச்சில் வருகிறது.)*

சார்ந்த சமகாலப் போலிச்செய்திகளது இயல்புகள், விடயப்பரப்புகள், பின்னணி, போக்கு ஆகியவை எவை என்ற ஆய்வுப் பிரச்சினையை முன்வைத்து, இதுதொடர்பில் ஏற்பட்டுள்ள ஆய்விடைவெளியை நிரப்பும் நோக்குடன் இக்கற்கை முன்னெடுக்கப்படுகின்றது.[1]

திறவுச்சொற்கள்:

போலிச்செய்தி, திரிபுபடுத்தப்பட்ட தகவல், சமூகவலைத்தளம், பொய்த்தரவு, கொரோனா

I. அறிமுகம்:

போலிச்செய்திகள் என்பவை செய்தி என முன்னிறுத்தப்படும் பொய்யான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்கள் ஆகும். இவை பெரும்பாலும் ஒரு நபர் அல்லது நிறுவனத்தின் நற்பெயரை சேதப்படுத்தும் அல்லது ஏதேனும் வருவாய் மூலம் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. ஊடகத்துறையில் நெடுங்காலமாகத் தொடரும் போலிச்செய்திப் பிரச்சினை, கடந்த தசாப்தத்தில் அதிகரித்த சமூக ஊடகப் பயன்பாடு காரணமாக பாரியளவில் அதிகரித்துள்ளது. போலிச்செய்தி என்பதற்கான வரை விலக்கணம் தொடர்ச்சியான மாற்றத்தைக் கண்டு வருகின்றது. தற்போதைய காலகட்டத்தில் பின்வருவன போலிச்செய்திக்குள் உள்ளடங்குகின்றன:

1. தவறான தகவல் (Mis-information)
2. திரிபுபடுத்தப்பட்ட தகவல் (Dis-information)
3. தீங்கான தகவல் (Mal-information)

தவறான தகவல் (Mis-information) என்பது பொய்யான, செம்மையற்ற, தவறாக வழிநடத்தும் தரவை உள்ளடக்கியதாகும். எனினும் இது தீங்கிழைக்கும் எண்ணத்துடன் பரப்பப்படுவதில்லை. திரிபுபடுத்தப்பட்ட தகவல்(Dis-information) என்பது தீங்கிழைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்படுவதுடன் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது. தீங்கான தகவல் (Mal-information) என்பது உண்மையை அடிப்படையாகக் கொண்டதுடன் தீங்கிழைக்கும் நோக்கத்தையும் கொண்டது. தவறான தகவல் (Mis-information) என்பது பிறழ்தகவல் என்ற பெயரிலும் திரிபுபடுத்தப்பட்ட தகவல் (Dis-information) ஆனது திட்டமிடப்பட்ட பிறழ்தகவல் என்ற பெயரிலும் சில இடங்களில் குறிப்பிடப்படுகின்றன.

தவறான தகவல் (Mis-information) மற்றும் திரிபுபடுத்தப்பட்ட தகவல் (Dis-information) ஆகியனபின்வரும்தன்மைகளுள்ஒன்றையோ பலவற்றையோ கொண்டிருக்கலாம் (Mis Dis Information) இதழியலாளர் கையேடு: ஆசிய ஊடகவியல் கல்லூரி, பக். 10.):

1. அங்கதம் அல்லது பகடி - ஏமாற்றக்கூடிய சாத்தியமுள்ள ஒரு தகவல் ஆனால் தீங்கு விளைவிக்காதது.
2. தவறாகவழி நடத்தக்கூடியவை - ஒரு தகவலைப்பயன்படுத்தி தனிநபரையோ அல்லது ஒரு விஷயத்தையோ தவறாக சித்தரிக்க முயலுதல்
3. மூல ஆதாரங்கள் மாற்றப்பட்டவை - அசலான மூல ஆதாரங்களை மாற்றிப்பயன்படுத்துதல்
4. புனையப்பட்டவை - முற்றிலும் உண்மையற்ற உள்ளடக்கத்தைக் கொண்டது. தீங்கு விளைவிக்கக்கூடியது.
5. பொய்யான தொடர்புடையவை - தலைப்புகளுக்கும், காணொளிகளுக்கும் அடிக்குறிப்புகளுக்கும் தொடர்பில்லாதிருப்பவை.

6. பொய்யான சூழலையுடையவை - ஒரு அசலான உள்ளடக்கதைப் பொய்யான சூழ் நிலையோடு இணைத்து வெளியிடல்.

7. திரிக்கப்பட்டவை - ஒரு அசலான தகவல் திரிக்கப்படுதல், குறிப்பாக ஒரு புகைப்படத்தையோ அல்லது காணொளியையோ திரித்து ஏமாற்றுதல்.

ஊடகத்துறையின் செல்நெறியில் தவறான தகவல்களும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களும் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்த போதும், கடந்த சில ஆண்டுகளிலேயே அவை பல்கிப்பெருகியுள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளது. இணையவெளியில் ஏராளமாகப் பெருகியுள்ள தகவல்களே தகவல்திரிபு ஏற்பட வழிவகுக்கின்றன. இணையவெளியில் உண்மையைச் சரிபார்த்தல் மற்றும் தகவல் ஒப்பீட்டு முறை ஆகியன இல்லாமையே இப்போலிச் செய்திகளுக்கு வழிவகுக்கின்றன. திட்டமிடப் பட்டுப் பரப்பப்படும் போலிச்செய்திகளின் பின்னால் அரசியல், சமூக, பொருளாதார, வணிக நோக்கங்கள் இருக்கக்கூடும். சமூக விரோதப் போக்குடையோரின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அவை இதழியலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகளும் உள்ளன. அத்துடன், சமூகவலைத் தளங்களில் உள்ள போலிச் செய்திகளை வெகுஜன ஊடகங்கள் எடுத்துக்கொண்டு பொதுவெளியில் பெருக்கிவிடக்கூடிய சாத்தியமும் உள்ளது. பேரிடர்க் காலங்களில் தவறான தகவல்களும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களும் மொத்த அரசு மற்றும் சமூக கட்டமைப்புகளையும் வீழ்த்திவிடக்கூடிய சக்திபடைத்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. *(Mis Dis Information)* இதழியலாளர் கையேடு: ஆசிய ஊடகவியல் கல்லூரி, பக். 28.)

போலிச்செய்திகள் உருவாகுவதற்கான காரணங்களாக பின்வரும் சில அடையாளங் காணப்பட்ட போதும் இவற்றைவிட வேறும்பல காரணங்கள் இருத்தல் கூடும்: *(Mis Dis Information)* இதழியலாளர் கையேடு: ஆசிய ஊடகவியல் கல்லூரி, பக். 29.)

1. போர்க்காலம் அல்லது பேரிடர் போன்ற நெருக்கடிக் காலங்களில் தகவல் திரிபுக்கான சந்தர்ப்பங்கள் மிகுதியாக உருவாகுதல்.

2. செய்தியானது அதனளவில் இயல்பாக உருவாகாமல் ஓர் ஊடகவியலாளரால் வலிந்து உருவாக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படல்

3. ஊடகவியலாளர் ஆனவர் புதுச் செய்திகளைக் கண்டுபிடிக்கும் நெருக்கடியோடு இருக்கும் நிலை

4. ஊடகவியலாளர் ஆனவர் தாம் தனித்த பாணியில் ஒரு செய்தியை அணுக முற்படும் கட்டாயத்தில் இயங்கும் நிலை.

5. ஊடகவியலாளர் ஆனவர் தம் செய்திகளுக்கு வரும் பாராட்டையும் பெயரையும் நினைத்து இயங்கும் நிலை.

6. செய்தியை முதலில் சொல்லவேண்டிய போட்டிக் கட்டாயத்தில் ஏற்படும் நேரமின்மையால் செய்தி ஊடகங்கள் தகவலை ஒப்பீடு செய்யாமல் போகும் நிலை

7. செய்தி ஒன்று மிகைப்படுத்தலுக்கு உள்ளாகும் நிலை.

8. புள்ளிவிபரங்களில் தவறுகள் ஏற்படும் நிலை.

9. தரவுகள் இல்லாமற்போகும் போது ஊடகவியலாளர்கள் ஊடகங்களில் ஈடுபடல்

10. செய்திகளில் பயன்படுத்தப்படும் மொழியும் தொனியும் உணர்வுநீதியான விடயப்பரப்புகளில் தொழிற்படும் நிலை.

11. உத்தியோகபூர்வமற்ற உரையாடல்களிலுள்ள விஷயங்களை ஊடகவியல் அறத்திற்கு எதிராக வெளியிடப்படும் நிலை.

12. குற்றச்செய்திகளுக்கான மூலாதாரங்களுக்காக காவல்துறையின் ஆவணங்களில் தங்கியிருத்தலும் மாற்று ஆதாரங்களைத் தேடாதிருத்தலும்.

13. ஊடகவியலாளர் முன்முடிவுடன் இயங்கும் நிலை காணப்படுதல்

14. வெகுஜன செய்தி நிறுவனங்களுக்கு இருப்பதைப் போன்ற விதிகளும் கட்டுப்பாடுகளும் சமூக ஊடகங்களுக்கு இல்லாமை

இணைய வெளியில் பரவுகின்ற போலிச்செய்திகள் பெரும்பாலும் பிராந்தியம் சார் விடயப்பரப்புகளைத் தம் கருப்பொருட்களாகக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் இலங்கை சார்ந்த போலிச்செய்திகளை அடையாளம் காணும் முன்னெடுப்பினை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மேற்கொண்டுள்ளது. இலங்கை சார்ந்த விடயப்பரப்புகளைத் தம் கருவாகக் கொண்டனவும் இலங்கையைச் சேர்ந்த சமூகவலைத்தளப் பாவனையாளர்களால் அதிகளவில் பகிரப்பட்டனவுமானவை சமகாலப் போலிச்செய்திகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

"Fact Seeker" எனும் பெயரிலான செயற்றிட்டமூடாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால், 01.02.2021 ஆம் திகதியிலிருந்து 13.10.2021 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட 151 செய்திகளை பிரதான ஆதாரமாகக் கொண்டு சமூக வலைத்தளங்களில் பரவுகின்ற சமகால போலிச்செய்திகளை ஆராய்வதை இக்கற்கை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. தரவுகளைத் திரட்டியும் பகுத்தும் நோக்குவதற்கு பகுப்பாய்வு முறையியலும் விபரிப்புச் செயற்பாட்டிற்கு விபரண ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை சார்ந்த போலிச்செய்திகளது இயல்புகள், விடயப்பரப்புகள், பின்னணி, போக்கு ஆகியவை எவை என்ற ஆய்வுப் பிரச்சினையை முன்வைத்து, இதுதொடர்பில் ஏற்பட்டுள்ள ஆய்விடைவெளியை நிரப்பும் நோக்குடன் இக்கற்கை முன்னெடுக்கப்படுகின்றது.

2. போலிச்செய்திகளின் விடயப்பரப்புகள்

2.1 அரசியல்

சமூகவலைத்தளச் சூழலில் அதிகளவான போலிச் செய்திகளின் விடயப்பரப்பு அரசியலாகவே அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. அரசியல் சார்ந்த போலிச்செய்திகள் சமூகவலைத் தளங்களில் பல்வகையான தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. நடைபெற்ற நிகழ்வொன்றின் டிஜிட்டல் சுவரொட்டியினைத் திரிபுபடுத்தி நடைபெறாத நிகழ்வொன்றை நடைபெற்றதாகக் காண்பித்தல் எனும் செயற்பாட்டின்மூலம் நிகழ்வில் பங்கேற்கும் முக்கியஸ்தரின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தல் மற்றும் அந்த நற்பெயரை தனிப்பட்ட அரசியல் இலக்குகளுக்குப் பயன்படுத்தல் போன்ற செயல்கள் இடம்பெறுகின்றன.

உதாரணம் 1:

போலிச் செய்தி:

உள்ளாடைகளுக்கு விதிக்கப்படும் இறக்குமதி கட்டுப்பாடுகள் பற்றிய கேலிக்குரிய தலைப்புடன், ஒரு நிகழ்ச்சித்

திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க ஏற்பாடு செய்தாக ஒரு விளம்பரம் ஃபேஸ்புக் பக்கத்தில் செப்டம்பர் 11ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ளது.

சரியான தகவல்:

இந்தப் பதிவின் உண்மைத்தன்மை குறித்த ஆய்வில் "ஆப்கானிஸ்தானில் என்ன நடக்கிறது?" என்ற வாசகத்துடன் பிமல் ரத்நாயக்கவின் அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் உள்ள அசல் பதிவே இவ்வாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. உண்மையான படங்களில் காணப்படுவோரை வேண்டுமென்றே, அரசியல் தலைவர்களின் குடும்ப உறுப்பினர் என அடையாளம் காட்டி நன்மதிப்புக் குறைக்கும் செயற்பாட்டில் ஈடுபடல்.

உதாரணம் 2:

போலிச் செய்தி:

"இந்த நபர் எண்ணெய்க்காக செய்யும் முட்டாள்தனத்தால், இறுதியில் அவரது மனைவியைக் கூட முக்காடு போட வைத்துவிட்டார்" என்ற தலைப்பிடப்பட்டு, அமைச்சர் உதய கம்மன்பிலவும் அவர் அருகில் முக்காடு இட்ட பெண்ணும் மற்றும் பலரும் இணைந்து நிற்கின்ற புகைப்படம்

சரியான தகவல்:

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கடந்த செப்டம்பர் மாதம் ஈரானுக்கு இராஜதந்திர விஜயத்தை மேற்கொண்டார், அப்பொழுது அவர் செப்டம்பர் 26 ஆம் திகதி GASTEC 2021 உச்சிமாநாட்டின் போது தெஹ்ரான் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் எரிவாயு நிலைய அருங்காட்சியகத்தை பார்வையிட்டார். இந்த நிகழ்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படமே இதுவாகும். அந்த புகைப்படத்தில் இருப்பது அமைச்சின் செயலாளர், திருமதி மு.னு.சு ஓல்கா; உதய கம்மன்பிலவின் மனைவி தினேஷ கம்மன்பில அல்ல.

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் அதிர்வூட்டக்கூடிய செய்தியை அதீதமாக மிகைப்படுத்தும் பாங்கு இந்த அரசியல் சார்ந்த போலிச்செய்திகளில் காணப்படுகின்றது. இதன் மூலமாக மக்கள் மத்தியில் தேவையற்ற பதற்ற நிலையையோ அல்லது கவன ஈர்ப்பையோ ஏற்படுத்துவது, அச்செய்தி ஆக்குநர்களின் நோக்கமாக உள்ளது.

உதாரணம்:

போலிச்செய்தி:

"பண்டோரா ஆவணங்களில் 35 பெயர்கள் உள்ளன. 'நிருபமா ராஜபக்ச (அவரது கணவரின் பெயரால் குறிப்பிடப்படுகிறார்), அர்ஜுன் அலோசியஸ், ரவி கருணாநாயக்க, டி.எம்.ஜெயரத்ன, சஜின் வாஸ் குணவர்த்தன, படு வெத்தசிங்க, சிறிசேன குரே, டட்லி சிறிசேன, ரொஹான் பல்லேவத்த, சமரசிங்க ஆராச்சிகே மதுஷ் லக்ஷித (மாகந்துரே மதுஷ்), கம்பள விதானலாகே சமன் குமார வெலே சுதா), பிமல் ரத்நாயக்க, கிரிஷ்மல் வர்ணசூரியா (வழக்கறிஞர்), அனோமா கமகே (தயா குழும வணிகம்), ரவூப் ஹக்கீம், ஏஎச்எம் ஃபௌஸி, விஜயகலா மகேஸ்வரன், அலி ஸாஹிர் மௌலானா, எஸ்.பி. நாவின்ன, கருணாரத்ன பரணவிதான, வேலுசாமி ராதாகிருஷ்ணன், சமதரா ரணதுங்க, ஹேமா பிரேமதாச, மலிக் சமரவிக்ரம, சுஜாதா சேனாரத்ன, கவன் பெரேரா, ரொஹான் பெரேரா, மாவை சேனாதிராஜா, எஸ். யோகேஸ்வரன், அஜிதர தேவசுந்தர, ஆர். ராஜமகேந்திரன் மற்றும் ஜெய ஸ்ரீ ரங்கா.'

சரியான தகவல்:

"சமீபத்திய பண்டோரா ஆவணங்களில் இதுவரை வெளிவந்த இலங்கையரின் பெயர் இலங்கையின் முன்னாள் பிரதி அமைச்சர்

நிருபமா ராஜபக்ச மற்றும் அவரது கணவர், தொழிலதிபரான திருக்குமார் நடேசன் ஆகியோர் மட்டுமே.''

சர்வதேச அரசியல் சார்ந்த புகைப்படமொன்றை அப்படம் சார்ந்திருக்கும் விடயத்திற்கு முற்றிலும் வேறானதும் வேறோர் ஆண்டு சார்ந்ததுமான விடயத்துக்குப் பொருந்துமாறு தகவலைத் திரித்து வெளியிடப்படும் செயல் சமூகவலைத்தளங்களில் பரவலாக இடம்பெறுகின்றது.

உதாரணம்:

போலிச் செய்தி:

''மெக்ஸிகோ நாடாளுமன்றத்தில் நடந்த ஒரு விவாதத்தின் போது, அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது ஆடைக ளை கழற்றி, முழு சபையையும் பின்வருமாறு விளித்தார;, ''இந்த உன்னதமான பாராளுமன்றத்தில் நான் நிர்வாணமாக இருப்பதைக் கண்டு நீங்கள் அனைவரும் வெட்கப்படுவீர்கள். ஆனால் இந்நாட்டு மக்கள் நிர்வாணமாக, வெறுங்காலுடன், வேலையில்லாமல், தெருக்களில் பட்டினி கிடப்பதைப் பார்த்து அவர்களின் பணத்தையும் வசதிகளையும் திருட நீங்கள் வெட்கப்படவில்லை.'' ''

சரியான தகவல்:

மெக்சிகோ அரசியல்வாதி ஒருவர் வெளிநாட்டு முதலீட்டிற்காக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் துறையை அறிமுகப்படுத்தும் ஒரு சர்ச்சைக்குரிய சட்டத்தை எதிர்த்து காங்கிரஸை விட்டு வெளியேறினார். மேலும், அவர் (அன்டோனியோ கார்சியா) தனது ஆடையைக் கழற்றி சட்டத்தின் மீதான தனது கடுமையான எதிர்ப்பைக் காட்டினார்.

2.2 சமூகம்

சமூகத்தில் அதிர்வை ஊட்டக்கூடியவையாகவும் தவறான பிரசாரத்தை முன்னெடுப்பவையாகவும் சமூகம் சார் போலிச்செய்திகள் காணப்படுகின்றன. இவை மக்களைத் தவறாக வழிநடத்தக் கூடியவையாகவும் குறித்த ஒரு செயல் அல்லது சம்பவம் பற்றி தவறான பிம்பத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும் உள்ளன. இவ்வகையான போலிச்செய்திகள் ஆனவை, தனிநபர்கள் அல்லது குறிப்பிட்டதொரு குழு அல்லது சமூகத்தின் மீது தேவையற்ற கவனக்குவிப்பையும் ஏற்படுத்த வல்லவையாக உள்ளன.

ஓர்உயிரிழப்புசார்செய்திக்கானபடத்தைக் கொண்டு, இடம்பெறாத உயிரிழப்பு ஒன்றைச் சித்தரிக்கும் வகையிலான போலிச் செய்திகள், காலத்துக்குக் காலம் உருவாக்கப்பட்டு சமூகவலைத்தளங்களில் பரப்பப்படுகின்றன.

உதாரணம்:

போலிச் செய்தி:

''உலகம் முழுவதையும் இசையால் பைத்தியமாக்கிய BTS குழு விமான விபத்தில் பலியானது'' என்ற தலைப்பிட்டு பரவும் புகைப்படம்

சரியான தகவல்:

புகைப்படத்தில் காணப்படும் விபத்துக்குள்ளான விமானம் ஒரு தனியார் ஜெட் விமானம் என்பது தெரியவந்தது. குறிப்பிட்ட விமானம் 22 மே 2018 அன்று மத்தியஅமெரிக்காவில்விபத்துக்குள்ளானது. இந்தவிபத்தில்ஊழியர்கள்மற்றும்பயணிகள் அனைவரும் உயிர் தப்பினர். அதேவேளை, ஏழு உறுப்பினர்களைக் கொண்ட BTS இசைக்குழு மிகவும் பிரபலமான கொரிய

பாப் இசைக்குழு ஆகும். மேலும், அவர்கள் விமான விபத்தை எதிர்கொண்டதாக எந்த தகவலும் இல்லை என்பது தொழில்நுட்ப விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அறவே தொடர்பற்ற புகைப்படம் மூலம் உட்கட்டமைப்பு வசதியை விமர்சிக்கும் வகையிலமையும் தகவலைப் பரப்பும் செயலை கணிசமான போலிச்செய்திகள் சமூகவலைத்தளங்களில் புரிகின்றன.

உதாரணம்:

போலிச் செய்தி:

"ஒரு நடைபாதை, இதில் நீங்கள் ஒரு படி தவறினால் என்ன செய்வது?" என்ற தலைப்புடன் இலங்கையில் அமைந்துள்ள தொங்கு பாலம் எனப் பரவும் ஒரு புகைப்படம்

சரியான தகவல்:

இந்த புகைப்படத்தின் உண்மைத் தன்மையை அறிவதற்காக மேற்கொண்ட தொழில்நுட்ப ஆய்வில் இது இந்தோனேசியாவின் பான்டன் பிரதேசத்தில் உள்ள பாலம் என்பது தெரியவந்தது. நியூயோர்க் டெய்லி நியூஸ் இணையத்தளத்தில் 2012 ஜனவரி 20 ஆம் திகதியன்று இந்த புகைப்படத்துடன் பின்வருமாறு ஒரு செய்தி வெளியிடப்பட்டது. "இந்தோனேசியாவின் பான்டனில் ஒரு ஆற்றின் மறுபுறத்தில் உள்ள பள்ளியை அடைய மாணவர்கள் சேதமடைந்த தொங்கு பாலத்தை கடந்து செல்லும் புகைப்படம்" என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தம் தொடர்பில் மக்களைப் பதற்றமடையச் செய்யும் வகையிலான பொய்த்தரவுகள் அல்லது அதீதமாக மிகைப்படுத்தப்பட்ட உண்மைத்தரவுகளைக் காவும் போலிச்செய்திகள் பொதுமக்களின் உணர்வுநிலையைச் சீர்குலைக்க வல்லவையாக உள்ளன.

உதாரணம்:

போலிச் செய்தி:

"ராவணன் நீர்வீழ்ச்சி திடீரென கடுமையாக பெருக்கெடுத்தது" என்ற தலைப்பில் தொடர்ச்சியான புகைப்படங்கள் கோசிப் லங்கா நியூஸ் இணையதளத்தில் 1 அக்டோபர் 2021 அன்று வெளியிடப்பட்டன. "பெய்த மழையால், இதுவரை அமைதியாக இருந்த நீர்வீழ்ச்சிகள் மீண்டும் செயல்படுகின்றன. இந்த புகைப்படங்கள் ராவணன் நீர்வீழ்ச்சியின் விளைவைக் காட்டுகின்றன."

சரியான தகவல்:

இந்த செய்தி குறித்து மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப ஆய்வின்படி, புகைப்படங்கள் பிரசன்ன பத்மசிறி என்பவரால் 2020 இல் எடுக்கப்பட்டது என்பது தெரியவந்தது. டெய்லி மிரர் வலைத்தளம் நவம்பர் 6, 2020 அன்று "ராவணன் நீர்வீழ்ச்சியின் நிறம் மாறிவிட்டது" என்ற தலைப்பில் இந்தப் புகைப்படங்களைப் பயன்படுத்தி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது.

2.3 ஆரோக்கியம்

இக்கற்கையின் பிரதான தரவுகள் அனைத்தும் கொரோனா பெருந்தொற்று இலங்கையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய காலப்பகுதியில் உருவாகியுள்ள நிலையில், அவற்றில் கணிசமானவை, ஆரோக்கியம் சார்ந்த விடயப்பரப்பினை மையப்படுத்தியுள்ளன. தொற்றுநோய் தொடர்பான பொதுமக்களின் பயத்தினை தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கினை, இவ்விடயப்பரப்பு சார்ந்த போலிச்செய்திகள் ஊடாகக் காண முடிகின்றது.

கொரோனா பெருந்தொற்றைக் குணமாக்கும் புதிய வழிகள் எனக்கூறி, பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்த போலிச்செய்திகள் பாரியளவில் சமூகவலைத்தளங்களில் பரப்பப்பட்டன.

உதாரணம் 1:

போலிச் செய்தி:

"இந்த மருந்தை எடுத்துக்கொள்ளுங்கள், கொரோனா முடிந்துவிட்டது, அமெரிக்காவிலிருந்து ஒரு சிறந்த மாத்திரை. மருத்துவ பரிசோதனைகள் முடிந்துவிட்டன " என்ற தலைப்புடன் லங்கா சி நியூஸ் இணையதளம் அக்டோபர் 4, 2021 அன்று செய்தி வெளியிட்டது. " 'மெர்க்-Merck எனும் அமெரிக்க நிறுவனம் தயாரித்த 'மோல்னுபிரவீர்-Molnupiravir' எனும் மருந்து மிகவும் வெற்றிகரமான முடிவுகளைக் காட்டுகிறது." என அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

சரியான தகவல்:

யுஎன்சி (UNC -UNC School of Medicine) மற்றும் விஞ்ஞானிகள் மோல்னுபிரவீர் கோவிட் -19 க்கு சிகிச்சையளிக்கும் போக்கை மாற்றக்கூடிய ஒரு சிறிய மாத்திரை என்று முடிவு செய்தனர். மேலும், வைத்தியர் கேமரூன்வோல்ப் "இது செயலில் உள்ள வைரஸ் தடுப்புக்கான ஒரு பிறபொருளெதிரி" என்று விளக்குகிறார். எனவே, மோல்னுபிரவீர் தொடர்பாக நிறைய வெளிநாட்டுச் செய்திகள் இருந்தாலும், அது இன்னும் அதிகாரபூர்வமாக பயன்படுத்த அங்கீகரிக்கப்படவில்லை.

உதாரணம் 2:

போலிச் செய்தி:

"இலங்கையில் தயாரிக்கப்பட்ட விரைவான ஆன்டிஜென் சோதனை கருவியின் விலை 80 ருபாய். குறைந்தபட்ச எண்ணிக்கையாக - 5 கருவிகளை கொள்வனவு செய்ய முடியும். நாடு முழுவதும் விநியோகத்திற்கான மொத்த கட்டணம் 100 ரூபாவாகும். 500 ரூபாவுக்கு 5 கருவிகளை உங்கள் இல்லங்களுக்கே வரவழைத்துக் கொள்ளுங்கள்." மேற்கண்ட விவரங்களுடன் ஒரு பதிவு சமூக ஊடகங்களில் பகிரப்படுகிறது. இது "ப்ரிமா" என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்படுவதாகக் கூறப்படுவதோடு, மௌபிம லங்கா அறக்கட்டளையின் "Buy Our Things" என்ற முத்திரையையும் கொண்டுள்ளது.

சரியான தகவல்:

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "ப்ரிமா" நிறுவனம் குறித்த ஆய்வில் அது சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள ஒரு நிறுவனம் என்பது தெரியவந்தது. இந்நிறுவனத்தின் வலைத்தள பக்கத்திலுள்ள தயாரிப்பின் புகைப்படமானது தற்போது புழக்கத்திலுள்ள செய்தியிலிருக்கும் புகைப்படத்தை ஒத்திருந்தபோதிலும், அதில் "Buy Our Things" என்ற முத்திரை காணப்படவில்லை. புகைப்படம் குறித்த தொழில்நுட்ப ஆய்வில், "ப்ரிமா" வலைத்தளத்திலிருந்த அசல் புகைப்படத்தில் "Buy Our Things" என்ற முத்திரையை செருகி மாற்றியமைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. விரைவான ஆன்டிஜென் சோதனை கருவியை வீட்டிற்கே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் புழக்கத்திலுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் "ப்ரிமா" நிறுவனத்தின் வலைத்தளத்தின் தகவல்களின்படி, இத்தயாரிப்பு சுகாதார ஊழியர்களுக்கு மட்டுமே பரிந்துரைக்கப்படுகிறது. "ப்ரிமா" நிறுவனத்தின் வலைத்தளம் தொழில்முறை தயாரிப்புகள் சுகாதார ஊழியர்களுக்கு பரிந்துரைக்கப்படுவதாகவும், அதன் சுய சோதனை பொருட்கள் "ப்ரிமா

ஹோம் டெஸ்ட்'' பிரிவின் கீழ் விற்பனை செய்யப்படுவதாகவும் குறிப்பிடுகிறது. பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள விரைவான ஆன்டிஜென் சோதனை கருவியானது தொழில்முறை தயாரிப்புகள் பிரிவின் கீழ் விற்பனை செய்யப்படுகிறது. இந்த விரைவான ஆன்டிஜென் சோதனை கருவி உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த மௌபிம லங்கா அறக்கட்டளையின் நிர்வாக பணிப்பாளரைத் தொடர்புகொண்டபோது, தனது அறக்கட்டளைக்கு அத்தகைய தயாரிப்புடன் எந்த தொடர்பும் இல்லையென்றும் அது ஒரு போலிப் பதிவு என்றும் கூறினார்.

2.4 வர்த்தகம்

இக்கற்கையின் பிரதான தரவுகள் உருவாகிய காலப்பகுதியில் கொரோன பெருந்தொற்று காரணமாகவும் மேலும் பல்வேறு அரசியல் - பொருளாதாரக் காரணிகளாலும் இலங்கையின்பொருளாதார நிலை பாரிய சரிவுக்கு உள்ளாகியது. இக்காலத்தில் ஏற்பட்ட வாழ்க்கைச்செலவு அதிகரிப்பினால் சமூகத்தின் நடுத்தர வர்க்கம் மற்றும் கீழ் வர்க்கம் ஆகியவை கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின. பொதுமக்களின் இந்த நிர்க்கதியான நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் பாங்கினை சில போலிச்செய்திகளின் நடத்தையில் காணமுடிகின்றது.

நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு பரிசுகளை அளிப்பதாகப் பரப்பப்படும் போலிச்செய்திகள் பொதுமக்களின் ஆர்வத்தைக் கவர்ந்திழுப்பதுடன், ஏமாற்றப்பட்டமை தெரிந்தவுடன் அந்நிறுவனங்கள் மீது மக்களின் வெறுப்புணர்வு பாயும் வண்ணம் செயற்படுகின்றன.

உதாரணம் 1:

போலிச் செய்தி:

மக்கள் வங்கியின் 60 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் 30,000ரூபாய்ரொக்கப்பரிசைவெல்லமுடியும் என்று ஒரு செய்தி சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. செய்தியில் உள்ள இணைப்பு சிங்களம் மற்றும் தமிழில் பதிலளிக்கும் வகையிலான நான்கு கேள்விகளைக் கொண்ட ஒரு திரைக்கு வழிநடத்துகிறது. பின்னர் 9 பரிசுப் பெட்டிகளைக் கொண்ட ஒரு திரைக்கு வழிநடத்துகிறது. ''சரியான பரிசுப் பெட்டியை'' தேர்ந்தெடுத்தவுடன், பயனர்கள் அந்த செய்தியை வாட்ஸ்அப் அல்லது மெசஞ்சர் வழியாக 5 குழுக்களுடன் அல்லது 20 நபர்கள் வரை பகிர்ந்து, தனிப்பட்ட விவரங்களை உள்ளிட்டு பதிவை முடிக்கும்படி கோரப்படுவர்.

சரியான தகவல்:

இவ்வாறானதொரு பரிசு நிகழ்வு மக்கள் வங்கியால் ஏற்பாடு செய்யப்படவில்லை. ''மக்கள் வங்கி எவ்வித போட்டிகளையோ அல்லது சீட்டிழுப்புகளையோ நடத்தாது எனவும், இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளால் ஏமாறக்கூடாது என்பதை எமது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்!'' எனவும் மக்கள் வங்கி அறிவிப்பொன்றை வெளியிட்டது. மேலும், சமூகவலைத்தளத்தில் பகிரப்பட்ட அச் செய்தியில் பரிசுகளைப் பெற்றதாக பல வெளிநாட்டவர்கள் பதிவிட்டிருந்த போதிலும், அது குறித்து இலங்கையர்கள் யாரும் கருத்து தெரிவிக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது.

உதாரணம் 2:

போலிச் செய்தி:

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. உடன் இணைந்த ''கீல்ஸ்'' பல்பொருள்

அங்காடியானது அதன் 40 வது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெறவுள்ள விழாவில் 20,000 ரூபாய் பெறுமதியான பரிசுக் கூப்பனை வழங்கவுள்ளதாக வாட்ஸ்அப் மூலம் பரவும் ஒரு போலிச் செய்தி.

சரியான தகவல்:

இந்த செய்தி தொடர்பாக, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சியை தொடர்பு கொண்டபோது, சம்பந்தப்பட்ட இணைப்பு தங்கள் வலைத்தளத்துடன் தொடர்பான அதிகாரபூர்வ இணைப்பு அல்ல என்று அதிகாரிகள் கூறினர். மேலும், இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு (SLCERT) இந்த சம்பவம் குறித்து பின்வருமாறு கருத்து தெரிவித்தது; "இந்த மோசடிகளில் பெரும்பாலானவை இத்தகைய பொது நிறுவனங்களின் போர்வையில், நிறுவனத்தின் தினசரி வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்டு மோசடியான முறையில் தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன."

3. பகுப்பாய்வு

அரசியல் சார் போலிச்செய்திகள் பெருமளவில் அரசியல்வாதிகள் அல்லது அரசியல் முக்கியத்துவம் உடையோரையே பெரிதும் குறிவைக்கின்றன. அவர்களுடைய அரசியல் பலம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றின் மீதான வெகுசன நல்லெண்ணத்தை அகற்றல் அல்லது குறைத்தல் ஆகியவற்றை அப்போலிச்செய்திகள் தம் நோக்கமாக வைத்திருக்கின்றன. மேலும், ஓர் அரசியல்வாதியின் செயற்பாடு குறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்ட பிம்பத்தை நீர்த்துப்போகச் செய்தல், திசைமாற்றல் அல்லது அப்பிம்பத்தை உருக்குலைத்தல் ஆகியவையும் அரசியல் சார் போலிச்செய்திகளின் நோக்கங்களாக உள்ளன. அரசியல் சார் போலிச்செய்திகளை ஆக்கும் நபர்கள் தமது சொந்த அரசியல் கருத்துநிலைகளுக்கு ஏற்ற வண்ணம், அரசியல் முக்கியஸ்தர்களின் கூற்றுக்களைத் திரிபுபடுத்துவதையும், அம்முக்கியஸ்தர்களின் வைபவப் பங்கேற்பு குறித்த பொருத்தமில்லாத தகவல்களை வழங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது. மேலும், இவ்வாறான போலிச்செய்தி ஆக்குநர்கள் தத்தம் அரசியல் எதிரிகள் மீது ஏவும் ஆயுதமாகவும் அரசியல் சார் போலிச்செய்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

சமூகம் சார் போலிச்செய்திகள் உருவாக்குபவர்கள் சமூகத்தில் ஓர் அதிர்வினை ஏற்படுத்த விரும்புகின்றார்கள். அது சமூக ஊடகத்தளத்தில் ஏற்படுத்தும் அதிர்வின் அளவு செய்தியின் விடயத்தைப் பொறுத்து மாறுபடுகின்றது. இவ்வகையான போலிச்செய்திகள் பலவற்றின் உருவாக்கத்தின் பின்னால் இலக்குகள் இருந்தாலும், சில வேளைகளில் எவ்வித இலக்குகளும் இன்றி வேடிக்கைக்காகவும் கூட இவை உருவாக்கப்படுகின்றன. இவற்றினை ஆக்குபவர்களின் இலக்கு சார் நோக்கம் மற்றும் அதன் உளவியல் குறித்து விரிவான ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில், ஆரோக்கியத்தினை தமது விடயப்பரப்பாகக் கொண்டு ஏராளமான போலிச்செய்திகள் பரவின. இதுவரை கொரோனா போன்ற பெருந்தொற்று ஒன்றை எதிர்கொண்டிராததும் அதற்குத் தயார்நிலையில் இல்லாததுமான இலங்கையின் சமூகத்தில், இவை பாரிய அதிர்வினை ஏற்படுத்தின. சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்துவோரிலிருந்து,

அவற்றைப் பயன்படுத்தாத பெருந்தொகை மக்களுக்கு அந்த அதிர்வுகள் மிக வேகமாகப் பயணித்துப் பரவியமை குறிப்பிடத்தக்கது.

மேலும், போலிச்செய்திகளின் பிற வகைப்பாடுகளை விடவும் ஆரோக்கியம் எனும் இவ்வகைப்பாட்டின் போலிச் செய்திகளே அதிகமாகவும் விரைவாகவும் சமூகவலைத் தளங்களைப் பயன்படுத்தாத பெருந்தொகை இலங்கையர்களைச் சென்றடைந்தன. அதேவேளை, இவ்வகைப்பாட்டுப் போலிச் செய்திகள் ஏற்படுத்திய தூண்டலுக்கு இலங்கையின் பல பகுதிகளில் வாழும் சமூகங்களில் இருந்தும் துலங்கலும் எதிர்வினைகளும் வெளிப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. இந்த ஆரோக்கியம் சார் போலிச்செய்திகள் பெருந்தொற்றுகாலப்பகுதியில் மக்களை தொடர்ச்சியான பதற்றநிலையில் வைத்திருந்ததுடன், அவர்களை அலைக்கழிக்கவும் செய்தன.

இக்கற்கைக்காக எடுத்தாராயப்பட்ட போலிச்செய்திகள் வெளிவந்த காலப்பகுதியில், கொரோனா பெருந்தொற்றாலும் வேறு பல காரணிகளாலும் இலங்கை கடுமையான பொருளாதார சீர்குலைவுக்கு உள்ளாகியிருந்தது. இந்த நிலையில் வர்த்தகம் எனும் வகைப்பாட்டுக்குள் அடங்கும் போலிச்செய்திகள் கணிசமான அளவில் சமூகவலைத்தளங்களில் பரவியதுடன், நிதியியல், பொருளாதாரம், வங்கிச்சேவைகள், அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கும் நிலை, பொருட்களின் விலைகள் போன்றவற்றை தமது கருப்பொருளாகக் கொண்டிருந்தன.

இக்காலப்பகுதியில் மரபுரீதியான பொருட்கொள்வனவை விட இணையவழியிலான பொருட்கொள்வனவு அதிதுரித அதிகரிப்பைக் கண்டது. பொதுமுடக்கங்களும் ஊரடங்குகளும் அமுலில் இருந்த இவ்வாறான சூழலில், சமூகவலைத்தளத் தரவுகளையே மக்கள் நம்பியாக வேண்டிய நிலையை, இப்போலிச்செய்திகள் ஓரளவுக்குக் கையகப்படுத்தியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. இதன் காரணமாக, வாடிக்கையாளர்கள் ஏமாற்றமுற்ற சம்பவங்களும் பலதுறைகளைச் செர்ந்த வர்த்தகர்கள் பாதிப்புற்ற சம்பவங்களும் நிகழ்ந்தன.

குறித்த காலப்பகுதியில் போலிச்செய்திகளின் தாக்கங்கள் சமூகத்தில் பெரிதும் அதிகரித்துக் காணப்பட்டதுடன், எது போலிச்செய்தி என்பதை மக்கள் பிரித்தறிய முடியாத வண்ணம், அவற்றில் பெரும்பான்மையானவை உண்மைத்தரவையோ அல்லது உண்மைத்தரவின் பகுதிகளையோ, தமக்குள் உள்ளடக்கியிருந்தன. மேலும், போலிச்செய்தி குறித்த விழிப்புணர்வற்ற மக்களின் நிலையே அவற்றுக்கான பரவுகைக்கு தடையற்ற தளத்தை வழங்கியது. அத்துடன், பெரும்பாலான மரபுசார் ஊடகங்கள் போலிச்செய்திகளை மக்களுக்கு ஆதாரத்துடன் வெளிப்படுத்தும் பணியை சமூகப்பொறுப்புடன் ஆற்றாத நிலையும் அவதானிக்கப்பட்டது.

4. முடிவுரை

"Fact Seeker" எனும் பெயரிலான செயற்றிட்டமூடாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால், *01.02.2021* ஆம் திகதியிலிருந்து *13.10.2021* ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட *151* செய்திகளை பிரதான ஆதாரமாகக் கொண்டு சமூக வலைத்தளங்களில் பரவுகின்ற சமகால போலிச்செய்திகளை ஆராய்வதை தனது நோக்கமாகக் கொண்ட இக்கற்கை பின்வரும் முடிவுகளைக் கண்டறிந்துள்ளது:

1. தனிநபர்கள் அல்லது குறிப்பிட்டதொரு குழு அல்லது சமூகத்தின் மீது தேவையற்ற கவனக்குவிப்பை போலிச்செய்திகள் ஏற்படுத்துகின்றன.
2. போலிச்செய்திகள் அரசியல், சமூகம், ஆரோக்கியம், வர்த்தகம் ஆகிய பிரிவுகளிலேயே பெரிதும் அடங்குகின்றன.
3. நடைபெற்ற நிகழ்வுகளின் பதிவுகள் திரிபுபடுத்தப்பட்டு, நடைபெறாத நிகழ்வொன்றை நடைபெற்றதாக சமூகவலைத்தளங்கள் ஊடாகக் காண்பிக்கப்படும் செயல் போலிச்செய்தி மூலம் முன்னெடுக்கப்படுகின்றது.
4. அரசியல் முக்கியஸ்தர்களின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தல் மற்றும் அவர்களுடைய நற்பெயரை தனிப்பட்ட அரசியல் இலக்குகளுக்குப் பயன்படுத்தல் ஆகிய செயல்களை போலிச்செய்திகள் புரிகின்றன.
5. போலிச்செய்தியாக்கச் செயற்பாட்டில், எழுத்து மூலமான தரவுகள் மட்டுமல்லாது புகைப்படங்கள் மூலமான தரவுகளும் திரிபுபடுத்தப்படுகின்றன.
6. பெருமளவான போலிச்செய்திகள் திரிபுபடுத்தப்பட்ட தகவல் (Dis-information) ஆகவே இருக்கின்றன.
7. பெருமளவான போலிச்செய்திகள் அரசியலையே ஏதாவதொரு வகையில் தம் விடயப்பரப்பாகக் கொண்டிருக்கின்றன.
8. மக்களை பதற்றநிலையில் வைத்திருத்தல், தவறாக வழிகாட்டல், மக்களின் தனிப்பட்ட அபிப்பிராயங்களில் செல்வாக்குச் செலுத்துதல் ஆகியனவே போலிச்செய்திகளின் பிரதான நோக்கங்களாக அமைகின்ற அதேவேளை, இலக்குகள் இல்லாது வேடிக்கைக்காகவும் இவை பரப்பப்படுகின்றன.

6. உசாத்துணை

1. *Mis Dis Information* இதழியலாளர் கையேடு, சென்னை: ஆசிய ஊடகவியல் கல்லூரி
2. *Aneez, Z., Neyazi, T.A., et al. (2019). Reuters Institute India Digital News Report.*
3. *UNESCO. (2018). Journalism, Fake News & Disinformation: Handbook for Journalism Education and Training.*
4. *BBC News. (n.d.). DUTY, IDENTITY, CREDIBILITY: Fake news and the ordinary citizen in India.*
5. *Wardle, C. and Derakshan, H. (2017). INFORMATION DISORDER: Toward an interdisciplinary framework for research and policy making.*

ஆசிரியர் குறிப்பு:

திரு.விமலநாதன் விமலாதித்தன், தற்காலிக விரிவுரையாளராக இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் பணியாற்றி வருகிறார். மானிடவியல் அணுகுமுறையூடாக தமிழர் தம் பண்பாடு ஆகியவற்றின் வகிபாகத்தை ஆராயும் ஆர்வமும் கொண்டவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முதுதத்துவமானி பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகின்றார். ■

திராவிடப் பொழில்: சென்ற இதழின் (ஏப்ரல்–சூன் 2022) ஆய்வரங்கம்

பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்கா சார்பாகத் திராவிடப்பொழில் 6-வது இதழ் (ஏப்ரல் 2022 - சூன் 2022) ஆய்வுக்கூட்டம் சூன் 11, 2022 சனிக்கிழமை, தமிழ்நாட்டு நேரம் இரவு 7.30 மணிக்கு இணைய வழிக்கூட்டமாக நடைபெற்றது. பெரியார் பன்னாட்டு அமைப்பின் இயக்குநர் மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் தொடக்க உரையை ஆற்றி, ஆய்வுக்கூட்டத்தின் நோக்கத்தைக் கூறித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து .அனைவரையும் வாழ்த்தி வரவேற்று நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திச் செல்ல அனைவரின் சார்பிலும் சுதாகர் அவர்களை அழைத்தார்.

தோழர் சுதாகர்:

"'நான் தான் திராவிடன் என்று நவில்கையில் தேன் தான் நாவெல்லாம்' எனப் பாடினார் புரட்சிக் கவிஞர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', ' பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று நம் மனதில் பதியவைத்த தமிழ்ச்சான்றோர் அனைவருக்கும் வணக்கம். நீதிக்கட்சி காலம் தொடங்கி இன்றைய திராவிட மாடல் காலம் வரை எளிய மக்களின் உயர்வுக்காகவும், சமத்துவத்துவத்துக்காகவும் தொடர்ந்து உழைத்த, உழைக்கும் டாக்டர் நடேசனார், சர்.பி.டி.தியாகராயர், டி.எம்.நாயர், பனகல் அரசர், பெரியார், அண்ணா, கலைஞர், ஆசிரியர் மற்றும் இன்றைய முதல்வர் தளபதி உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்து இந்த நிகழ்ச்சியைத் துவக்குகிறோம்.

கையெழுத்துப் பிரதிகள் காலம் தொடங்கி இன்றைய டிஜிட்டல், வாட்சப் காலம் வரை திராவிட இயக்கக் கொள்கைகளைப் பொதுமக்களிடையே கொண்டு சேர்க்க பல்வேறு ஊடகங்கள் தொடர்ச்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான ஊடகங்களில் திராவிட இயக்க கொள்கைகளைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் 'திராவிடப் பொழில்' இதழின் ஆய்வு இப்போது நடக்க இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

ஏப்ரல் முதல் சூன் 2022 வரையான திராவிடப் பொழில் இதழ் ஆய்வு நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நிகழ்வின் அறிமுக உரையைப் பேராசிரியர் கண்ணபிரான் இரவிசங்கர் அவர்கள் வழங்குகின்றார். கண்ணபிரான் இரவிசங்கர் மிகச் சிறந்த அறிஞர். 'அறியப்படாத தமிழ்மொழி', தமிழா? சம்ஸ்கிருதமா? என்னும் பல நூல்களை எழுதியிருப்பவர். மேலும் திராவிடப்பொழில் இதழின் தலைமைப் பதிப்பு ஆசிரியராக இருப்பவர். அவரை அறிமுக உரை வழங்க அழைக்கின்றேன்'' எனக் குறிப்பிட்டார்.

பேரா. முனைவர் கண்ணபிரான் இரவிசங்கர் அவர்கள்:

''பார்வையாளர்களாக இருக்கும் நாகம்மையார் குழந்தைகளுக்கு முதல் வணக்கம். திராவிடப்பொழில் இதழை ஒரு தொலைநோக்குத் திட்டமாகத் தான் நம் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அய்யா துவக்கினார். பொதுவாகப் பெரியார் கொள்கைகளை நாம் பல தளங்களில் கொண்டு போய்ச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடிய மனோன்மணீயம் சுந்தரனார் அவர்களே 'திராவிட நல்' என்னும் சொல்லைத் தன் பாடலில் இணைத்தார். அதைப் போலவே திராவிட என்னும் சொல் இந்தியாவின் தேசிய கீதத்திலும் இருக்கிறது. திராவிடம் என்னும் சொல்லுக்கும் சேர்த்துத் தான் தேசிய கீதம் பாடும்போதோ, தமிழ்த்தாய் வாழ்த்து பாடும்போதோ எழுந்து நிற்கின்றோம்.

திராவிடக் கொள்கைகளை நாம் பல தளங்களில் பேசினாலும், ஆய்வுத்தளம் என்பது மிக முதன்மையானது. வெறும் பிரச்சாரமாகவோ, பரப்புரையாகவோ செய்யும் போது அதற்கு உண்டான மதிப்பு வேறு, அறிஞர்களுடைய தளத்திலே இயங்கிக் கொண்டிருக்கும் போது அதற்குண்டான மதிப்பு என்பது வேறு. கீழடியையே எடுத்துக் கொள்ளுங்கள். சங்கத்தமிழின் காலம் கி.மு. 300க்கு மேல் போகாமல் அப்படியே நின்று கொண்டிருந்தது. கி.மு.300 முதல் கி.பி. 300 வரை தான் சங்க காலம் என்று சொல்லிக் கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கு கீழடி ஆய்வும் சிவகளை ஆய்வும் கி.மு. 1155 வரைக்கும் சங்க காலம் என்று போகின்றது. இதனைச் சாதித்தது எப்படி? வெறும் வாய்மொழியாலோ, சங்கத்தமிழ்ப் பாடல்களாலாயோ இதனை நாம் நிரூபிக்கவில்லை. அறிவியல் முறையில் இதனை நாம் ஆய்வு செய்து நிரூபித்திருக்கிறோம். அதுபோல ஆசிரியர் அவர்களின் உன்னதமான குறிக்கோள் என்னவென்றால் வெறும் பரப்புரையாக மட்டுமே இல்லாமல், உலக அறிஞர்களின் மத்தியில், உலகப் பல்கலைக்கழகங்களின் மத்தியில் தமிழ்நாடு, இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இந்தப்பக்கம் ஐரோப்பா, அந்தப்பக்கம் அமெரிக்கா என்று எல்லாப் பக்கங்களிலும், உலகத்தில் உள்ள எல்லா அறிஞர்களுக்கும் திராவிடத்தின் பேரறிவை, அந்த அறிவாற்றலை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். தமிழுக்காகப் பெரியார் என்ன செய்திருக்கிறார் என்று அய்யா ஆசிரியர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். 'தமிழுக்கு என்ன செய்தார் பெரியார்?' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் ஆசிரியர் எழுதியிருக்கிறார். அதையும் கடந்து ஆய்வுக் களத்திலே பெரியாருடைய எழுத்துச் சீர்திருத்தங்கள் இன்றைக்கு தகவல் தொழில்நுட்பம் (Information Technology, IT) என்று சொல்லக்கூடிய, இன்றைக்குத் தேவைப்படும் மாறுதலுக்கு அன்றைக்கே பெரியார் வித்திட்டுப் போயிருக்கிறார், யுனிகோடு என்னும் ஒருங்குறி முறைக்கு! அதை ஆய்வுக் களத்தில் கொண்டு சேர்ப்பது. இதன் மூலம் இதைப் போன்ற நமது திராவிட இயக்க ஆய்வுகளுக்குக் கல்விப் புலத்தில் மதிப்பு என்பது மிகக் கூடுகிறது.

காவிரி ஆறு முழுத் தண்ணீரோடு ஓடி வருகிறது. காவிரி ஆறே முழுமையாக அப்படியே வயலுக்குள் வந்துவிட்டால் என்ன ஆகும்? காவிரி ஓடி வருவதை நம் இலக்கியங்கள் அப்படியே பாடி இருக்கினறன. காவிரி ஆற்றில் வரும் நீர்

கால்வாய், வாய்க்கால் எனப் பிரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு நம் வயலுக்கு வந்து சேர்கிறது. அதே போல பெரிய ஆய்வுகள் என்னதான் அறிஞர்கள் செய்தாலும் அதை மக்களுக்குத் தரும்போது தான் விளைச்சல். மொழியின் பயனே மக்கள் தான். சமூகநீதியின் ஆராய்ச்சிப் பயனே மக்கள் தான். எல்லாமே மக்கள் தான். ஆய்வு என்னும் அந்த ஆற்றிலிருந்து கொண்டு வரும் நீரைச் சின்னச்சின்ன வாய்க்காலின் மூலமாகக் கொண்டு வந்து, மக்கள் என்னும் கழனிக்கு கொண்டு வந்து, வேளாண்மை செய்து விளைச்சலை உண்டாக்க வேண்டும். அதற்குத்தான் இது போன்ற திராவிடப்பொழில் போன்ற ஆய்விதழ் ஆய்வுகள். அறிஞர்கள் எழுதியது ஒரு புறம். அறிஞர்கள் எழுதிய கருத்துகள் அறிஞர்கள் இடத்திலேயே தங்கி விடாமல் மக்களிடத்தில், குழந்தைகளிடத்தில் எல்லோரிடத்திலும் கொண்டு செல்வதற்குத் தான் தோழர் ஜெயா மாறன், தோழர் அமரன் போன்றவர்கள் எல்லாம். இதற்கு முன்னாலும் இதைப் போன்ற ஆய்வுகள் செய்திருக்கிறோம்.

இதுவரை 6 இதழ்கள் வந்திருக்கின்றன. 2021 சனவரி மாதம் தைப்பொங்கல் அன்று இந்த இதழைத் துவங்கினோம். இதுவரை 6 இதழ்களில் 34 ஆராய்ச்சித் தாள்கள் வந்துள்ளன. அந்த ஆராய்ச்சித் தாள்களில் நிறைய சமூகநீதிதான் இருக்கிறது. சமூகநீதி போக, வரலாறு, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கியம்-பிற மொழிகளோடு ஒப்பீடு இதைப் போன்ற துறைகளில் நல்ல ஆய்வுக் கட்டுரைகள் வந்துள்ளன. பெரியாருடைய வாழ்க்கையை வைத்தே வைக்கம் போராட்டம் பற்றிய சிறப்பான கட்டுரை வந்துள்ளது. திராவிட இயக்கமும், கறுப்பின மக்களின் போராட்ட இயக்கமும் அதற்குண்டான ஒப்பீடு, அதைப்போல பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை தமிழ் இலக்கணத்திலிருந்து எப்படி நிரூபிப்பது போன்ற பல தாள்கள் திராவிடப்பொழில் இதழிலே வந்திருக்கின்றன. மேலும் வர இருக்கின்றன. பெரும் பெரும் பேராசிரியர்கள் மட்டுமல்லாது ஆய்வு மாணவர்களிடமிருந்து படித்துக்கொண்டிருக்கும் மாணவ மாணவிகளிடமிருந்து வரும் கட்டுரைகள், அவர்களை ஊக்குவிக்கும் விதமாக வரப்போகின்றன. பெண்களும் நிறைய போட்டி போட்டுக்கொண்டு எழுதுகிறார்கள். மகிழ்ச்சியாக இருக்கிறது.

இது ஆராய்ச்சிக் களமாக இருந்தாலும், இந்த ஆராய்ச்சியிலும் சமூகநீதி செய்வோம் என்னும் உயர்ந்த குறிக்கோளுடன் தான் ,இந்தத் திராவிடப்பொழில் ஆய்விதழை ஆசிரியர் அவர்கள் இதன் நோக்கமாக வைத்துச் செலுத்திக்கொண்டிருக்கிறார். ஒரு கப்பலுடைய கேப்டன், கேப்டனுக்கு தமிழில் வலவன் என்ற சொல், அந்த வலவன் போல அய்யா ஆசிரியர் வீரமணி அவர்கள் இயங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது கூட நீட் தேர்வை எதிர்த்துக் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார். பாரிசில் என்னோடு வேலை பார்க்கும் Nathanael de Ménochet என்னும் பேராசிரியர். நானும் அவரும் நண்பர்கள். அவருக்கு 85 வயது. 'எப்படி இவரால் (ஆசிரியர் வீரமணியால்) இவ்வளவு பயணிக்க முடிகிறது?' என்று கேட்டார். அந்த அளவுக்கு வியந்து பிற நாட்டு அறிஞர்களும் வியந்து நமது முயற்சிகளைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல தளங்களிலும் இதை முன்னெடுத்துச் செல்வோம் என்று சொல்லி இரண்டு கட்டுரைகளை - நான் சொன்னதைப் போல ஆற்றிலிருந்து கழனிக்குக் கொண்டு

செல்லும் பணியை - தோழர் ஜெயாமாறன் அவர்களும் அமரன் அவர்களும் செய்ய இருக்கின்றார்கள். அவர்களுக்கு வாழ்த்துகள்'' எனச் சொல்லி தன் உரையை நிறைவு செய்தார்.

தோழர் சுதாகர் :

"ஜெயா மாறன் ஒரு சிறந்த பேச்சாளர். மதுரையில் பிறந்து வளர்ந்து இப்போது இங்கு அமெரிக்காவில் அட்லாண்டாவில் வசிக்கிறார். தமிழ் ஆசிரியராக, பேச்சாளராக, எழுத்தாளராக, நாடகக் கலைஞராகப் பல முயற்சிகளைச் செய்து கொண்டிருப்பவர். அதுபோல சிறந்த நடிக்கைக்கான 'தமிழன்பன் 80 விருதை'யும் பெற்றிருப்பவர். அமெரிக்க அளவிலான பேச்சுப்போட்டியில் 'ஞான பாரதி 'விருது வென்றவர்," என்று ஜெயாமாறன் அவர்களை அறிமுகப்படுத்தி நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் சுதாகர் அழைத்தார்.

தோழர் ஜெயா மாறன் :

''பௌத்தம் எழுச்சியும் வீழ்ச்சியும் ஒரு வரலாற்றுப் பார்வை என்னும் இந்தக் கட்டுரை எனக்கு திகைப்பைத் தந்தது, நிறைய புதிய செய்திகளைக் கொடுத்து வியப்பைத் தந்தது. புத்தருக்கு முன்னால் இருந்த வேதசமய எதிர்ப்பு இயக்கங்களை இந்தக் கட்டுரை பதிவு செய்கிறது. வேதம், வர்ணம், ஜாதி, பலியிடுதல் போன்றவற்றை எல்லாம் எதிர்த்து எப்படி புத்தர் ஒரு புதிய நெறியைக் கொடுத்தார் என்பதை இக்கட்டுரை பேசுகிறது. மதம் என்னும் அமைப்பு ஆதரிக்கின்ற எதையும் புத்த நெறி ஆதரிக்கவில்லை. கடவுளை, மதத்தை, ஆன்மா நிலையானது என்பதை எல்லாம் மறுத்தது பௌத்தம். பௌத்தம் எப்படித் தோன்றியது, அது எப்படி அதனுடைய மேன்மையான கருத்துகளால் பரவியது, அது எப்படி அசோகர் காலத்தில் அரச மதம் ஆனது, யாகங்கள் எப்படித் தடை செய்யப்பட்டன, எப்படி உயிர்ப் பலி நிறுத்தப்பட்டது, எப்படிச் சமூகம் சமத்துவமானது போன்ற பல செய்திகள் இந்தக் கட்டுரையில் சுட்டப்படுகின்றன. பார்ப்பனர்களும் உழைப்பவர்களில் ஒருவராக ஆக்கப்பட்டனர் அக்காலகட்டத்தில் என்ற வரலாற்றுச் செய்தியும் இடம் பெற்றுள்ளது.

"பார்ப்பனீய ஆதிக்கத்தாலும், கட்டுக்கதைகளாலும் சடங்குகளாலும், வர்ணாசிரமத்தாலும், கர்ம விதியாலும் அழுத்தப்பட்டு துயரத்தில் மூழ்கிக் கிடந்த மக்கள் நம்மைக் காக்க ஒரு தேவதூதர் வரமாட்டாரா? என்று ஏங்கிக் கிடந்த போது அவர் வந்தார். எப்படி வந்தார். ஒன்றும் தெரியாமல் வளர்ந்து வாழ்ந்து சாகப் போகும் குதிரைக்கு மோட்சம் தருகின்ற பிராமணர்களே, எல்லாம் தெரிந்த பிராமணனாகிய நீங்கள் மோட்சம் பெறவேண்டாமா? அந்த அக்னி குண்டத்தில் உங்களையும் தூக்கிப்போட்டால் உங்களுக்கும் மோட்சம் கிட்டும்தானே?" என்று புத்தர் கூறியதைக் குறிப்பிட்டு, புத்தர் எப்படிப்பட்ட நிலையில், பார்ப்பனீயத்திற்கு எதிராக வந்தார் என்பதையும், எப்படி அவர் தனது பௌத்த நெறியை ஒழுங்கமைத்தார் என்பதையும், புத்தருக்குப் பின் பௌத்தம் 18 பிரிவுகளாக பிரிந்ததையும், அதனை ஊடுருவி நாகார்ஜுனர் மூலமாகப் பார்ப்பனீயம் எப்படி மடை மாற்றியது என்பதையும், இப்போது இருக்கும் பௌத்தம் உண்மையான பௌத்தமா, இல்லை என்பதையும், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் புத்த நெறியைத் தழுவுகிறேன் என்று 6 இலட்சம் மக்களோடு மாறியதையும், பார்ப்பனீயம் திட்டமிட்டு ஊடுருவி, புத்தரை விஷ்ணுவின் 9-வது

அவதாரம் என்று சொன்னதையும், எப்படி பல்வேறு நாடுகளில் பரவிய பௌத்தம் திருந்திப் போய் இருக்கிறது என்பதையும் அடுக்கடுக்கான ஆதாரங்களோடு எழுத்தாளர் மு.சங்கையா, 12 புத்தகங்களின் துணையோடு இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார்'' என்று குறிப்பிட்டார். எழுத்தாளர் மு.சங்கையா அவர்களைப் பாராட்டி, கட்டுரையை முழுவதுமாக உள்வாங்கி, அதில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு கருத்தையும் எடுத்து, விவரித்து மிகச் சிறப்பாக தோழர் ஜெயா மாறன் அவர்கள் கட்டுரையினை ஆய்வு செய்தார்கள்.

எழுத்தாளர் மு.சங்கையா:

''முதலில் திராவிடப்பொழில் ஆசிரியர் குழுவிற்கு என் நன்றியைச் சொல்ல வேண்டும். நான் எதைப்பற்றி எழுதலாம் என்று நினைத்து தோழர் நேருவிடம் பேசியபோது நீங்கள் பௌத்தம் பற்றி எழுதுங்களேன் என்றார். அவர் கொடுத்த புள்ளியில் இருந்து தான் இந்தக் கட்டுரை பிறந்தது. எழுதி முடித்த பிறகு கூட, இன்னும் பௌத்தம் பற்றி ஏராளமான தகவல்கள், தரவுகள் இருக்கின்றன. நான் முழுமை பெற்றதாக நினைக்கவில்லை. ஏனென்றால் பௌத்தம் பற்றிப் பேசவேண்டிய கால கட்டம் இது. இந்துத்துவாவிற்கு எதிராக முதன் முதலில் போர்தொடுத்த, எதிர்த்த ஒரு மதத்தை இன்றைய காலகட்டத்தில் வலிமையாகச் சொல்லவேண்டும் என்று நான் நினைக்கின்றேன். இப்போது இந்தக் கட்டுரையை தோழர் ஜெயா மாறன் அவர்கள் பேசியதற்கு அப்புறம் அந்தக் கட்டுரைக்கு உயிர் வந்தது மாதிரி இருக்கின்றது. உண்மையிலேயே ஒரு *Script* எழுதிவிட்டு அதற்கு ஒரு *Drama* எழுதினால், அந்த *Script*க்கு உயிர் வந்தது மாதிரி இருக்கும். அது மாதிரி இந்தக் கட்டுரையை அவர்கள் மதிப்புரை வழங்கிய முறை, அவர்கள் பேசிய தமிழ், அந்தத் தமிழின் உச்சரிப்பு, உண்மையிலேயே இந்தக் கட்டுரை உயிர்பெற்றது போல இருக்கிறது. மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. அவரை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. நான் இதுவரை பல மதிப்புரைகளைக் கேட்டிருக்கிறேன். இப்படி ஒரு எழுச்சிகரமான உரையை, எது எது முக்கியம் என்று முக்கியமான கருத்துகளை மிகக் கூர்மையாக எடுத்து அவர்கள் சொன்ன விதம் மிக மகிழ்ச்சியாக இருந்தது. பெருமையாக இருந்தது. தோழர் ஜெயா மாறன் அவர்களுக்கு நன்றியும் வாழ்த்துகளும், பாராட்டுகளும்'' என்று உரையாற்றினார்.

தோழர் சுதாகர்:

அடுத்ததாக *'Humanism and Thiruvalluvar"* என்னும் கட்டுரை. இதனை எழுதியவர் அமெரிக்காவில் இருக்கும் முனைவர் இர. பிரபாகரன் அவர்கள். இந்த ஆய்வினை வழங்கப் போகிறவர் தோழர் அமரன். தோழர் அமரன் அவர்கள் மிகவும் இளைஞர். மிகச் சிறந்த பேச்சாளர். தொடர்ச்சியாக ஈழப்பி ரச்சனை, நீட் தேர்வு தொடர்பான பிரச்சனை போன்றவற்றிற்குத் தொடர்ந்து குரல் கொடுப்பவர். *FeTNA*-வில் *Youth Association Secretary*யாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

தோழர் அமரன்:

''மனித நேயம் என்றால் என்ன? மனித நேயர்கள் யார் என்பதற்கான விளக்கத்தைக் கொடுத்துள்ளார் திருவள்ளுவர். மத நம்பிக்கைகளை விட ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் மனித நேயர்கள். அதனால் தான் அவர்கள் நாத்திகர்களாக அல்லது *Agnostic*களாக இருக்கிறார்கள். வரலாற்றில் 2500

ஆண்டுகளுக்கு முந்தைய மனித நேயர் புத்தர். அதற்கு அடுத்ததாக கன்பூசியஸ், சாக்ரடீஸ் போன்றவர்கள் புகழ்பெற்ற மனித நேயர்கள், அதைப் போல 2000 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் பிறந்து வாழ்ந்த மனித நேயர் திருவள்ளுவர். ஒவ்வொரு திருக்குறளையும் 7 சொற்களில், இரண்டு அடிகளில் பாடியவர் திருவள்ளுவர். திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல். உலகம் முழுமையும் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படும் நூல் திருக்குறள். திருக்குறளில் இருக்கும் அத்தனை குறட்பாக்களும் மனித நேய அடிப்படையில் அமைந்தவை. உலகில் மனிதர்கள் இருக்கும் வரை மனித நேயம் தேவைப்படும்.'' என்று குறிப்பிட்டு முனைவர் .பிரபாகரன் அவர்களின் ஆங்கிலக் கட்டுரையை ஆங்கிலத்திலேயே உரையாற்றி விளக்கம் கொடுத்தார்.

முனைவர் இர. பிரபாகரன் அவர்கள்:

''திராவிடப்பொழில் இதழை உருவாக்கிய டாக்டர் சோம. இளங்கோவன், பேரா. கண்ணபிரான் இரவிசங்கர் போன்றவர்களுக்கு முதலில் நன்றி தெரிவிக்க வேண்டும். வள்ளுவர் ஒரு மனித நேயர். திருக்குறளில் இருப்பது எல்லாம் மனித நேயம் தான். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் 'என்று சொன்னவர் வள்ளுவர். 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று சொன்னவர். அன்பும் அருளும் சொன்னவர். நம் உறவினர்களிடத்தில் காட்டுவது அன்பு. அதன் தொடர்ச்சி தான் நட்பு. அதன் முதிர்ச்சி தான் அருள். அதனால் தான் வள்ளலார் சொன்ன 'வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று சொன்னது அன்பின் முதிர்ச்சி தான். அவருடைய தனிப்பட்ட கொள்கை தவிர ஓர் அரசன் எப்படி அரசாள வேண்டும், ஓர் அமைச்சர் எப்படி செயல்படவேண்டும், மேலாண்மையில் இருப்பவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதில் எல்லாம் மறு கருத்திற்கே இடமில்லை. எல்லாவற்றையும் விட அமரன் சொன்னது போல Morality ஒழுக்கம் என்பது அங்குள்ள மனிதர்களாலே, நல்லவர்களாலே சமூகத்திலே தீர்மானிக்கப்படுவது தான் ஒழுக்கம். கடவுளால் ஒழுக்கம் கொடுக்கப்பட்டது என்று சொல்வது தவறு. எந்த மதத்தாலும் ஒழுக்கத்தை நிர்ணயிக்க முடியாது. மனிதர்கள் புத்தரைக் கடவுளாக்கியது போல, வள்ளுவரையும் கடவுளாக்க முயற்சிக்கிறார்கள். மனிதர்கள், மனிதன் வள்ளுவரின் குறள்களைப் படிக்கவேண்டும். அதனைப் பின்பற்ற வேண்டும். அதன்படி வாழவேண்டும். இந்தக் கட்டுரைகள் எல்லாம் அதற்காக எழுதப்பட்டவையே. இந்தக் கட்டுரையை முழுமையாகப் படித்து, புரிந்துகொண்டு மிகச் சிறப்பாக பேசிய அமரன் அவர்களுக்கு வாழ்த்துகள். நன்றி.'' என்று முடித்தார்.

நிகழ்வில் திராவிடப்பொழில் ஆசிரியர் சிங்கப்பூர் பேரா. சுப. திண்ணப்பன் அவர்கள் ''இது மிக நல்ல முயற்சி. ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவது ஒரு புறம். அது வெளிவந்த பின் அதனை இம்மாதிரி ஆய்வு செய்வது பாராட்டத்தக்கது. 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்' போல, கட்டுரை ஆசிரியர்கள் எவ்வளவு தூரம் மகிழ்ந்தார்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டு. இதைப்போல முதுகலை ஆய்வாளர்கள் என்ன நினைக்கிறார்கள் திராவிடப்பொழில் ஆய்வுக் கட்டுரைகளைப் பற்றி? என்று

அறிந்து கொள்வது இரண்டு வகையில் நன்மை, பதிப்பாசிரியர் குழுவிற்கும் இந்த இதழை எப்படி எல்லாம் மேம்படுத்தலாம் என்பதற்கும் ஓர் ஆலோசனையாக அமையும். பதிப்பாசிரியர் குழுவிற்கும் ஒரு மன நிறைவு ஏற்படுகிறது. கட்டுரை ஆசிரியர்களுக்கு ஒரு மன நிறைவு ஏற்படுகிறது. இது தொடர்ந்து நடக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.'' என்று குறிப்பிட்டார்.

தமிழ் மாமணி திருவள்ளுவன் :

''உண்மையிலேயே மிகச்சிறந்த எழிலார்ந்த ஒரு திறனாய்வுக் கூட்டம் இது. திராவிடப்பொழிலை இந்த அளவிற்கு ஆய்வாளர்கள், அறிஞர்கள் கூடி இப்படித் திறனாய்வு செய்வது மிகப்பெரும் சாதனை. பௌத்த்த்தைப் பற்றி அம்மா ஜெயா மாறன் அவர்கள் பேசியது மிகச்சிறந்த உரை. இது இந்தக் காலத்திற்கு எவ்வளவு தேவை என்பதை நாம் உணர்கிறோம். டாக்டர் பிரபாகரன் அவர்களுடைய திருக்குறள் பற்றிய அறிவு மிகச்சிறப்பானது. நிறைய திருக்குறள் பற்றி எழுதியுள்ளார். அவருடைய கட்டுரையை மிகச்சிறப்பாக அமரன் ஆய்வு செய்தார். உலகத்து அறிஞர்களை எல்லாம் உள்ளே கொண்டு வந்து இணைத்து வள்ளுவத்தின் பெருமை சொன்னார். வாழ்த்துகளும் பாராட்டுகளும்'' என்று குறிப்பிட்டார்.

பேரா.ப.காளிமுத்து :

''திறனாய்வாளர்களுக்கு உளங்கனிந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும். இதனை ஒரு நல்வாய்ப்பாக கருதுகிறேன். நமது ஏடுகள் வளர்ச்சி பெற வேண்டும். இன்னும் நிறைய ஆய்வாளர்கள் எழுதவேண்டும். தோழர் சங்கையா அவர்கள் தொடர்ந்து எழுதவேண்டும். அதைப் போல டாக்டர் பிரபாகரன் அவர்கள் கட்டுரையைப் படிக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். நான் படிக்கிற காலத்தில் எல்லாம் இப்படிப்பட்ட பத்திரிக்கைகள் வரவில்லையே என்று ஏங்கித் தவித்த காலம் எல்லாம் உண்டு. சென்னைப் பல்கலைக்கழகத்திலே கோதண்டபாணி என்று ஒரு வழக்கறிஞர் திருக்குறளைப் பற்றி மிக அருமையாகப் பேசினார். சென்ற கட்டுரையில் அவரைப் பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். இன்றும் பலர் இருக்கிறார்கள். அவர்களை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தக் கட்டுரையின் ஆய்வாளர்களுக்கும், திறனாய்வாளர்களுக்கும் நெஞ்சார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும்'' என்று உரையாற்றினார்.

மற்றும் தோழர் இராஜமாணிக்கம், திராவிடப்பொழில் ஆசிரியர்கள் முனைவர் வா.நேரு, பேரா.நம்.சீனிவாசன், மற்றும் டாக்டர் சரோஜா இளங்கோவன், அருள் இளமாறன் ஆகியோர் கருத்து தெரிவித்தனர். நிகழ்வின் முடிவில் தோழர் சிகாகோ. இரவிக்குமார் அவர்கள் நன்றியுரையாற்றி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

■

Social Endosmosis is Social Justice.

"An ideal society should be mobile, should be full of channels for conveying a change taking place in one part to other parts.

In an ideal society there should be many interests consciously communicated and shared. There should be varied and free points of contact with other modes of association. In other words, there should be social endosmosis.

This is fraternity, which is only another name for democracy.

Democracy is not merely a form of Government. It is primarily a mode of associated living, of conjoint communicated experience. It is essentially an attitude of respect and reverence towards fellowmen".

(Annihilation of Caste)

Prof. Dr. **B.R. AMBEDKAR** *, M.A., M.Sc., Ph.D., D.Sc.*

Hon'ble Minister (1st Minister) of Law and Justice, Union Of India (1947-51).

Minister of Labour in Viceroy's Executive Council (1942-46).

Chairman of the Constitution Drafting Committee - Constituent Assembly of India (1946-50).

Member of Parliament - Rajya Sabha for Bombay State (1952-56).

I belong to the Dravidian stock

"I claim Sir, to come from a country, a part in India now, but which I think, is of a different stock, not necessarily antagonistic. I belong to the Dravidian stock.

I am proud to call myself a Dravidian. That does not mean that I am against a Bengali or a Maharashtrian or a Gujarati. As Robert Burns has stated, "A man is a man for all that".

I say that I belong to the Dravidian stock and that is only because I consider that the Dravidians have got something concrete, something distinct, something different to offer to the nation at large".

(maiden speech in the Indian Parliament – Council of States (Rajya Sabha) – Apr 1962)

Dr. C.N. ANNADURAI

Hon'ble Chief Minister of Madras State & Tamil Nadu (subsequently renamed), Union of India (1967-69)

The Indus language is likely to have belonged to the North Dravidian sub-branch represented today by the Brahui, spoken in the mountain valleys and plateaus of Afghanistan and Baluchistan, the core area of the Early Harappan neolithic cultures, and by the Kurukh spoken in North India from Nepal and Madhya Pradesh to Orissa, Bengal and Assam.

The Sanskrit hypothesis, however, is difficult to reconcile chronologically with the date of the Indus civilisation (about the second half of the third millennium B.C.) and antecedent Early Harappan neolithic cultures which were responsible for its creation.

(Deciphering the Indus Script
Originally published in Visible Religion, Vol. 6- A.J. Brill, Leiden, Holland, 1988, pp. 114-135)

Prof. Dr.ASKO PARPOLA

Professor Emeritus, Department of World Cultures, University of Helsinki, Finland.

Notes :

Notes :

Notes :

Notes :

Tamil Literature from Sangam to Modern Period - What does a search of the Tamil Electronic data reveal?

Prof. Dr. **Vasu Renganathan**, University of Pennsylvania, United States

An extensive electronic database of Tamil texts from Sangam to Modern Period, along with a powerful query tool to search texts from various dimensions is indispensable. This paper attempts to illustrate how such an electronic database for Tamil can be used extensively to study some of the morphological and syntactic behaviors of Tamil from a historical point of view.

Educational Development in the Dravidian Model and Current Issues in Education

S.N. Anbumani

Dravidian Movement has immensely contributed to develop Wholesome Education in Tamil Nadu. The State tops in educational development in the areas of: Access to Education, Infrastructure and other Developmental Schemes, yet lacks in the measurement of the overall learning outcome. This needs to be discussed and addressed, to solve the current problems in the educational system.

செருமானிய மொழிபெயர்ப்பில் திருக்குறள் [கார்ல் கிரவுல் மொழிபெயர்ப்பு].

முனைவர் **க. சுபாஷிணி**, செருமனி

Lutheran priests arrived in Tharangampadi, learnt to read and write Tamil language, and mastered many Tamil literatures and one among them is Thirukkural. This paper deals with the efforts taken in translating Thirukkural in German (Deutsch) language, particularly looking at the efforts of Dr. Karl Graul.

திராவிட இயக்கமும், தமிழ்நாட்டில் அஞ்சல் தொலைதொடர்புத் தொழிற்சங்க இயக்கமும்.

ஆ. செல்லப்பாண்டியன்

உலகத் தொழிற் புரட்சி ஏற்பட்ட பின், இந்தியத் தொழிற்சங்க வரலாறும், குறிப்பாகத் தமிழ்நாட்டில் அதன் வரலாறும், அதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பும், அதிலும் குறிப்பாகத் தொமுச என்னும் தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரலாறும் என்று பல கோணங்களில் விரிவாக ஆய்கிறது இக் கட்டுரை.

சமகாலப் போலிச்செய்திகளின் போக்கு: இலங்கையில் அடையாளங் காணப்பட்டவை மீதான ஓர் ஆய்வு.

வி. விமலாதித்தன், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை

தற்காலத்தில், ஊடகங்கள் அதிகரித்துக் காணப்படும் நிலையில், அவற்றிலிருந்து பரவுகின்ற போலிச்செய்தி எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமை ஒரு பாரிய பிரச்சினையாக நோக்கப்படுகின்றது. இவற்றின் இயல்பு, போக்கு, நோக்கம் முதலானவை, ஆய்வுக்கு உள்ளாக்கப்படவேண்டிய தேவையை ஆய்கிறது இக் கட்டுரை.